டிசம்பர் 02 | 24 பக்கங்கள் | ரூபா 14.00

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்



## மாவீரர் நாள் உரை

## கிழக்கில் தொடரும் வன்செயல்கள்

# மாவீரர் அஞ்சலி

# ஏறாவூரில் தொடரும் அரச பயங்கரவாதம்

## தமிழனாகப் பிறந்ததே இவர்கள் செய்த ஒரே குற்றம்

ஏறாவூர் தமிழ் பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக் கள் மீது பொலிஸார் நடத்திய மிகக்கொடூரமான மோட்டார் தாக்குதலில் ஐந்து பொது மக்கள் பலியாகியிருக்கிறார்கள். 11 பேர் காயமடைந்திருக்கிறார்கள். பல வீடுகள் சேதமடைந்திருக்கின்றன.

ஏறாவூரில் நடந்தது இது முதல் தடவையல்ல. பல தடவைகளில் பொலிஸார் தமிழ் மக்களின் குடிமனைக ளின் மீது மோட்டார் தாக்குதல்களையும், துப்பாக்கி வேட் டுக்களையும் தீர்த்து பல உயிர்களை காவு கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 20 ஆம் திகதி நடந்த சம்பவத்தில் இறந்த ஐவரில் தாய், தந்தை, மகள் என்று மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மற்றைய இருவரும் ஒரு பெண்ணும் அவரது மருமகன் முறையானவரும், கும்பம் வைத்து குத்துவிளக்கேற்றி கந்தசஷ்டி உபவாசம் இருந்த இப் பெண்ணின் வீட்டுக்கூரையை பிய்த்துக்கொண்டு விழுந்த மோட்டார் குண்டினாலேயே அப்பெண்ணும் அவரது மருமகனும் பலியாகியிருக்கிறார்கள்.

குத்துவிளக்கும், கும்பமும் சிதறி இரத்தவெள்ளத்தில் கிடந்த காட்சி பார்த்தவர்களை நெஞ்சுருக வைத்தது. தமிழனாய் பிறந்த குற்றத்தை தவிர வேறு எந்த குற்றமும் இழைக்காத அப்பாவிகள் இவர்கள்.

சுமார் ஒரு மணி நேரமாக ஏறாவூர் பொலிஸார் இத்தாக்குதலை நடத்தினர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பாதிக்கப்படப்



சுலோக அட்டைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள்

போவது அப்பாவிப் பொதுமக்கள், அழியப் போவது மிகவும் வறிய மக்களின் வீடுகள் என்பவற்றைத் தெரிந்து கொண்டே பொலிஸார் இந்தக் கொடூரத்தைப் புரிந்திருக்கிறார்கள் என்று கூறி அந்த பகுதிமக்கள் சீற்றம் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் எத்தகைய தாக்குதலையும் நடத்தாத நிலையில் செங்கலடியிலும், ஏறாவூரிலும் நிலை கொண்டிருக்கும் பொலிஸார் இத்தாக்குதல்களை நடத்தி இருக்கிறார்கள். தாக்குதல் நடத்தி படுகொலைகளை புரிந்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக புலிகளின் தாக்குதலை முறியடித்தார்கள் என்ற பாராட்டும் பதவி உயர்வுகளும் விருதுகளும் பொலிஸாருக்குச் கிடைத்திருக்கலாம்.

விடுதலைப்புலிகள் அந்த பகுதிக்கு வரவும் இல்லை. தாக்குதல் நடத்தவும் இல்லை என்பதே உண்மை என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

### நடந்த சம்பவம் இதுதான்

ஏறாவூரைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் வெளியிடம் ஒன்றிற்கு சென்று விட்டு இரவு எட்டு மணியளவில் தனது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். ஏறாவூர் முஸ்லிம் பகுதி எல்லையில் வைத்து அவரை மறித்த பொலிஸார் பிரதான பாதை மூடப்பட்டிருப்பதாக வும் இனி காலையில் தான் செல்லலாம் எனவும் தெரிவித்தனர். இதனால் செங்கலடியில் உள்ள தனது தமிழ் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்குவதற்காக அவர் காரை திருப்பி சென்றிருக்கிறார்.

கார் ஒன்று பிரதான வீதியில் இருந்து திரும்பி ஒழுங்கை ஒன்றிற்குள் செல்வதைக்கண்ட செங்கலடி பொலிஸால் அத்திசையை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்திருக்கிறார்கள். ''பயந்தவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பது போலவே இச்சம்பவம் நடந்திருக்கிறது.

ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள செங்கலடியில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டவுடன் ஏறாவூர் 4ஆம் 5ஆம் குறிச்சி தமிழ் மக்களின் குடிமனைகளை நோக்கி பொலிஸார் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

தம்மீது புலிகள் தாக்குதல் நடத்த வந்தால் பொதுமக்களுக்கு இதுதான் நடக்கும் என எச்சரிக்கை செய்வது போல பொலிஸார் இப்பாதகத்தை செய்திருக்கிறார்கள் இவ்வூர் பெரியவர் ஒருவர் வேதனையோடு கூறினார்.

பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல பலதடவைகள் இம்மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1990 ஆம் ஆண்டில் படையினரும் ஊர்காவல் படையினரும் ஏறாவூர் முஸ்லிம் பகுதியை சுற்றியிருக்கும் 4ஆம் 5ஆம் குறிச்சி மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் வீடுகளை அழித்தார்கள். அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த இம்மக்களில் வசதியானவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறினர். வேறு இடங்களுக்கு சென்று குடியமர முடியாத ஏழைகள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு வந்து வீடுகளை திருத்தி வாழ்ந்து வருகின்றனர்.

இந்த தமிழ் கிராமத்தை ஊடறுத்து படையினரின் காப்பரண்கள் அமைக்கப்பட்டிருப்பதால் பல குடும்பங்கள் தமது சொந்த வீடுகளில் இன்னமும் மீளக்குடியமர முடியாத நிலையிலேயே உள்ளனர் எஞ்சிய பகுதிகளில் உள்ள மக்களே தமது வீடுகளில் மீளக் குடியமர்ந்திருந்தனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு என கூறுவோரும் இவர்களை குடியமர்த்தும் விடயத்தில் எதுவும் தெரியாதவர்கள் போல கண்மூடி இருந்து வருகின்றனர். மீளக் குடியமர்ந்திருப்பவர் களையும் அங்கிருந்து வெளியேற்றும் சூழ்ச்சியாகவே அப்பாவி மக்களின் குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியான இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் என்று கருத வேண்டியுள்ளது.

ஏறாவூர் முஸ்லிம் பகுதியை சுற்றியிருக்கும் தமிழ் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் மக்கள் தமது சொந்த வீடுகளில் குடியமர இன்னும் அனுமதிக்கப்படவில்லை. 11 வருடங்களாக தமிழ் மக்கள் அகதிமுகாம்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். உடைக்கப்பட்ட வீடுகளில் மண்மூடைகள் அடுக்கப்பட்டு பொலிஸ் காப்பரண்கள் அமைக்கப்பட்டிருந்க்கின்றன.

ஏறாவூரிலிருந்து செங்கலடி வரையிலான பிரதான வீதியில் உள்ள தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் கடந்த 11 வருடங்களாக உடைந்து சிதைந்த நிலையிலேயே உள்ளன. அங்கு வந்து குடியமர்வதற்கோ அல்லது வியாபாரங்களை நடத்துவதற்கோ தமிழ் மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஏறாவூர் முஸ்லிம் மக்களினதும், படையினரதும் பாதுகாப்பு என்ற காரணத்தைக் கூறியே இம் மக்கள் கடந்த 11 வருடங்களுக்கு மேலாக தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப் படவில்லை.

ஏறாவூர் பிரதான வீதியில் தமிழ் பகுதியில் புதிதாக சந்தை ஒன்று பல வருடங்களுக்கு முதல் ஏறாவூர் பற்று பிரதேச சபையால் அமைக்கப்பட்டது. அந்த சந்தையை திறப்பதற்கு படையினர் அனுமதி வழங்கவில்லை. இதன் பின்னணியில் அப்பகுதி அரசியல்வாதி ஒருவரும் இருக்கிறார் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரத்த வெள்ளத்தில் வீட்டுப் பாத்திரங்கள் சிதைந்த நிலையில்



அந்த சந்தையை இயங்க அனுமதித்தால் மீண்டும் தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் வந்து குடியமர்ந்துவிடுவார்கள் என்பதற்காகவே இத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலையில் அமைக்கப்பட்ட சந்தை திறக்கப்படாது இருப்பது போலவே இங்கும் இச்சந்தை திறக்கப்படாதிருப்பதற்கு அரசியல் காரணம் ஒன்று பின்னணியில் இருக்கிறது.

இது பற்றி தமிழ் அரசியல்வாதிகளோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ இதுவரை வாய்திறக்கவில்லை.

இது தேர்தல் காலம் என்பதால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு நான் முந்தி நீ முந்தி என முண்டியடித்துக் கொண்டு வேட்பாளர்கள் சென்றிருக்கிறார்கள். சுமார் 42 வேட்பாளர்கள் அங்கு சென்று துக்கம் விசாரித்திருக்கிறார்கள்.

தானே முதலில் சென்றதாக சில வேட்பாளர்கள் உரிமை கோரி வருகிறார்கள். விழுந்து வெடித்த ஷெல் துண்டு ஒன்றை எடுத்து வந்த வேட்பாளர் ஒருவர் தான் அங்கு சென்றதற்கு சான்றாக அதை பிரசார மேடைகளில் காட்டி வருகிறார்.

பாதிக்கப்பட்ட மக்கள் முன்னரைப்போல அன்றி இம்முறை படையினருக்கு எதிராக கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள்.

ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் அமைந்திருக்கும் பொலிஸ் காவலரணை உடனடியாக அகற்ற வேண்டும் எனக் கோரி செங்கலடி பிரதேச செயலகத்துக்கு முன்னால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

இது தவிர பலியான பொதுமக்களின் சடலங்களை அடக்கம் செய்த தினங்களில் பூதவுடல்களை தாங்கியவாறு படையினரின் கொடுஞ்செயலைக் கண்டித்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இறுதிச் சடங்கிற்காக சடலங்களை மயானத்துக்கு கொண்டு செல்வதற்கு முன்னர் ஏறாவூர் 4 ஆம் குறிச்சிக்கும் 5 ஆம் குறிச்சிக்கும் இடைப்பட்ட பிரதான வீதிக்கு குறுக்கே சடலங்களை வைத்துக் கொண்டு வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஊரவர்கள் உறவினர்கள் தமக்கு நடந்து வரும் கொடுமைகளைச் சொல்லிக் கதறி அழுதார்கள். இளைஞர்கள் ஆத்திரம் கொண்டு கோபாவேசத்தோடு தமது எதிர்ப்பைக் காட்டினர்.

இத்தகைய சம்பவங்களால் மக்கள் படையினருக்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள் என்பது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தையும் இது அதிகரிக்கும் என்ற உண்மை யை அரசோ படையினரோ உணர்வதாக இல்லை.

— துவாரகன்

## வாசகர் இதயம் பேசுகிறது

கவிதைச் சமரை சொல்லாமல் கொள்ளாமல் இடை நிறுத்தியது கண்டிக்கத்தக்கது. சமரைத் தொடர எதிர்பார்க்கிறோம். இன்னும் கவிதைகள் சூடாக வரவேண்டும். தெருக் கூத்தன் பாடல்கள் திறம்!

பித்தன் பதில்கள் சித்தம் குளிர வைப்பன.

பு. ஜீவகுமாரன், கொழும்பு—08.

என்றுமே நீ மங்காமல் ஒளி தரவேண்டுமென்பதே என் பிரார்த்தனை. நாட்டில் நடக் கும் கொடூரங்களையும், அனர்த்தங்களையும் எமக்கு தெளிவாக எடுத்துக் காட்டி விடுகி றாய். மலையகக் கண்ணோட்டம், கவிதைச் சமர் போன்றன பிரமாதம். தொடர்ந்து உன் சேவை தடையில்லாமல் பயணிக்க வாழ்த்துகிறேன்.

கொக்காகலையூர், கி. அருள்ராஜ், மடுல்சீமை.

உலகமே ஆர்ப்பாட்ட மயம் என்ற முற்பக்க தலைப்புப் படம் பிரமாதம். தேர்தலில் கூட்டணிகள் பற்றிய செய்திகள் படு ஜோர். இன்னும் அரசியல் செய்திகளை முந்திக் கொண்டு தருவதில் உன்னைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நாளிதழாகவும் மலராகவும் உன் சேவை செவ்வனே தொடர வாழ்த்துகள்.

ஜே. எம். பாரீஸ், தெல்தெனிய.

உன் ஆக்கங்கள் அனைத்தும் மிகமிக அற்புதம். வன்னியில் அதிசிறந்த தகவல்கள் தரும் பத்திரிகைகளில் நீதான் முதன்மை வகிக்கின்றாய். உனது ஆக்கங்களில் கவிதைப் புனல், இளம் சுடர், பித்தன் பதில்கள், மருத்துவ ஆலோசனைப் பகுதி, பெண், சிறுகதைகள், தேரடி அரட்டை, கலையமுதம், ஆசிரியர் தலையங்கம். முன் அட்டைப்பகுதி, மிஸ்டர் க்றோ போன்றவை சுவையாய் இருக்கின்றன.

தெ. துஷ்யந்தன், முரசுமோட்டை.

அன்பின் சுடர் ஒளியே! வளரும் செடியிலும் வல்லமையான செடிபோல் மலரும் மலரிலும் வாசனை மலர்போல் காய்க்கும் காயிலும் கண்கவர் காய் போல் காகிதப் பூசூடிய மங்கை போல் தமிழினத்தின் தாமரை போல் நீ ஒளிரீந்திட வாழ்த்துக்கள்.

சு. நாகராசா (நீலன்), வேணாவில்.

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும். இனிமையானவை. அதிலும் ஓயாத அலைகள் வெளிவராத தகவல்கள் பகுதி சிறப்பாக உள்ளது. தமிழீழத்தின் வெற்றிச் செய்தியை வெளியிட்டு வரும் சுடர் ஒளிக்கு என் சார்பாகவும் தமிழீழ மக்கள் சார்பாகவும் வாழ்த்துக்கள்.

பி.வேணு, புதுக்குடியிருப்பு.

நீ தாங்கி வரும் பித்தன் பதில்கள், இளஞ்சுடர், சிறுகதை, கவிதைகள் அனைத்தும் நன்று. எத்தனை இடர் வந்தாலும் உன் பணி தொடர வேண்டும்.

புவிதாஸன், நவஜீவனம்.

குறைந்த காலத்தில் நிறைவான சேவை தரும் சுடர் ஒளியே ஒவ்வொரு வாரமும் உன் வரவை வழி மேல் விழி வைத்து பார்த்துக் கொண்டிருப்பேன். உன் சேவை தொடர வாழ்த்து கிறேன்.




சுரேஷ், முரசுமோட்டை.

# தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?

## மட்டக்களப்பில் புலிகள் அறிக்கை

எதிர்வரும் தேர்தலில் தமது அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு. அதை நாம் தடை செய்யமாட்டோம்.

விடுதலைப்புலிகளின் மட்டு — அம்பாறை அரசியல் பிரிவு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே எனும் தலைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியாகும். தமிழப் பேசும் மக்களுக்காகவே எமது போராட்டமும் தொடர்கிறது.

ஸ்ரீலங்கா அரச படையின் ஆக்கிரமிப்பிலிருந்து எமது தாயகம் மீட்கப்படும்வரை எமது போராட்டம் தொடரும். இந்த நிலையில்தான் எமது மக்கள் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இக்காலகட்டத்தில் தமிழக்கட்சிகள் ஒன்றிணைந்திருப்பது எமது விடுதலைப் போராட்டத்துக்கு மேலும் ஓர் உந்து சக்தியாக இருக்குமென நம்புகின்றோம். என்றாலும் தமிழ்ப் பேசும் சமூகங்களின் ஒற்றுமையை நாம் வலியுறுத்துகின்றோம்.

நாம் நாடாளுமன்ற ஆசனங்களுக்கு ஒருபோதும் ஆசைப்படுவதில்லை. எமது இயக்கத்தின் பேரால் எவரும் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். எந்தவொரு அரசியல் கட்சியையோ தனி நபரையோ ஆதரிக்குமாறு அல்லது எதிர்க்குமாறு நாம் கூறப்போவதும் இல்லை. எம்மைப் பொறுத்தவரை நாம் தமிழீழத்துக்காகவே போராடுகின்றோம்.

ஸ்ரீலங்கா அரசைப் பற்றியோ நாடாளுமன்றப் பிரதிநிதித்தவம் பற்றியோ நாம் கவலைப்படுவதில்லை. எமது அங்கீகாரத்துடன் தமிழ்க்கட்சிகள் போட்டியிடுவதாகக் கூறுவது விந்தையானது. இந்த வேட்பாளர்கள் எங்களின் சார்பானவர்கள் என தம்மை இனங்காட்டிக் கொள்வதும் விசனத்துக்குரியது.

சில அரசியல்கட்சிகள் மாற்றுக்கட்சி வேட்பாளர்களை பயமுறுத்துவதற்காக எல்லாளன், குளகோட்டான், பண்டார வன்னியன், சங்கிலியின் படை ஆகிய புனைப் பெயர்களில் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது குறித்து நாம் எச்சரிக்கின்றோம்.

இப்பிரசுரங்களுக்கும் எமது இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை மக்களுக்குத் தெளிவாக அறியத்தருகின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொ.ஐ.முன்னணி யுத்தத்தை வியாபாரமாகவே நடத்தியது

பண்டாரவளை, டிச.1

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் வடக்கு கிழக்கு யுத்தத்தை வியாபாரமாகவே நடத்தி வந்தது. ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விருப்பம் இருக்கவில்லை. எதிர்வரும் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தோல்வியே கிட்டும்.

இப்படிக் கூறினார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளருமான ஜய சுந்தர விஜேகோன்.

வெள்ளவாய தேர்தல் தொகுதியைச் சேர்ந்த புத்தன என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் பேசுகையில், கட்சி மாறியவர்கள் பணம் பெற்றுக்கொண்டு கட்சி மாறினார்கள் என கூறுகிறார்கள். இதில் உண்மை இல்லை. பொதுஜன ஐக்கிய முன் னணி அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெறுப்புற்றதனாலேயே நாங்கள் கட்சி மாறினோம்.

1988, 1989ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி. நாட்டு மக்களுக்குச் செய்த அநியாயங்களை மக்கள் மறந்துவிடவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து அமைச்சர்களாகலாம் என ஜே.வி.பியினர் மனப்பால் குடித்து வருகிறார்கள். மீண்டும் ஒரு நல்லிணக்க அரசாங்கம் அமைக்க வாக்காளர்கள் இடமளிக்கமாட்டார்கள்.

ஸ்திரமான அரசாங்கம் அமைக்க ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் வாக்களிக்க தயாராகவுள்ளார்கள். டிசம்பர் 6ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று அமைச்சரவை அமைப்பார். இதனை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது — என்றார்.

# தந்தை செல்வாவுக்கு மாசு கற்பிக்காதீர்

எமது நாடு எத்தனையோ அரசியல் வாதிகளைக் கண்டுள்ளது. ஆனால் அனைத்துத் தமிழர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழர்களாகிய அனைவரினதும் உள்ளங்களில் குடி கொண்டிருக்கும் அமரர் தந்தை செல்வாவை எவரும் இலகுவில் மறந்துவிடு முடியாது. மறந் தால் தமிழ்ச் சமுதாயமே அழிந்துவிடும்.

இப்படி திருகோணமலை மாவட்ட ஈ.பி.டி.பி. முதன்மை வேட்பாளரும் மாவட்ட அமைப்பாளருமான புஷ்பராசா தெரிவித்தார்.

திருமலை நாகராசா வளவு மக்கள் மத்தியில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

தந்தை செல்வாவின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். இதை எதிர்காலச் சந்ததியி னரும் படித்து பயனடைய வேண்டுமே தவிர தவறாக வழிநடத்தப்பட்டுவிடக் கூடாது.

இன்று புறப்பட்டிருக்கும் தமிழர் கூட்டமைப்பினர் சுவரொட்டிகள் மூலம் எம்மக்களுக்கு தந்தை செல்வாவை அறிமுகம் செய்து வாக்குக் கேட்கின்றனர். இவர்கள் யார்? கொழும்பிலும் வெளிநாடுகளிலும் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு தேர்தல் அறிவிப்பை அடுத்து இங்கு வந்தவர்களே இவர்கள்.

தந்தை செல்வா சொந்த மண்ணில் நின்று கொண்டு மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் குரல் கொடுத்து சொந்த மண்ணிலேயே தன்னை மாய்த்துக்கொண்டவர். இத்தியாகியை தமிழ் மக்களாகிய எமக்கு அறிமுகம் செய்து வைப்பதற்கு யார் இவர்கள்? எனவே சந்தர்ப்பவாத கூட்டமைப்பினரை மக்களாகிய நீங்கள் இனம் கண்டுகொள்ளவேண்டியதே தந்தை செல்வாவிற்கு மக்களாகிய நாங்கள் கொடுக்கும் கௌரவம் — என்றார்.

# தின்பாருக்கு தேன் கொடுப்பவராக முஸ்லிம்கள் இருக்கக்கூடாது

## ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ் அறிக்கை

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் தின் பாருக்கு தேன் எடுத்துக் கொடுப்பவர்களாக இருக்காமல் முஸ்லிம் சமுதாயத்தின் தன்மான உணர்வை யும் அரசியல் அபிலாஷைகளையும் நிறைவு செய்ய முன்வரவேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எஸ்.சுபைர் மற்றும் பொதுச் செயலாளர் எம்.ஏ.சீ.ஏ.இம்தியாஸ் ஆகியோரால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதித்துவத்தை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

தனிப்பட்ட குரோதம் மனக் கசப்பு மற்றும் வெறுப்புக் காரணமாக வேட்பாளர்களுக்கு வாக்களிக்காவிட்டாலும் முஸ்லிம்கள் அனைவரும் ஏனைய கட்சிகளுக்கு வாக்களித்து தின்பாருக்கு தேனெடுத்துக் கொடுப்பவர்களாக இருக்காமல் மரச் சின்னத்தக்கு வாக்களித்து புதிய தலைவர் ரவூப் ஹக்கீமின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பிரிவினைகள், பிரதேச வேறுபாடுகளைப் பாராது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

கட்சியின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே. கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

ரவூப் ஹக்கீம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கும் தனிப்பட்ட நபர்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

முஸ்லிம்களின் தன்மான உணர்வுகளையும் கட்சியின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனை விளங்காமல் சிலர் அவதூறான முறையில் பேசிவருவதை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு கூறுபவர்கள் தமது சுய அரசியல் நடவடிக்கைக்காகவே கூறுகின்றனர். அவர்களுக்குப் பதிலடி கொடுத்து மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்போம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்னிக்கு உணவுப் பொருள்

கொழும்பு, டிச.1

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலுள்ள கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் லொறிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதி விவசாயிகளுக்கு உதவும் முகமாக 21 லொறிகளில் உர வகைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மலை நாட்டில் எம்.ஜி.ஆரின் புரட்சிக் கீதத்துடன் பிரசாரம்

அப்புத்தனை, டிச.1

பெருந்தோட்டங்களிலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன.

வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் எம்.ஜி.ஆரின் புரட்சிப் பாடல்களோடும் பாரதிதாசனின் புதியதோர் உலகம் செய்வோம் என்ற பாடலோடும் வாகனங்களில் வலம் வருகின்றனர்.

எல்லாவற்றையும் விட பெரும்பான்மை இன அரசியல் வாதிகளது நிறம் நிறமான தமிழ், சிங்கள போஸ்டர்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

அதே சமயம் பெரும்பான்மை இன அரசியல்வாதிகளது பரணி பாடுவதில் சில தொழிற்சங்கப் பிரமுகர்களும் முன் நிற்கின்றனர்.

சில வேட்பாளர்களினால் தோட்டங்களுக்கு அரிசி மா கூட அன்பளிப் பாக வழங்கப்படுகின்றது.

அதேவேளை அப்புத்தனையில் உள்ள முக்கிய தோட்டமொன்றில் பெரும்பான்மை இன அரசியல்வாதி ஒருவரின் மனைவி கைக்குட்டை, அப்பியாசக் கொப்பிகள், போல் பாயின்ட் பேனாக்கள் என்பனவற்றையும் வழங்கி வருகின்றார்.

தோட்டங்களில் தொழில்புரியும் சிலர் தமது தொழிலையும் மறந்து வேட்பாளர்களின் பின்னால் திரிகின்றனர்.

இவர்களுக்கு உணவு மற்றும் மதுவோடு 200 ரூபா முதல் 500 ரூபா வரை நாளொன்றுக்கு பணம் வழங்கப்படுகிறது.

# தெற்கிலும் ஒரு யாழ்ப்பாணம்

ஒரு காலத்தில் அமைதியாக இருந்த அம்பாந்தோட்டைப் பகுதி இன்று யாழ்ப்பாணம் போன்று காட்சியளிக்கிறது என்கிறார் அம்மாவட்ட ஐ.தே.க வேட்பாளர் சஜித் பிரேமதாச.

வெளி உலகுக்கு அப்பாவியாகக் காட்சியளித்துக் கொண்டு உள்ளுக்குள் கொடூர மனிதனாகச் செயற்படும் மஹிந்த ராஜபக்ஷவின் வன்முறைகள் காரணமாகவே இன்று இந்த நிலைமை தோன்றியிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அம்பாந்தோட்டையில் எங்கு பார்த்தாலும் வன்முறையும் அடாவடித்தனமும் நிலவுகின்றன. மக்கள் மத்தியில் பீதி காணப்படுகிறது.

எனது இல்லம் அமைந்துள்ள வீதியில் இதுவரை இயங்கி வந்த இராணுவச் சோதனைச் சாவடியும் அவசரமாக அகற்றப்பட்டுவிட்டது. இந்த நிலையில் என்னால் வெளியில் இறங்கி நடமாட முடியாதுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், டிச.2

நல்லூர் ஸ்ரீகைலாசபிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் ஷஷ்டியை ஒட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணி முதல் மகாகும்பாபிஷேகம், சங்காபிஷேகம் இடம்பெற்று 11 மணிக்கு பிள்ளையார் கதைப்படிப்பு நடைபெறும்.

# தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாம்

## பத்மநாதன் கோரிக்கை

கொழும்பு, டிச.1

வடக்கு — கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் தேசியக் கட்சிகளுக்கே இதுவரை வாக்களித்தனர். அந்த மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த கட்சிகள் அந்த மக்களுக்கு விரோதமாகவே செயற்பட்டுவந்தன. இந்த நிலையை மாற்றி தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் செ.பத்மநாதன் இப்படிக் கூறினார்.

கொழும்பு கிராண்பாஸில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

நாட்டின் பல பகுதிகளிலும் கணிசமான அளவு தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் தேசியக் கட்சிகளுக்கே இதுவரை வாக்களித்து வந்தார்கள். இதனால் அந்த மக்கள் எந்தவித பலனையும் பெற வில்லை. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அந்த மக்களுக்குஎதிராகவே அந்தக்கட்சிகள் செயற்பட்டன.

இம்முறை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட கூட்டமைப்புக்கு வாக்களிக்க தமிழ் மக்கள் தயாராகவேண்டும்.

தமிழ் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலவேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் சேர்ந்து இனவாதம் பேசுகின் றன. அவற்றின் இனவாதப் போக்குக்கு சாவுமணி அடிக்க வேண்டும் — என்றார் அவர்.

வேட்பாளரான இந்திரநாதன் இரத்தினசாமியும் உரையாற்றினார்.

# 76 நோயாளிகள் வவுனியாவுக்கு

கொழும்பு, டிச.1

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 76 நோயாளிகள் வைத்திய சிகிச்சைக்காக வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இந்நோயாளிகள் தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# வரலாற்றில் கறை படிந்த தீவுப்பகுதி வெறியாட்டம்

பன்னிரண்டாவது பொதுத் தேர்தலை ஒட்டிய பிரசார நடவடிக்கைகளை பன்னிரண்டாவது மாவீரர் தின உரையை முன்னிட்டு ஒத்தி வைத்தது தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு.

அதற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் தீவுப் பகுதியில் நிகழ்ந்த காடைத்தனம், தேர்தல் வன்முறை என்றால் இப்படியும் செய்யலாம் என்று வழியமைத்துவிட்டுச் சென்றிருக்கிறது.

அவ்வளவு தூரம் மனித நேயம் அற்ற வகையில் காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

சம்பவம் பற்றிய உண்மை நிலை, பாதாள உலக அச்சுறுத்தல்களால் மிரண்டு போயிருக்கும் தென்னிலங்கையையே ஒரு கணம் 'ஷொக்' அடிக்க வைத்திருக்கிறது.

ஒரு நாள் ஓய்வுற்ற பிரசாரப் பீரங்கியைச் சுமந்தவாறு அடுத்த நாள் காலை மிகுந்த உற்சாகத்துடன் தீவகத்துக்குத் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்புச் சென்றது.

சுமார் 16 வாகனங்களில் வேட்பாளர், ஆதரவாளர்கள் என்று பலர் அல்லைப் பிட்டி சோதனைச் சாவடி ஊடாக தீவகத்துள் நுழைந்தனர்.

அங்கு போக முன்னர் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சற்று நேரம் வாகன அணி சென்றவுடன் ஹண்டர் வாகனம் ஒன்று நேர் எதிரே வந்தது. அதில் 50க்கு மேற்பட்ட கறுப்புடை தரித்தவர்கள்.

வாகன அணிக்கு குறுக்கே வந்து நின்றது ஹன்டர்.

அதிலிருந்து வாள், கத்தி, கோடரி, அலவாங்கு, கேடர், தடி என்று பல ஆயுதங்களுடன் திபு திபுவென பலர் இறங்கினர். மாவை எங்கே?', 'சங்கரி எங்கே?', 'சுரேஷ் எங்கே?' ' சிவாஜி எங்கே?' என்று வாகனங்களைத் தாக்கத் தொடங்கினர்.

வாகன அணியில் வெளியே குதித்தவர்களுக்கு

அடி! வெட்டு!! குத்து!!!

அடியோ அடி. அப்படி ஒரு அடி .

தாக்குதல் இடம்பெற்ற நாரந்தனை தேவாலயப் பகுதி சமர்க்களமானது.

ஈனக் குரல்களும், அபாயக் குரல்களும் மட்டுமே காற்றில் கலந்தன.

வேட்பாளர்களான மாவை சேனாதிராசாவுக்கு தலையில் வெட்டு, சிவாஜிலிங்கத்துக்குக் காலில் கொத்து, சுரேஷ் பிரேமச்சந்திரன், ரவிராஜ் ஆகியோருக்கு அல வாங்கல் அடி. இவர்களைப் பாதுகாப்பதற்கு முன்னே பாய்ந்தவர்களுக்கு வாள் வெட்டு, அடி, கொத்து என்று தாராளமாக வெறியாட்டம்.

வேட்பாளர்களுக்கு பாதுகாப்புக்குச் சென்ற பொலிஸார் துப்பாக்கியைத் தூக்கி தாக்க ஆயத்தமாகினர். ஆனால் அந்த வீதியின் இருமருங்கிலும் துப்பாகிகளுடன் தாக்குதலுக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்தார் ரவிராஜ்.

பொலிஸ் சுட்டால் மிகுதி அங்கு என்ன நடக்கும் என்று ஊகித்துக் கொண டார். தாக்க முற்பட்ட பொலி ஸாரைத்தடுத்து நிறுத்தி னார். காயப்பட்டவர்களைத் தூக்கிக் கொண்டு உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமாறு பணித்தார்.



காயமடைந்த மாவை

இனியும் அங்கு நின்று தாக்குப் பிடிக்க யாரும் மீதமில்லை என்றாகி விட்டது. படுகாயமடைந்த பேரம்பலத்தை மடியில் சாய்த்துக் கொண்டு வாகன அணியை விரட்டினர் நகருக்கு.

ஆனால் வழியிலேயே பேரம்பலத்தின் உயிர் ரவிராஜின் மடியில் பிரிந்தது. கண்ணீரையும், செந்நீரையும் சுமந்த வாகனங்கள் யாழ். ஆஸ்பத்திரியைச் சென்றடைந்தன. காயமடைந்த அனைவரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தை அறிந்த கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், ஏனைய வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் கூட்டம் ஆஸ்பத்திரியில் அலை மோதியது. தங்கள் தலைவர்களின் தலையில் வீழ்ந்த வெட்டுக்காயங்களைக் கண்டு கதறி அழுதனர்.

சம்பவம் பற்றிய செய்தி குடாநாடெங்கும் ஏன் நாடெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. ஆஸ்பத்திரிக்கு விரைந்த செய்தியாளர்கள் கோர வெறியாட்டத்தின் பிரதிபலிப்புக்களை கமெராக்களில் பிடித்துக் கொண்டனர்.

சம்பவத்தில் நேரடியாக பாதிக்கப்பட்டவர் என்ற வகையிலும்– செவ்விதரக்கூடிய நிலையில் ஓரளவு ஆரோக்கியமாக இருந்த யாழ். நகர பிதா ரவிராஜுக்கு முன்போய் இறங்கினோம்.

''நடத்தப்பட்ட கோரத் தாண்டவம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெற்றது'' என்று சூடாகச் சொன்னார் அவர்.

ஸ்ரீதர் தியேட்டரில் இருந்தவாறு வோக்கி– டோக்கியில் டக்ளஸ் தாக்குதலைக் கண்காணித்தார். அதை நெறிப்படுத்தியவரை நான் கண்டறிந்தேன் என்றும் ரவிராஜ் சொன்னார். தமிழினத்துக்குத் துரோகம் இழைத்த இந்த அமைச்சர் தனது பதவியைத் துறந்துவிட்டு சகாக்களுடன் நாட்டை விட்டுப் போய் விடவேண்டும் என்று ரவிராஜ் கர்ஜித்தார்.

இந்தச் சம்பவத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் சிறிது பங்கு உண்டு என்றும் ரவிராஜ் குற்றஞ் சாட்டினார்.

அவர் வாங்கிய அடிகளை சொற்கணைக ளாக மொழிபெயர்த்து எமக்கு செவ்வி தொடுத்தார்.

சம்பவத்தை அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்று யாழ்.நகர் பதற்றத்தில் மூழ்கியது.

இது ஒரு கலவரத்துக்கு பிள்ளையார் சுழியோஎன்று மக்கள் பதைபதைத்தனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பவம் பற்றிக் கூறுகை யில்– தமக்கும் தாக்குதலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றார். சம்பவம் பற்றி விசாரணை செய்ய தமது கட்சியின் உதவி வேண்டுமானால் அதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

தீவுப் பகுதி மக்களை வைத்து இப்படியெல்லாம் அடித்துத்தான் நாம் ஆதரவு திரட்ட வேண்டும் என்றில்லை. எமக்குரிய ஆதரவு எமக்கு எப்போதும் உண்டு என்றும் டக்ளஸ் அடித்துக் கூறினார்.

சம்பவம் நடந்த அன்றுதான் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்கணிப்புக் குழு யாழ்ப்பாணம் சென்றடைந்தது.

சம்பவத்தைக் கேள்வியுற்ற அவர்கள் அன்று மாலையே சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

அவர்கள் சம்பவம் பற்றித் தெரிவிக்கையில் — வெறியாட்டம் நடந்த இடத்துக்கு அருகில் பொலிஸ் சோதனைச் சாவடி இருக்கிறது. ஹண்டரில் வந்த தாக்குதல் காரர்கள் கட்டாயம் அந்த சாவடியில் சோதனை செய்யப்பட்டிருப்பார்கள் — என்றனர்.

அதே வேளை — தாக்குதல்காரர்களில் மூன்று பொலிஸார் சிவில் உடையிலும், இருவர் சீருடையிலும் தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது தாக்குதல் பற்றி விரிவாக விசாரிப்பதிலோ, விசாரணைகள் மூலம் தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதிலோ எந்தவித சிரமமும் இருக்காது என்று உணர்கிறோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தேர்தல் வன்முறைகள் தடுக்கப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்புகள் பலமுறை வலியுறுத்திவருகின்றன. அந்த வகையில் இந்தச் சம்பவம் பற்றிய விசார ணைகள் விரிவாக நடத்தப்பட வேண்டும். உண்மை வெளிக் கொணரப்படவேண்டும். நாம் தெற்குக்குத் திரும்பிய பின்னரும் இது விடயத்தில் தேர்தல் ஆணையாளருக்கு அழுத்தம் கொடுப்போம் என்றும் அவர்கள் உறுதி அளித்தனர்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தின்போதும் இத்தகைய சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தீவகத்திலிருந்து திரண்டு வந்த பல நூற்றுக்கணக்கானோர் யாழ்.நகரிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தை தாக்கினர். பெயர் பலகையை அடித்து உடைத்தனர். அடி, உடை, சம் பல் என்று அட்டகாசம் செய்துவிட்டு தற்பொழுது நிகழ்ந்திருப்பதும் அதன் தொடர்கதை தான்.

— சேனாவரையன்.




# தூக்கத்தைக் கெடுத்து பதற்றத்தை அதிகரிக்கச் செய்த மாவீரர் நாள்

## நவம்பர் என்றால் படையினருக்கு பெரும் சோதனை

மாவீரர் நாள் நிகழ்வுகள் முடிந்து விட்டன. ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் வந்தாலே படையினருக்கு தூக்கத்தை கெடுத்து -- பதற்றத்தை அதிகரிக்கச் செய்து விடுகிறது இந்த மாவீரர் நாள். முன்னர் மாவீரர் நாள் நெருங்கும் சமயத்தில் மிகப் பெரும் தாக்குதல்களை நடத்தி அரசையும் -- படையினரையும் கதிகலங்கச் செய்வது புலிகளின் வழக்கம். ஆயினும் கடந்த ஒரு சில வருடங்களாக அவ்வாறான தாக்குதல்கள் எதனையும் புலிகள் மேற்கொள்ளவில்லை. அதனால் முன்னர் மாவீரர் நாள் நெருங்கும் போது தென்பகுதி வீதிகள் வெறிச்சோடிப் போவதும் -- படையினரின் தலைக்கறுப்பு அதிகம் தென்படுவதும் வழமையாகி இருந்தது. ஆனால் தற்போது நிலமை ஓரளவுக்கு வழமைக்கு வந்து விட்டதென்றுதான் கருதத் தோன்றுகிறது.

இவ்வாறாக புலிகள் தாக்குதல் நடத்தாததற்கு தங்களது பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பே காரணமென படைத்தரப்பு மார்தட்டிக் கொண்டாலும் -- உண்மை நிலை வேறாகவே உணரப்படுகிறது.

அதாவது மாவீரர் தினம் நெருங்க நெருங்க பாதுகாப்பை பலப்படுத்தி வரும் படைத்தரப்பு -- தொடர்ந்து புலிகள் தாக்குதல் எதனையும் செய்யாது விட்டால் குளிர் விட்டுப் போய் அசமந்தமாக இருக்கும் நிலை ஏற்படும் -- அப்போது பார்த்து புலிகள் பாய்ந்து பயங்கர அடி ஒன்றைக் கொடுக்கலாம் என்று நீண்டகால திட்டம் ஒன்றை வகுத்திருக்கலாம் என்றே நம்பப்படுகிறது.

இது தவிர இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுவதனை மறைமுகமாக விரும்பும் புலிகள் -- எங்கே தாங்கள் பாரிய தாக்குதல்களை நடத்தப்போக -- அந்த தாக்குதல் வெற்றி பெற்றால் ஐ.தே.க. அதனை தனது பிரசாரத்துக்கும் தோல்வி அடைந்தால் பொ. ஐ. முன்னணி அதனை தனது பிரசாரத்துக்கும் சாதகமாக பயன்படுத்தி விடுமோ என்ற நிலையிலேயே அவ்வாறான தாக்குதல்கள் எதனையும் நடத்தவில்லை என்றும் நம்பப்படுகிறது.

இதன் அடிப்படையில் இம்முறையும் இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை புலிகள் பாரிய தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. மாவீரர் தினத்துக்கு முன் யாழ்ப்பாணத்தை பிடித்து விடுவார்கள் என்றும் மட்டக்களப்பை பிடித்து விடுவார்கள் என்றும் பரப்பப்பட்ட செய்திகளை கேட்டு படைத்தரப்பு பதற்றப்பட்டுக் கொண்டிருக்க போதாக்குறைக்கு புலனாய்வுப் பிரிவினரும் அங்கே தாக்கப் போகிறார்கள் இங்கே தாக்கப் போகிறார்களென அரசையும் படையினரையும் உசுப்பேற்றி ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்க -- தற்போது எல்லாம் புஷ் வாணமாகி புலிகள் கம்மென்று இருந்து விட்டனர். அரசும் -- படைகளும் ஓடிக் களைத்து ஆறுதல் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆயினும் புலிகள் பாரிய தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளவில்லையாயினும் வவுனியா பகுதியில் மேற் கொள்ளப்பட்ட இருவேறு தாக்குதல்கள் சிறிய தாக்குதல்களாக இருந்த போதிலும் படையினரின் பாதுகாப்பு ஆணிவேர்களையே ஆட்டி வைக்கக் கூடிய தாக்குதல்களாகவே அமைந்திருக்கின்றன.

இந்த இரு தாக்குதல்களும் பாதுகாப்பு நடவடிக்கையில் படையினர் காட்டும் அசமந்தப் போக்கையும் -- எதிர்காலத்தில் இராணுவ உயரதிகாரிகள் வீதியில் கால் வைக்க முடியாத அளவிற்கு ஓர் இறுக்கத்தையும் ஏற்படுத்துமென அவதானிகள் வட்டாரம்



ஆதங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி கண்டி வீதியில் மேற் கொள்ளப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதல் ஒன்றும், 18ஆம் திகதி பதவிய பகுதியில் இடம்பெற்ற பிறிதொரு தாக்குதலுமே படைத்தரப்புக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றன.

வவுனியாவுக்கும் அநுராதபுரத்துக்குமிடையில் உள்ள கண்டி வீதி உச்சக் கட்ட பாதுகாப்பு நிறைந்த பகுதியாகும். இந்த வீதியால் தினமும் Liberty எனப்படும். விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றிச் செல்லும், பஸ்கள், படையினருக்கான ஆயுதங்கள், மற்றும் அன்றாட தேவைப் பொருட்களை ஏற்றிவரும் வாகனங்கள் மட்டுமல்லாது படை உயரதிகாரிகள் பயணம் செய்யும் வாகனங்களும் போய் வருவது வழக்கம். எப்போதும் படையினரின் வாகன நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாலேயே இந்த வீதி ஆகக் கூடிய பாதுப்பாப்புக்கும் உட்படுத்தப்பட்டிருந்தது.

வீதியின் ஒவ்வொரு 500 மீற்றர் தொலைவிலும் படையினர் வீதியோரங்களில் காவலுக்கு நிற்பது வழக்கம். இவ்வாறு இந்த வீதியில் பகலில் பெண் இராணுவத்தினரும் -- இரவில் ஆண் இராணுவத்தினரும் ஊர்காவல் படையினருடன் சேர்ந்து 24 மணி நேரமும் காவல் காத்து நிற்க -- இந்த வீதியில் மட்டும் தினமும் 4 தடவைகள் வீதிச் சோதனைகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. தினமும் காலை 8மணி, 10.30 மணி, பிற்பகல் 2மணி, 4 மணி என நான்கு தடவைகள் இராணுவத்தினர் ஒரு தடவை, கடற்படையினர் மறு தடவையென மாறி மாறி வீதியின் இரு மடங்கிலுமுள்ள பற்றைகளையும் சருகுகளையும் கிளறி வீதிச் சோதனை செய்வது வழக்கமான நடைமுறையாக இருக்கிறது. இவ்வாறான அதிகரித்த பாதுகாப்புக்கு மத்தியில் North Central Navy Head Quaters என்ற பெயரில் இயங்கி வரும் வடபகுதி கடற்படை தலைமைக் காரியாலயமான பந்துகாபய என்ற பெயரிடப்பட்ட கடற்படை முகாமுக்கும் 4 ஆவது பிரிவு பெண்கள் இராணுவப் படையணியின் முகாமுக்கும் இடையில் உள்ள பகுதியிலேயே இந்த கிளைமோர் குண்டு பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது என்பது தான் அதிர்ச்சி தரும் விடயமாக இருக்கிறது.

இந்தப் பகுதியில் வவுனியா முதல் அநுராதபுரம் வரை ஈரற்பெரிய குளம், மதவாச்சி, ரம்பாவ, யாழ்ப்பாணச் சந்தி ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகளும் உதிரியாக இருக்கும் நிலையில் எங்கிருந்து இந்த கிளைமோர் எடுத்து வரப்பட்டது. வீதிச் சோதனைகளின் போதும், காவலில் நிற்கும் படையினரினதும் கண்களுக்கு இது எவ்வாறு தட்டுப்படாமல் போனது என்பதும் பெரும் மர்மமான கேள்வியாகி படையினரை குடைந்து கொண்டிருக்கிறது.

காலை 8 மணி வீதிச் சோதனைக்குப்பின் அடுத்த 10.30 மணி சோதனைக்கிடையில் 9.30 மணியளவிலேயே இந்த கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த இடைப்பட்ட நேரத்தில் வவுனியாவின் கிழக்குப் புறமாக வந்த விடுதலை புலிகளே கிளைமோரை பொருத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆயினும் கண்ணிலே எண்ணெய் விட்டுக் காத்திருக்கும் பெண் இராணுவத்தினரதும் -- ஊர்காவல் படையினரதும் கண்களில் புலிகள் மண்ணைத் தூவியது எப்படி என்றே படைதரப்புக்கு ஆச்சர்யமாயும், அதிர்ச்சியாகவும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கிளைமோரானது இந்த பாதை ஊடாக தினம் காலையில் சுமார் 45--50 பேர்வரையான லீவிலே செல்லும் படையினரை ஏற்றச் செல்லும் Liberty பஸ் மீதே இலக்கு வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அன்றைய தினம் Liberty பஸ் அந்தப் பாதையால் பயணம் செய்யவில்லை. எனவே தான் குறிப்பிட்ட ஜீப்பின் மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்த தாக்குதலில் பொலிஸ் வாகன திருத்தவேலைகளுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் உட்பட 3 பொலிசார் கொல்லப்பட்டனர். வீதியால் சென்ற அப்பாவிப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்தப் பகுதியில் 2 வருடங்களுக்கு முன்னர் ஈரற் பெரிய குளம் பகுதியில் இராணுவ ட்ரக் ஒன்றின் மீது கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டதில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதன் பின்னரே இந்த வீதியில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டதாகவும், ஆனால் அப்படியிருந்தும் அவை எல்லாம் விழலுக்கிறைத்த நீராகி விட்டன என்றும் படைத்தரப்பு விசனம் கொண்டுள்ளது.

அடுத்து கடந்த 18 ஆம் திகதி காலை 9.45 மணியளவில் பதவியா, மதவாச்சி வீதியில் ஹெப்பிற்றி கொலாவ பகுதிக்கு அண்மையில் ஹிரலுகம, கோணமரியாவ என்ற கிராமங்களின் எல்லைப் பகுதியில் ஜீப் ஒன்றின் மீது கிளமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் அதில் பயணம் செய்த பௌத்த பிக்கு ஒருவர் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தப் பாதையும் அதிக படை நடமாட்டமுள்ள பகுதி என்பதை விட சுற்றி வளைத்து சிங்கள மக்கள் வாழும் கிராமங்களுக்கு மத்தியில் உள்ள இந்த பகுதிக்கு விடுதலை புலிகள் எப்படி வந்தார்கள் என்பதே படையினரை குடையும் கேள்வியாகி இருக்கிறது.

விடுதலைப்புலி உறுப்பினர்கள் அருகே இருந்த காட்டுப் பகுதியில் மறைந்திருந்து றிமோட் கொன்ரோல் மூலமே கிளைமோரை வெடிக்க வைத்திருக்கலாம் என நம்பப் படுகிறது. ஏனென்றால் படையினரின் வாகனத்துக்காக காத்திருந்த நபர் பச்சை நிற ஜீப்பைக் கண்டு விட்டே றிமோட்டை இயக்கி இருக்கிறாரென்றும், ஜீப்பினுள் பௌத்த துறவி இருந்ததை அவதானிக்காத நிலையிலேயே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

இந்த குண்டை வெடிக்க வைத்த புலி உறுப்பினர் நெடுங்கேணி வழியாக வவுனியா ஹொரவப் பொத்தானை வீதியை கடந்து மடுகந்த பகுதி ஊடாக 20 மைல் நீளமான காட்டுப் பகுதியை தாண்டிச் சென்றே தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்றும் படைதரப்பு தெரிவிக்கின்றது.

இதே வழியாக வந்தே கண்டி வீதி தாக்குதலையும் புலிகள் நடத்தி இருப்பதாக படைத் தரப்பு தெரிவிக்கும் நிலையில் -- இந்த நீண்ட தூர காட்டுப் பயணத்தை மேற் கொண்டு சென்ற புலிகள் அங்கு தாக்குதல்களை நடத்தி விட்டு எப்படித் தப்பிச் சென்றனர் என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கிறது. புலிகள் திரும்பி வரும் போது அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முடியாமல் போன காரணம் என்ன என்ற கேள்வியும் முன் வைக்கப் படுகிறது.

இவ்வாறாக படையினரின் பாதுகாப்புக் கூடிய பகுதிகளிலும் சிங்கள மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் பகுதிகளிலும் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதானது எதிர்வரும் தேர்தல் நேரத்திலும் மிகுந்த அச்சுறுத்தலாகி இருப்பதாக வவுனியா அரச அதிபரும், படை அதிகாரிகளும் பாதுகாப்பு அமைச்சுக்கும் தேர்தல் ஆணையாளருக் கும் முறையிட்டுள்ளனர்.

டிசம்பர் 5ஆம் திகதி வாக்களிப்பு முடிந்ததும் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும்போது இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுமானால் வவுனியா -- அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் தேர்தல் குழப்பப்படும் என்றும் -- முடிவுகளை அறிவிக்க முடியாமலும் அல்லது மறு தேர்தல் வைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

-- குமரன்


J.K. அரம்

ஏக விநியோகஸ்தர்கள்

General Equipment

No. 400, Sri Sangaraja Mw,
Colombo-10.
T.P. 327264, 343844
Fax : 434637

என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

வாடகைக்கு / குத்தகைக்கு

7000 சது அடி கொண்ட களஞ்சியசாலை (Store) ஒன்று New Nuge Road, Peliyagoda வில் வாடகைக்கு/குத்தகைக்கு உண்டு.

* மின்சாரம், குடி நீர் வசதி,
* 3 தொலைபேசி இணைப்புக்கள் உடன் கூடியது
* பாதுகாப்பான சூழல்

தொடர்புகளுக்கு:
T.P.343822 Mobile:077-395200
Fax: 434637

அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

டிசம்பர் 02, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com

## பிரபாவின் உரையும் ரணிலின் பதிலும்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இம்முறை தமது மாவீரர் உரையில் சில அடிப்படை விஷயங்களை ஆணித்தரமாக எடுத்து விளக்கியிருக்கிறார்.

அந்த விளக்கம் பயன் அளிக்க தொடங்கி விட்டது என்பதை பிரபாகரன் தனது உரையை முடித்துக் கொண்ட சிறிது நேரத்திலேயே காணக்கூடியதாக இருந்தது.

டிசம்பர் 5 ஆம்திகதி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ரணில் விக்கிரமசிங்கவே அரசாங்கத்தை அமைப்பார் என்று பலரும் இப்போதே ஹேஷ்யம் கூறத் தொடங்கி விட்டார்கள்.

புலிகளோடு ரணிலுக்கு தொடர்பு உண்டு; ஒப்பந்தம் உண்டு; நாட்டை அவர் புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப் போகிறார் என்றெல்லாம் அரசாங்கத் தரப்பு பிரசாரங்களை முடுக்கி விட்டுள்ள போதிலும் ரணிலுக்கு நாட்டிலே செல்வாக்கும் ஆதரவும் வளர்ந்து வருகின்றன.

அவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தனியார் தொலைக்காட்சி ஒன்றில் தோன்றினார்.

அப்போது கேள்வி ஒன்றுக்கு ரணில் பதிலளிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். அவசியமானால் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி விட்டு அவர்களுடன் நான் பேசத் தயார் என்றார் ரணில்.

அது மட்டுமல்ல; பேச்சுவார்த்தை நடத்தி எடுக்கப்படும் முடிவை மக்கள் முன் வைப்பேன். அதற்கு சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படும்.

இந்த வகையில் மக்களின் அங்கீகாரத்தை பெற்று நாடாளுமன்றத்தில் அந்த முடிவுக்குச் சட்ட வடிவம் கொடுப்பேன். இப்படி ரணிலும் தாம் மனதில் வைத்திருக்கும் திட்டத்தை தொலைக்காட்சியில் தோன்றி பகிரங்கமாக வெளியிட்டார்.

இத்தனைக்கும் ரணில் இந்த திட்டங்களையெல்லாம் அறிவிப்பதற்கு சற்று முன்பு பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் என்ன சொன்னார் தெரியுமா?

தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் வேறு வழியின்றி ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றோம். அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண முன்வருமானால் நாம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றத் தயார். ஆனால் அதற்கு எம்மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும். நாம் தமிழ் மக்கள் சார்பில் சுதந்திரமாக பேசும் வாய்ப்பு வேண்டும். அதனால் தடை நீக்கப்பட வேண்டும் என்றார் பிரபாகரன்.

அவசியமானால் தடையை நீக்க தாம் தயார் என்று கூறிவிட்டார் ரணில் விக்கிரமசிங்க. அப்புறம் என்ன? இது எதிர்காலம் பற்றி நம்பிக்கையூட்டும் நல்ல அறிகுறி அல்லவா?

பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் மற்றும் பலவிஷயங்களையும் தெளிவுபடுத்தினார்.

தமிழ் மக்கள் வேறு, தமிழீழ விடுதலைப் புலிகள் வேறு என்று கருதுவது தவறு. தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒன்றே என்று பிரபாகரன் வலியுறுத்தினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் விடுதலைப் போராளிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவுமே தமது உயிரைப் பணயம் வைத்து போராடுகிறார்கள்.

இப்படிப்பட்ட தியாக சீலர்களுக்குப் பயங்கரவாத முத்திரை குத்துவதும் அவர்களைத் தடை செய்வதும் தவறு என்று பிரபாகரன் சர்வதேச நாடுகளைக் கண்டித்தார்.

இனங்களை அடக்கி ஒடுக்கி ஒழிப்பதற்கு அரசாங்கங்கள் மேற்கொள்ளும் வன்செயல்களையும் அவற்றை எதிர்த்து விடுதலை இயக்கங்கள் போராடுவதையும் சர்வதேச நாடுகள் இனங்கண்டு கொள்ள வேண்டும் என்று பிரபாகரன் ஆலோசனையும் கூறினார்.

இறுதியாக அவர் சிங்களப் பேரினவாதம் பற்றி மனம் திறந்து பேசினார்.

சிங்களப் பேரினவாதத்தின் பிடியில் சிக்கி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணச் சமாதான வழிகளை நாடாமல் தொடர்ந்து யுத்த முனைப்பில் இருந்தால் நிலைமை மோசமாகும். சமாதானம் வராது. சண்டை தொடரும்.

சமாதான மார்க்கமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சிங்களதேசம் இணங்க மறுத்தால் தமிழர்களாகிய நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி என்றால் எந்த ஒரு சக்தியாலும் அதை தடுத்து விட முடியாது.

தமிழீழத் தனிநாடு என்றோ ஒரு நாள் பிறக்கும். எமது மாவீரர்களின் கனவு நனவாகும். இவை பிரபாகரன் பேச்சின் இறுதி வார்த்தைகள்.

ரணில் இவற்றிற்கெல்லாம் இனிஇடமில்லை என்று எண்ணத்தக்கவாறு உடனடியாகவே கருத்து வெளியிட்டிருக்கிறார். எதிர்காலம் பற்றி நம்பிக்கை தோன்றாதா என்ன?

# தமிழீழம் வரலாற்று நியதி என்றால் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது

## விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மாவீரர் நாள் உரையில் தெரிவிப்பு.

சிங்களத்தின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக இனவாதம் நீடித்து நிலைக்குமானால், அந்த இனவாதமே தமிழீழத் தனியரசு பிறப்பதற்கான புற நிலையை அமைத்துக் கொடுக்கும்.

தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி என்றால் எந்த ஒரு சக்தியாலும் அதனைத் தடுக்கமுடியாது. என்றோ ஒருநாள் தமிழீழத் தனிநாடு பிறந்து எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

தமது மாவீரர் நாள் உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார் விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரன்.

அவரது உரையின் முழு விவரம் வருமாறு:

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

விடுதலைவேண்டிக் களமாடி வீழ்ந்த எமது வீரப் புதல்வர்களை நாம் எமது நினைவில் உயிர்ப்பித்துப் பூசிக்கும் நன் நாள்.

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காகத் தமது சொந்த வாழ்வை ஈகம் செய்த சுதந்திர வீரர்களுக்கு நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்தும் புனித நாள்.

### வரலாற்றில் மகத்தான இடம்

விடுதலைக்காக எமது இயக்கம் கொடுத்த விலை அளப்பரியது. உலகத்தில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் புரியாத அற்புத சாதனைகளை நாம் ஈட்டினோம். ஒப்பற்ற ஈகங்களைப் புரிந்து தியாகத்தின் சிகரங்களைத் தொட்டோம். இதனால் மானிடத்தின் விடுதலை வரலாற்றில், ஒரு மகத்துவமான இடத்தைத் தேடிக் கொண்டோம். எமது இனத்தின் வீரத்திற்கும் விடுதலை உணர்விற்கும் பெருமை சேர்க்கும் இம்மகோன்னத நிலைக்கு எம்மை இட்டுச் சென்றவர்கள் எமது மாவீரர்களே.

மனித நாகரீகம் தோன்றிய காலந்தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும் வரை விடுதலைப் போராட்டங்களும் தொடரும்.

### மாவீரர்கள் அபூர்வ மனிதர்கள்

ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்திற் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்.

இன்றைய உலக ஒழுங்கு மாறிவருகிறது. சர்வதேச அரசியல் உறவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. மனித உரிமைப் போராட்டங்கள் சம்பந்தமாக உலகின் பார்வையும் மாறிவருகிறது. அரசியற் கோட்பாடுகளிலும் தார்மீக கொள்கைகளிலும் அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன.

அரசியல் இலட்சியங்களை அடைவதற்காக நடத்தப்படும் வன்முறை தழுவிய உரிமைப் போராட்டங்கள் 'அனைத்திற்குமே உலக அரசுகள் பயங்கரவாதம்' என்ற முத்திரையைக் குத்தியுள்ளன. இந்தக் குறுகிய வரையறையின் அடிப்படையில் உண்மையான உரிமைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் மத்தியிலான வேறுபாடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

அடிப்படை அரசியற் சுதந்திரங்களுக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் இரத்தம் சிந்திப் போராடும் விடுதலை அமைப்புகளின் தார்மீக அடிப்படைகளுக்கு இதுவொரு சவாலாகவும் எழுந்துள்ளது. இது வொரு கவலைக்குரிய விடயம் இந்தப் புதிய போக்குக் காரணமாகச் சர்வதேச அரங்கில் எமது சுதந்திர இயக்கத்திற்கும் அவப்பெயர் ஏற்பட்டுவருகிறது.

### ஆழமான பார்வை தேவை

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலக நாடுகள் முதலில் அரசியல் வன்முறையின் மூல வேர்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்தான் உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணமுடியும்.

எமது பார்வையில் அரசியல் வன்முறையில் இரு பரிமாணங்கள் உள்ளன. முதலாவது, ஒடுக்குமுறையாளரின் வன்முறை. இரண்டாவது, ஒடுக்கப்படுவோரின் வன்முறை.

ஒடுக்குமுறையாளர் எப்பொழுதுமே ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அரச



அதிகாரம் உடையவர்கள். ஆயுதப்படைகளை வைத்திருப்பார்கள்.

ஒடுக்கப்படுவோர் எப்பொழுதுமே ஆளப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சிறுபான்மைத் தேசியஇனத்தோராக, சுரண்டப்படும் மக்கள் சமூகமாக, ஏழைகளாக, அடிமைளாக இருப்பார்கள். முதல்தர வன்முறையை அரச வன்முறை எனலாம். இரண்டாம் தர வன்முறையை அரச வன்முறைக்கு எதிரான வன்முறை எனலாம். அரச வன்முறையானது ஒடுக்குமுறையாளரின் அடக்குமுறையான வன்முறை என்பதால் அது அநீதியானது ஒடுக்கு முறைக்கு எதிரான ஒடுக்கப்படுவோரின் வன்முறை நீதியானது. ஏனெனில் அது அநீதிக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விதமான வேறுபாட்டில்தான் ஒடுக்கப்படும் மக்களது வன்முறை வடிவிலான உரிமைப் போராட்டங்கள் நியாயத்தன்மை பெறுகின்றன.

வன்முறை வடிவில் உருவகம் பெறும் அரசியல் உரிமைப் போராட்டங்கள் அரச வன்முறையின் எதிர்வினையாகவே எழுகின்றன. உலக விடுதலைப் போராட்டங்களின் மூலத்தை ஆய்வுசெய்து பார்த்தால் இந்த உண்மை புரியும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று மூலமும் அதுதான். விடுதலைப்புலிகள் இயக்கம் உதயமாவதற்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே இலங்கைத் தீவில் அரசஒடுக்குமுறை தலைதூக்கியது. இனவாதத் தீயாக மூண்ட இந்த அரச ஒடுக்குமுறை படிப்படியாக வளர்ச்சிகண்டு தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கொலை வடிவம் எடுத்தது.

சிங்கள அரச வன்முறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அகிம்சை வழியிலான அரசியற் போராட்டங்கள் அனைத்தும் அரச வன்முறையால் அடக்கியொடுக்கப்பட்டன. அமைதிவழிப் போராட்டங்கள் அர்த்தமற்றுப் போய்விட்ட அதே வேளை, அரச அடக்குமுறை தீவிரமடைந்து இனக்கொலைப் பரிமாணம் பெற்றதால், தமிழ் மக்கள் அரச வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இன்னொருவகையிற் சொல்வதானால் பேரழிவை எதிர்கொண்ட தமிழினம், தனது இருப்பிற்காக, தனது பாதுகாப்பிற்காக, ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த வரலாற்றுப் புற நிலையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்று அரச வன்முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது.

இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் எமது ஆயுத எதிர்ப்புப் போராட்டமானது இன்று தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாக வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறது.

நாம் ஒரு தேசிய விடுதலை இயக்கம். இனவாதக் கொடுமைக்கு எதிராக, அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக, அரச பயங்கரவாத வன்முறைக்கு எதிராக நாம் விடுதலை வேண்டிப் போராடி வருகின்றோம்.

### அரச பயங்கரவாதிகள்

எமது போராட்டம் ஒரு தீர்க்கமான, நியாயபூர்வமான அரசியற் குறிக்கோளைக் கொண்டது. ஐ.நா சாசனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் எமது போராட்டம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது.

நாம் பயங்கரவாதிகள் அல்லர். மதவாத,இனவாத வெறியால் உந்தப்பட்டுக் குருட்டுத்தனமான வன்முறையில் ஈடுபடும் மனநோயாளர்களும் அல்லர். மனித விடுதலை என்ற உன்னதமான விழுமியத்திற் காதல் கொண்டே நாம் உயிரைக் கொடுத்துப் போராடிவருகின்றோம்.

நாம் சுதந்திர தாகம் கொண்ட இலட்சியவாதிகள். நாம் சுதந்திர போராளிகள். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக எம்மை அழிப்பதற்கு முயன்றுதோல்விகண்ட சிங்கள அரச பயங்கரவாதிகள் எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பயங்கரவாத முலாம் பூசிவருகிறார்கள்.

இந்த அரச பயங்கரவாதிகளின் பொய்யான, விசமத்தனமான பரப்புரைகளை நம்பி உலக நாடுகள் சில எமது விடுதலை அமைப்பையும் பயங்கரவாதிகள் பட்டியலிற் சேர்த்துள்ளன. இது எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுக்கிறது.

ஆயுத எதிர்ப்பு இயக்கமாக வளர்ந்து நிற்கும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வரலாற்றையும் நியாயப்பாடுகளையும் சீர்தூக்கிப் பாராது, இராஜதந்திர அழுத்தங்களுக்குப் பணிந்து, அவசரப்பட்டு எடுக்கப்பட்ட இந்நடவடிக்கைகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

குறிப்பாகச் சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு இவை ஓர் தவறான தகவலைக் கொடுக்கும். அவர்களது விட்டுக்கொடுக்காத கடும்போக்கை மேலும் கடுமையாக்கும். அத்தோடு அவர்களது இராணுவ அடக்குமுறைக் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்.

ஒட்டுமொத்தத்தில் மேற்குலக நாடுகளின் இந்நடவடிக்கைகள் சமாதான வழிமூலமான தீர்விற்குக் குந்தகம் விளைவித்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை மேலும் சிக்கலடையச் செய்யும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்குலகம் தொடுத்துள்ள போரில் ஐ.நாவில் அங்கம் வகிக்கும் அனைத்து

(21 ஆம் பக்கம் பார்க்க)

# முதல் நாள் மதியத்துக்குள்ளேயே முகாமின் முக்கிய பகுதிகள் வீழ்ச்சி

## மீட்புப் படை அணியின் தளபதி உட்பட 36 பேர் உயிரிழப்பு

**புலிகளிடம் வீழ்ச்சி அடைந்த முல்லைத்தீவு முகாமை மீட்பதற்காக படைத்தரப்பு மும்முனைத் திட்டம் ஒன்றை அவசரமாகத் தயாரித்து அதனை செயற்படுத்த முயன்றது. அதன்படி கடல் வழியாக ஒரு மீட்பு அணி முல்லை முகாம் கடலோரப் பகுதிக்குள் ஊடுருவி தரையிறங்க வேண்டும். இது கடல் முனை நடவடிக்கை.**
**அதே சமயம் மற்றொரு அணி ஹெலிமூலம் முகாமுக்கு சிறிது நேரத்தில் இறங்க வேண்டும். இது வான் வழி நடடிக்கை.**
**இவ்வாறு தரை இறங்கிய அணிகள் தரை வழியாக முல்லை முகாமை நோக்கி முன்னேற வேண்டும். இதுவே மும்முனைத் திட்டம் ஆகும். இத்திட்டம் வெற்றி பெற்றதா? படியுங்கள்.**

கடல்வழித் தாக்குதல் திட்டத்திற்குத் தேவையான துருப்புகளை யாழ்ப்பாணத்தில் திரட்டுவது என முடிவு செய்யப்பட்டது.

காங்கேசன் துறைமுகத்தில் அச்சமயம் தரித்து நின்ற வர்த்தகக் கப்பல் ஒன்றில் துருப்புகளை ஏற்றி, அக்கப்பல் மூலம் அவர்களைச் சுமார் இருபது மைல் தூரம் கொண்டு சென்று, ஆழ் கடலில் வைத்து கடற்படையின் தரையிறங்கு கப்பல் ஒன்றுக்கு மாற்றுவது என்றும் —

பின்னர் அக்கப்பல் மூலம் முல்லைத்தீவு முகாமை நெருங்கியதும், கடற்கரையில் துருப்புகளை இறக்குவதற்கு வசதியாக அவர்களை டாங்கிகளுக்கு மாற்றுவது என்றும் —

உயர் மட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

மீட்பு நடவடிக்கை ஒன்றுக்காக அவசரமாகக் காரியத்தில் குதித்திருக்கும் ஒரு படை அணியை, கடலில் வைத்து இரண்டு தடவைகள் கலங்களுக்கு கலங்கள் மாற்றுவது எத்தகைய குழப்பத்தை ஏற்படுத்தும் என்பது சாதாரண மக்களுக்கே தெரியும். ஆனால் அதனை மூத்த அதிகாரிகள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

திருகோணமலையிலிருந்து செயற்பட்ட கடற்படையின் கிழக்குத் தளபதி வைஸ் அட்மிரல் டி.கே. திஸநாயக்காவும், ஸ்ரீலங்கா விமானப்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதியும் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான வளங்களைத் திரட்டிக் கொடுப்பதில் முன்னின்றனர்.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து திரட்டப்பட்ட மீட்பு அணி எதுவும் 18 ஆம் திகதி இரவு முடியும் வரை முல்லைத்தீவுக் கடலை எட்டவில்லை.

### ஆபத்து காத்திருந்தது

எனினும் திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து புறப்பட்டு வந்த அதிவேகத் தாக்குதல் படகுகளும், பீரங்கிப் படகுகளும் முகாமின் கடற்கரையோரமாக முகாமை நெருங்க முயன்றன.

ஆனால் அங்கு அவர்களுக்கு ஆபத்து காத்திருந்தது.

முல்லை முகாமில் தாக்குதலுக்கு உள்ளான படைகளுக்கு கடல் வழியாகக் கிடைக்கக் கூடிய உதவிகளை முறியடிப்பதற்காக முகாமின் கடற்கரையோரப் பகுதியில் கடற்புலிகளின் நூற்றுக்கணக்கான படகுகள் கடற்படைப் படகுகளை எதிர்பார்த்தவண்ணம் காத்திருந்தன.

கடற்படைப் படகுகள் கடலில் தென்படத் தொடங்கியதும் கடற்புலிகளின் படகுகள் அவற்றை நோக்கி சீறிப் பாய்ந்து வரத் தொடங்கின. அது மட்டுமல்லாமல் முல்லை முகாமின் கடற்கரையோரப் பிரதேசத்தையும் அதை அண்டிய கடற்கரைப் பிரதேசத்தையும் புலிகள் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் அங்கிருந்தும் ஆழ் கடலிலிருந்து கரை நோக்கி விரைந்து கொண்டிருந்த கடற்படைத் தாக்குதல் படகுகளை நோக்கி மோட்டார், பீரங்கி மற்றும் துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனால் முகாமின் கடற்கரையோரப் பகுதியைச் சென்றடையும் தமது திட்டத்தைக் கடற்படைப் படகுகள் கைவிட்டன. கடற்புலிகளின் கடும் எதிர்ப்பு இருப்பதால் முகாமை நெருங்காமலேயே தாங்கள் பின் வாங்குவதாக கடற்படைப் படகுகள் தமது தலைமையகத்துக்கு அறிவித்தன.

இவ்வாறு முதல்நாள் மேற்கொள்ளப்பட்ட கடல் வழி மீட்புத் திட்டம் குழம்பிப் போயிற்று. மறுபுறத்தில் வான் வழியாகத் தரையிறங்கி, தரை வழியாக முன்னேறி முகாமை மீட்கும் திட்டம் ஓரளவு செயற்படுத்தப்பட்டது.

துருப்புகள் தரையிறக்கப்பட்டன.

வாழைச்சேனைப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்த இரண்டாவது விசேட படையணி பட்டாலியனை (2SF) சேர்ந்த சுமார் 220 படையினர் இந்த மீட்புப் பணிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தமது இராணுவ சேவைக்காக பலவகையிலும் பாராட்டப்படுகின்ற வீரரான லெப்டினன்ட் கேணல் பஸ்லி லாபீர் இந்த படை அணிக்குத் தலைமை வகித்தார்.

ரஷ்யத் தயாரிப்பு எம்.ஐ. 17 ஹெலிகள் லாபீரின் படை அணியை ஏற்றிச் சென்று, முல்லைத்தீவு முகாமுக்குத் தென்புறமாக — முகாமிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் உள்ள — அலம்பில் பகுதியில் தலையிறங்கின.

பெருத்த ஆபத்துக்களுக்கும் மத்தியில் — துணிச்சலாக — இந்த ஹெலிகளை விமானப் படை விமானிகள் யுத்தகளப் பகுதியில் தாழப் பதித்து துருப்புகளை அப்பகுதியில் தரையிறக்கினர்.

மீட்புப் படை அணிகள் முல்லை முகாமிற்கு நெருக்கமான இடத்தில் அல்லாமல் சற்றுத் தொலைவான இடத்திலே ஹெலிகள் மூலம் கொண்டு வரப்பட்டு தரையிறக்கப்படலாம் என புலிகள் எதிர்பார்த்திருந்தாலும் கூட —

அத்தகைய பரந்த பிரதேசம் முழுவதிலும் மீட்புப் படை அணிகள் வந்திறங்கும்போது அவற்றை எதிர்ப்பதற்கு ஆயத்தமாக தமது தாக்குதல் அணிகளை எல்லா இடங்களிலும் வைத்திருக்கக்கூடிய ஆள்பலமோ மற்றைய வசதிகளோ புலிகளிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

இதனால் அலம்பில் பகுதியில் மீட்பு அணிகள் முதலில் வந்திறங்கிய போது பெரிய எதிர்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் குறுகிய நேரத்துக்குள் புலிகள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டார்கள்.

அவர்களின் தாக்குதல் அணிகள் விரைந்து சென்று அலம்பிலில் தரையிறக்கப்பட்ட மீட்பு அணிகளைச் சுற்றி வளைத்துக் கொண்டன.

அச்சமயம் மீட்பு அணியின் மற்றொரு தொகுதியினரை அலம்பில் பகுதியில் தரையிறக்குவதற்காக இரண்டாவது முறையாக வந்த ஹெலிகொப்டர்கள் புலிகளின் வேட்டுக்களுக்கு இலக்காகின.

இரண்டு எம்.ஐ 17 ரக ஹெலிகள் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்தன. எனினும் மீட்பு அணிகளுடன் சென்ற அந்த ஹெலிகள் அவர்களைத் தரையிறக்காமலேயே ஏற்பட்ட சேதங்களுடன் — தளத்துக்குப் பாதுகாப்பாகத் திரும்பி வந்து சேர்ந்தன.

முதலில் ஹெலிகளில் கொண்டு வரப்பட்ட மீட்புப் படை அணிகள் ஹெலிகள் பாதுகாப்பாக வந்திறங்கியதால் சிக்கல் ஏதுமின்றி தரை இறங்கி விட்டன.

ஆனால் அடுத்த தடவை ஹெலிகள் எஞ்சிய மீட்புப் படை அணியினரை ஏற்றி வந்தபோது அவற்றை நோக்கிப் புலிகள் தாக்கியதால் எஞ்சிய மீட்புப் படை அணியினரை இறக்காமலேயே ஹெலிகள் திரும்பி விட்டன.

இதனால் முதலில் தரையிறங்கிய மீட்பு அணி, தொடர்ந்து மிகுதித் துருப்புகள் வந்து சேராத நிலையில் — மிகக் குறைந்த எண்ணிக்கையினராக நின்று பெருந்தொகையான புலிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

18ஆம் திகதி இரவு இருள் பரவத் தொடங்கிய போது இந்த மீட்புப் படை அணியின் தளபதி லெப்டினன்ட் பஸ்லி லாபீர் உட்பட 36 பேர் உயிரிழந்திருந்தனர்; அறுபது பேர் வரை படுகாயமடைந்திருந்தனர்.

இந்த மீட்பு அணி முற்றாக அழிக்கப்பட்டுவிடுமோ என்ற எண்ணம் தலை தூக்கத் தொடங்கிய வேளையில் — இருள் சூழத் தொடங்கிய சமயத்தில் — ஸ்ரீலங்கா விமானப்படையின் விமானிகள் தமது உயிரையும் பணயம் வைத்துக் கொண்டு இரண்டாவது தொகுதி மீட்பு அணியினரை வெகுசாமர்த்தியமாக — சாதுரியமாக — முதலாவது மீட்பு அணியினர் இருந்த இடத்தில் கொண்டு போய் இறக்கினர். அத்துடன் இருளுக்கு மத்தியில் — காயமுற்றிருந்த முதலாவது தொகுதி மீட்பு அணியினரில் உடனடி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்தவர்களையும் ஏற்றிக் கொண்டு தளத்துக்குத் திரும்பினார்.

அதே சமயம் —

முல்லைத்தீவு முகாமுக்குள் நுழைந்த புலிகளின் தாக்குதல் அணிகள் முதல் நாள் மதியத்துக்குள்ளாகவே முகாமின் முக்கிய பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன.

தாக்குதல் ஆரம்பித்த முதல் நாள் — காலை விடிந்ததன் பின்னர் — முகாமுக்குள் நடந்தவை குறித்து அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

### கூட்டுப்படைகளின் தலைமையகம் இடம் மாறியது

இதற்கிடையில் —

18ஆம் திகதி அதிகாலை முதல் ஆனையிறவு முகாமில் நிலை கொண்டிருந்த முப்படைத் தளபதிகள் 18ஆம் திகதி முன்னிரவுடன் அங்கிருந்து புறப்பட்டு திருகோணமலையை வந்தடைந்தனர்.

அதுவரை காலமும் அநுராதபுரத்தில் இயங்கிய கூட்டுப்படைத் தலைமையகம், 18ஆம் திகதி முன்னிரவில் முப்படைத்தளபதிகள் திருகோணமலையில் வந்திறங்கியதும் தற்காலிகமாக திருகோணமலை சீனக் குடாவில் உள்ள விமானப்படைத்தளத்துக்கு இடமாற்றப்பட்டது.

அந்தக்கையோடு முல்லைத் தீவு முகாம் மீட்புப் பணிகளை முப்படைத்தளபதிகளுடன் சேர்ந்து நேரடியாகக் கவனிப்பதற்காக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் அங்கு வந்து சேர்ந்தார்.

மீட்புப் பணி தொடர்பாக அவர்கள் தொடர்ந்து தீட்டிய திட்டங்கள் என்ன? அவை வெற்றி பெற்றனவா? அவர்களுக்குக் கிடைத்த தோல்விகள் என்ன? — அவற்றையும் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

(தொடரும்)



**ஆறாத அலைகள் 7**
**வெளிவராத தகவல்கள்**

### சிக்கிய படையினரின் கதி!


முல்லைத்தீவு முகாம் புலிகளிடம் வீழந்த போது அங்கு எத்தனை படையினர் இருந்தார்கள்? அவர்களில் எத்தனை பேர் புலிகளிடம் உயிருடன் பிடிபட்டனர்? தப்பிச் சென்றவர்கள் எத்தனை பேர்? உயிரிழந்தோர் எத்தனை பேர்?

இவற்றுக்கான விடைகளை அறிய முன் மற்றொரு தகவலைப் பார்ப்போம்.

முகாமைக் கைப்பற்றிய புலிகள் அதிகாரிகள், படையினர் உட்பட 207 பேரைக் கைது செய்து, பெயர் குறிப்பிடாத ஒரு மறைவிடத்துக்குக் கூட்டிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களில் ஓர் இளம் படை அதிகாரி திடீரென ஒரு கிரனேட்டை உருட்டிவிட்டுத் தாக்கினார். அது வெடித்ததில் யார் என அடையாளம் புரியாத புலிகளின் தலைவர்களில் ஒருவர் உட்பட ஆகக் குறைந்தது ஆறு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர்.

இதனால் கோபமும், கடும் சீற்றமும் அடைந்த புலிகள் படையினரின் முழு அணியையும் கூண்டோடு அழித்தனர்.


# மசாலா மிக்ஸ்



# மீனினங்கள் அழிந்தால் வாழ்க்கை நடக்குமா?

கையால் வலை வீசி இவ்வளவு தொகையான மீன்களைப் பிடிக்க முடியுமா ? இந்தத் தொழிலாளியின் முயற்சி ஆச்சரியத்தை தருகிறது தானே. ஆனால் உயிர் மீன்களை இவர் பிடிக்கவில்லை கடலில் செத்து மிதந்த மீன்களைத்தான் இவர் இவ்வாறு அள்ளிச் சேர்த்திருக்கிறார். ஹொங்கொங்கில் தொழிற்சாலைக் கழிவுகளால் கடல் நீர் கெட்டுவிட்டது. மீனினம் அழிந்து போகிறது. மீன்கள் அழிந்ததால் கடற் தொழிலாளர்களின் வாழ்க்கை எவ்விதம் நடக்கும் என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

# தும்பிக்கை வரைந்தால் ஓவியமும் அழகுதான்



ஓவியர்கள் இயற்கைக் காட்சிகளை மிகவும் ரம்மியமான முறையில் வரைந்து அனைவரையும் கவர்ந்து விடுவார்கள். ஆனால் தும்பிக்கையினால் யானை வரையும் ஓவியமும் அழகுமிக்கதுதான். அதற்குச் சான்றாக அமையவில்லையா இந்தக்காட்சி ? லண்டன் நகர மிருகக் காட்சிச் சாலையில் இந்த யானை தும்பிக்கையினால் ஒவியம் வரைந்து அனைவரையும் கவர்ந்து விடுகிறது.

இந்தோனேசியாவிலிருந்து வெளியேறி கள்ளத்தனமாக ஏனைய நாடுகளில் வேலை தேடுபவர்களின் தொகை அதிகரித்துவருகிறது. மலேஷியாவிலிருந்து 2500 கள்ளக் குடியேற்றக் காரர்கள் அண்மையில் இந்தோனேஷியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். கடற்படைக் கப்பலில் ஏற்றப்படுவதற்காக ஆடு, மாடுகள் போல நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை இவர்களுக்கு.



# நாடு கடத்தலுக்கு நீண்ட நேரத் தவம்



# இயந்திர மனிதனுடன் நட்புறவு ஆட்டம்

றோபோ எனப்படும் இயந்திரமனிதன் உலக வாழ்வில் நேரடியாகப் பங்குகொள்ளும் காலம் படிப்படியாக உருவாகிவருகிறது. இயந்திர மனிதனுடன் நிஜமனிதர்களும் சேர்ந்து ஆடல், பாடல்களில் கலந்து கொள்கிறார்கள். அதற்கான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. ஜப்பானில் ஒரு கைத்தொழில் நிறுவனம் இயந்திர மனிதர்களின் சேவையைப் பெற்றிருக்கிறது. அங்குள்ள பொழுது போக்கு நிலையத்தில் குழந்தைகள் இயந்திர மனிதனுடன் நட்புறவு ஆட்டம் நடத்தும் காலமும் வந்திருக்கிறது.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



நவம்பர் 18, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை கௌசல்யாவுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. செ. மாரிமுத்து, நாவலப்பிட்டி.
2. ம. வசந்தகுமார், வவுனியா.
3. எம். என். கபூர், கண்டி.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (25.11.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? இசை உலகில் புகுந்து மிக விரைவாகவே முதல் இடத்தைப் பிடித்த இளவரசன், ஆங்கிலப்படத்திற்கும் இசை அமைக்கப் போகிறார்.

இந்த முகத்திற்குரியவரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.

# தமிழக அரசுக்கு உள்ளேயே சதி வேலைகள் அம்பலம்!

## அமைச்சர்களின் பதவிகள் பறிப்பு

தமிழகத்தில் அ.தி.மு.க.ஆட்சி ஏற்பட்ட பின்னர் ஒரு பொது வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. பஸ் தொழிலாளர்கள் இரண்டு வார காலமாக வேலை நிறுத்தம் செய்து வந்தார்கள். போனஸ் உயர்வு கேட்டு அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் அவர்களுடன் ஒத்துப் போக அரசாங்கம் தயாராக இல்லை. எனவே வேலை நிறுத்தம் தொடர்ந்தது.

பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை அரசாங்கம் தீர்த்து வைக்காத காரணத்தினால் ஏனைய தொழிற்சங்கங்கள் சீற்றம் அடைந்தன. அந்தத் தொழிற் சங்கங்கள் பஸ் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்துக் களத்தில் இறங்கின. பஸ் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கடந்த 23 ஆம் திகதி தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ள ஏற்பாடு செய்தனர்.

இந்தப் பொது வேலை நிறுத்தம் திட்டமிட்டபடி நடந்தது. போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டன. அதனால் பொது மக்களுக்கு தான் பாதிப்பு . ஆயினும் தங்களுடைய முழு நாள் பந்த் பெரும் வெற்றி என்று தமிழக தொழிற் சங்கங்கள் அறிவித்தன. ஆனால் தமிழக அரசோ ''பந்த் படு தோல்வி '' என்று கூறி விட்டது.

வேலை நிறுத்தம் வெற்றியோ தோல்வியோ அதனால் பாதிக்கப்பட்டவர்கள் பொது மக்களே.

### பக்கத்து வீடு

அ.தி.மு.க. அரசின் நிர்வாகத்தை முறியடிக்க தி.மு.க. மேற்கொண்ட சதியே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் என்று அ.தி.மு.க.வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் அந்தக் குற்றச் சாட்டை தி.மு.க.வினர் மறுத்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. காரணம் இந்த வேலை நிறுத்தப் போராட்டங்களில் அ.தி.மு.க. தொழிற்சங்கத்தினரும் கலந்து கொண்டார்கள். அ.தி.மு.க. தொழிற்சங்கத்தினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்ற தகவல் வெளியிடப்பட்ட போது ஜெயலலிதா சீற்றம் அடைந்தார். தனது அமைச்சர்கள் சிலர் மீது அவர் ஆத்திரம் கொண்டார்.

அந்த அமைச்சர்களை ஜெயலலிதா வீட்டுக்கு அனுப்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அவ்விதம் செய்ய வில்லை.முதலமைச்சர் பதவியில் அவர் தற்போது இல்லாத காரணத்தினால் அவ்வளவு தூரம் கடும் போக்கை அவர் காட்டவில்லை என்று கருதப்படுகிறது. ஜெயலலிதா அ.தி.மு.க. வின் தலைவி என்ற முறையில் கட்சிக்குள் பெரும் களையெடுப்பை செய்திருக்கிறார்.

பஸ் வேலை நிறுத்தத்தை முறியடிக்காத காரணத்தினால் 3 அமைச்சர்கள் ஒரு நாடாளு மன்ற உறுப்பினர் மூன்று தமிழக சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோரின் கட்சிப் பதவிக ளைப் பறித்திருக்கிறார். அத்துடன் 15 மாவட்ட செயலாளர்களையும் நீக்கியிருக் கிறார். பஸ் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திய போது அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையைத் தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்று ஜெயலலிதா சீற்றம் அடைந்தார்.

ஜெயலலிதா முதல்அமைச்சர் பதவி வகிக்கும் போது வேலை நிறுத்த எச்சரிக்கை ஏதாவது வந்தால் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். தமது அமைச்சர்களைத் தூண்டி விடுவார்.

அவ்விதமே இம்முறையும் பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை முறியடித்து விடலாம் என்று ஜெயலலிதா கருதியிருந்தார். ஆனால் நடக்கவில்லை.

பஸ் வேலை நிறுத்தம் ஆரம்பமானபோது சில மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயின் அ.தி.மு.க. தொழிற்சங்கத்தினரும் வேலைக்கு செல்லாமல் இருந்து விட்டார்கள். அதனால் ஏற்பட்ட கோபத்தை ஜெயலலிதா தமது கட்சிப் பிரமுகர்கள் மீது காட்டியிருக்கிறார்.

ஜெயலலிதா பதவியில்இல்லாத போதிலும் ஒரு பொம்மையை முதலமைச்சர் பதவியில் இருத்தி ''ரிமோட் கொன்ட்றோல்'' மூலம் ஆட்சியை நடத்துகிறார் என்று கருதப்பட்டது. ஆனால் அவருடைய நிர்வாக அழுத்தம் தமிழக அரசின் மீது பூரணமாக இல்லை என்பது இந்த வேலை நிறுத்தம் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் பன்னீர் செல்வத்திற்கு ஏனைய அமைச்சர்களின் ஒத்துழைப்பு அவ் வளவாக இல்லை என்பது தெளிவாகியிருக் கிறது. அத்துடன் ஜெயலலிதா தனது அப்பீல் வழக்கு விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்பை எதிர்பார்த்திருப்பது அவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.

கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கில் வழக்கறிஞர்கள் வாதம் முடிந்தது. தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் நீதிபதி தினகர் தள்ளி வைத்தார்.

கொடைக்கானலில் ''பிளசன்ட். ஸ்டே'' எனும் 7 மாடி ஹோட்டல் கட்ட முன்னர் இருந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது அனுமதி வழங் கப்பட்டது. அதில் முறைகேடு நடந்ததாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, முன்னாள் அமைச்சர் செல்வகணபதி, ஐ.ஏ.எஸ். அதி காரி பாண்டே, ஹோட்டல் நிர்வாகிகள் ராகேஷ் மிட்டல், பாளை சண்முகம் ஆகிய 5 பேர் மீது தனி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

நீதிபதி ராதாகிருஷ்ணன் இந்த வழக்கை விசாரித்து கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி தீர்ப்புக் கூறினார். ஜெயலலிதா வுக்கு ஓராண்டுத் தண்டனையும் மற்றவர்க ளுக்கு தலா 2 ஆண்டு தண்டனையும் விதிக்கப்பட்டன.

தண்டனையை எதிர்த்து ஜெயலலிதா உட்பட 5 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இதற்கிடையே பாளை சண்முகம் மரணம் அடைந்து விட்டதால் மற்ற 4 பேரது மனுக்கள் மீது வழக்கறிஞர் வாதம் நடந்தது.

ஜெயலலிதா சார்பில் டெல்லி வழக்கறிஞர் வேணுகோபால் ஆஜராகி வாதாடினார். மற்றவர்கள் சார்பில் வழக் கறிஞர்கள் பாப்டே நாராயணன், ராமன் ஆகியோர் வாதாடி னார்கள். அரசு தரப்பில் வெங்கடபதி ஆஜராகி வாதாடினார்.

ஒன்பதாவது நாளாக வழக்கறி ஞர்கள் வாதம் நடந்தது. அரச வழக் கறிஞர் வாதத் துக்கு ஜெயலலிதா வழக்கறிஞர் வேணு கோபால் பதில் அளித்து முடித்ததும் வழக்க றிஞர்கள் வாதம் நிறைவு பெற்றது.

பிறகு பேசிய நீதிபதி தினகர், கொடைக்கானல் ஹோட்டல் வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளி வைப்பதாக அறிவித்தார்..

ஜெயலலிதாவின் ஏனைய இரு அப்பீல் வழக்குகள் மீதான வாதங்களும் முடிந்து தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட் டன. இந்த மூன்று அப்பீல் வழக்குகளை யும் விசாரித்தவர் நீதிபதி தினகர்தான். மூன்று வழக்குகள் மீதான தீர்ப்புகளையும் நீதிபதி தினகர் ஒரே நாளில்தான் வெளி யிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிபதி தினகர் வழங்கவுள்ள நீதிமன்றத் தீர்ப்புகளில்தான் ஜெயலலி தாவின் எதிர்காலமே தங்கியிருக்கிறது.

இவ்வேளையில் ஜெயலலிதாவின் எதிர்காலம் சிறைச்சாலையில் தான் கழி யப் போகிறது என்று பாட்டாளி மக்கள் கட் சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறார்.

ஜெயலலிதா மீண்டும் முதல்வராக முடியாது. ஜெயிலுக்குத்தான் போவார் என டாக்டர் ராமதாஸ் கூறினார்.

''தமிழகத்தில் ஜெயலலிதா முதல்வர் பதவி இழந்தார். அவர் மீண்டும் முதல்வராகி விடு வார் என்று அ.தி.மு.கவினர் கூறுகின்றனர். ஆனால் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தண் டனை உயர் நீதிமன்றத்தில் உறுதி ஆகி விடும். எனவே அவர் மீண்டும் முதல்வராக முடியாது. மீண்டும் ஜெயிலுக்குத்தான் போவார்'' என்று ராமதாஸ் தெரிவித்தார்.

''தமிழக ஆளுநராக பர்னாலாவை நியமிக்கக்கூடாது என்று தமிழக முதல்வர் மத்திய அரசிடம் கூறி உள்ளார். பர்னாலாவை நியமிக்கக் கூடாது என்று சொன்ன முதல்வர் அதற்கான காரணத்தை சொல்லவில்லை. பர்னாலா நல்லவர் தான். அவரை தமிழக கவர்னராக நியமிக் கலாம்'' எனவும் ராமதாஸ் கூறினார்.

டாக்டர் ராமதாஸ் கூறுவது போல் ஜெயலலிதாவின் கதை முடிந்தால் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் என்பது தெளிவாகிவிட்டது.

— கதாசி


தமிழ் மக்களின் விடுதலை இயக்கத்தை பயங்கரவாதமென மெழுகு பூசி பூச்சாண்டி காட்டி, ஏனைய ஜனநாயக கட்சிகளுடன் தொடர்புபடுத்தி அதன் மூலம் சிங்கள மக்களை திசை திருப்பி அவர்களின் வாக்கை பெறலாம் என ஏய்த்துப் பிழைக்கும் பேரினவாதக் கட்சிகளின் போக்கைத் தகர்க்க உங்கள் பொன்னான வாக்குகளை உதய சூரியன் சின்னத்திற்கு அளியுங்கள்.

பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2001
கொழும்பு மாவட்டம்
தமிழர் விடுதலை கூட்டமைப்பு

X

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

பாராளுமன்றத் தேர்தல் - 05.12.2001
திருகோணமலை மாவட்டம்




அனைத்தும் ஒருங்கே அமைந்த எமது முதன்மை வேட்பாளர்
இரா. சம்பந்தன்
அவர்களை ஆதரியுங்கள்!

1 X

தமிழர் விடுதலைக் கூட்டணி

# விகிதாசார பரீட்சை முறை

கரஸ்

'நான் ஒரு ஜனாதிபதியானால்', 'நான் ஒரு பிரதமரானால்' என்ற தலைப்புகளைத் தந்து கட்டுரை எழுதச் சொல்வார்கள் சின்ன வயசில். அப்பொழுதெல்லாம் இந்த விசயங்களில் தொடுவதற்கு எனக்கு ரொம்பப் பயம். என்னைப் போன்றவர்கள் கனவிலேகூட நினைக்க முடியாத பதவிகள் என்று எண்ணுவேன். இப்பொழுது எனக்கு வயசு வந்து விட்டது. அதனால் எனக்கு ரொம்ப அனுபவமும் வந்து விட்டது. முக்கியமாக அரசியல் அனுபவம்.

இப்பொழுதெல்லாம் எனக்கு ரொம்ப ஆசை, நான் ஒரு ஜனாதிபதியானால் அல்லது பிரதமரானால்... மக்களுக்கு எவ்வளவு சேவை செய்யலாம் என்று!

மக்களுக்கு சேவை செய்ய என்று சொன்னேனோ! மக்கள் என்றால் என் மக்கள் வேறு பிற மக்கள் வேறு என்று பிரித்துப் பார்க்கும் எண்ணம் எனக்கில்லை. எல்லோருமே என் மக்கள்தான். எல்லோருமே என்றதை 'எல்லாமே' என்று திருத்திச் சொல்லலாம் அல்லவா?

நான் ஒரு பிரதமர் ஆகிவிட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் என்ன, மக்களுக்கு சேவை செய்ய வேள்டும். 'மக்களுக்குச் சேவை செய்ய பிரதமர் ஆகித்தான் ஆகவேண்டுமா, என்று கேட்காதீர்கள். இதெல்லாம் பொலி — றிக்ஸ் (பல தந்திரங்கள்) விகிதாசார தேர்தல் முறை மாதிரி... வறுமை ஒழிப்புத் திட்டம் மாதிரி... ஒரு புதுவிதமான ஸ்டண்ட். மாணவர் உலகுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம். அது என்ன என்று அறிய ஆவல்படுகிறீர்களா, இதோ கூறிவிடுகிறேன். அது தான் விகிதாசார பரீட்சை முறை.

இன்றைய காலகட்டத்தில் இத்திட்டம் மக்களுக்கு மிகமிக முக்கியமான ஒன்று என்பதைப் போகப் போக நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். இத் திட்டம் முறைப்படி அமுல் செய்யப்படுமானால் ஓ.எல். சோதனையில் யாருமே ஓல். எவ் (All 'F') எடுக்க முடியாது. ஒரு பாடத்திற்காவது 'எஸ்' அதாவது பாஸ் மார்க்ஸ் எடுத்தாக வேண்டும். நாட்டின் அரசியலை அவதானிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். காலப் போக்கில் இந்த நாட்டுப் பிரஜைகள் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகி விடுவார்கள். ஆமாம் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒரு மன்றமோ, சபையோ, ஸ்தாபனமோ இல்லாமலில்லை. இவற்றிற்கெல்லாம் தலைமைத்துவத்திற்கும் செய்துறைக்கும் என்று ஆட்களைப் பொறுக்கிப் போட்டு வந்தால் சில பதவிகளை வகிப்பதற்கு ஆட்கள் தட்டுப்பாடு வந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை.

ஆகவேதான் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாயிருக்கும் போது அவர்கள் 'ஓ—எல்' சோதனையில் 'ஓல் —எவ்' எடுக்கலாமா? கூடாது எடுக்கவே விடப்படாது, அதற்காகத்தான் இந்த விகிதாசார பரீட்சை முறையை அறிமுகப்படுத்த இருக்கின்றேன்.

இதன்படி ஒரு பரீட்சார்த்தி பன்னிரண்டு பாடங்களுக்கு மனுப்பண்ணலாம். ஆனால் அவர் எட்டுப் பாடங்களுக்கே விடை எழுதலாம். அதாவது அவர் பன்னிரண்டு பாடங்களுக்கும் சோதனை மண்டபத்துக்கு பிரசன்னமாகி கேள்வித்தாள்களை படித்துப் பார்த்து தமக்கு கஷ்டமாக இருக்கிற நான்கு பாடங்களுக்கு விடை எழுதாமலே அவ்வப் பாடத்தினை கான்ஸல் பண்ண முடியும்.


பரீட்சார்த்தி எட்டுப்பாடங்களில் ஒரு பாடமேனும் 'பாஸ்' பண்ண முடியாமல் போகும் பட்சத்தில் அவரது எட்டுப் பாட புள்ளிகளையும் கூட்டி வருகிற மொத்தப் புள்ளிகளை சாதாரண பாஸ் மார்க்ஸ் புள்ளியால் பிரித்து, உதாரணமாக சாதாரண பாஸ் மார்க்ஸ் முப்பத்தி ஐந்து புள்ளியாகில் முப்பத்தி ஐந்தால் மொத்தப் புள்ளியை பிரிக்க வேண்டும் எத்தனை முறை வருகிறதோ அத்தனை பாடங்களில் அவர்களுக்கு 'எஸ்' (சாதாரண பாஸ்) கிடைக்கிறது என்று அர்த்தம். எட்டுப் பாடங்களினதும் மொத்தப் புள்ளிகளைக் கூட்டும் போது அவருக்கு முப்பத்தி ஐந்து புள்ளிக்கு குறைவாகக் கிடைக்கும் பட்சத்தில் அவரது சுட்டிலக்கத்தில் உள்ள ஏதாவது ஒரு எண்ணை அவரது மொத்தப் புள்ளியுடன் கூட்டி அவருக்கு எப்படியும் முப்பத்தி ஐந்து புள்ளி வரப்பண்ணல் வேண்டும். சுட்டிலக்கத்திலுள்ள ஏதாவது ஒரு எண்ணை மட்டும் தான் எடுக்கலாம். அந்த எண் சேர்த்தும் போதாது என்று காணும் பட்சத்தில் பரீட்சார்த்தியின் பெயரின் முதலெழுத்துக்களின் எண்களைச் சேர்த்துச் சரிப்பண்ணலாம். எழுத்துக்களுக்குரிய எண்களை நாம் பின்னர் 'கஷட்' மூலம் பிரசுரிப்போம். — இப்போதைய நகர எண்கள் மாதிரி. எனவே 'ஓல் எவ்' என்ற பிரச்சினைக்கே இதனால் இடமில்லாமல் போய் விடுகிறது.

நகைச்சுவை விருந்து

இத்திட்டம், நன்றாய் படிப்பவர்களுக்கு சலிப்பைக் கொடுக்கலாம் என்று யாரும் அஞ்சத் தேவையில்லை. அவர்களை ஊக்கப்படுத்த போனஸ் திட்டம் இருக்கவே இருக்கிறது. ஒருவர் ஏழு பாடங்களுக்கு 'டி' (விசேட சித்தி) எடுத்திருந்து எட்டாவது பாடத்தில் பெயில் மார்க்ஸ் எடுத்திருந்தாலும் கூட அவருக்கு எட்டாவது பாடத்திற்கும் 'டி' யே கிடைக்கிறது. இதுதான் போனஸ் 'டி'. இதனால் குறிப்பிட்ட பரீட்சார்த்தி, 'ரிசல்ட் என்ன?' என்று கேட்போருக்கு 'எயிட் டீ' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாமல்லவா. ஒரு பரீட்சார்த்தி ஐந்து பாடங்களுக்கு 'சீ' (திறமைச் சித்தி) பெற்றிருந்தால் ஐந்தாவது பாடத்திற்கு அவருக்கு ஒரு 'டீ' கொடுக்கப்படும். எட்டு 'சீ' பெற்றிருந்தால் மூன்று 'டீ' கிடைக்கும். எப்படி என் திட்டம். இத்தனை சரக்கு என் மூளைக்குள் இருக்கும் போது ஒரு நாட்டின் தலைவராக நான் வருவதற்கு என்ன தடங்கல் இருக்கப் போகிறது?

இத் திட்டம் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவரிடம் விளக்கிய போது அவர் ஆஹா!... ஓஹோ! என்று என்னைப் புகழ்ந்தார். மனித நேயத்தை மதிக்கும் தலைவர் என்று என்னைப் பாராட்டினார்.

'ஓ. எல்.' வகுப்பு மட்டத்தில் இத்திட்டம் பயன ளிக்கத் தொடங்கியதும் படிப்படியாக பல்கலைக் கழக டாக்டர்கள் தேர்வு, இஞ்சினியர்கள் தேர்வு போன்றவற்றிற்கு இத்திட்டத்தை



பிரயோகிக்க நடவடிக்கைகள் எடுப்பேன். இதனால் குடும்பக்கட்டுப்பாட்டுக்குச் செய்யும் செலவீனங்களை மிச்சம் பிடிக்கலாம். தீவிரவாதச் செயல்களையும் கட்டுப்படுத்தலாம். அதாவது பாலங்களையோ, கட்டடங்களையோ பெரும் பெரும் குண்டுகள் வைத்து தகர்ப்பதற்கு தீவிரவாதிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படாது.

இத்திட்டம் பற்றி மந்திரிசபையில் ஆராயப்படும்போது இத்திட்டம் வேண்டுமென்றே தங்களை அவமானப்படுத்த எடுத்த முயற்சி என்று சிலர் சீறி எழக்கூடும். எனது உள் நோக்கம் அப்படியொன்றும் இல்லை. மானத்தை காப்பதற்கு அல்லது மறைப்பதற்குக் கொண்டு வரப்பட்ட திட்டம். இதை அவமானமாகக் கருத வேண்டிய சமாதானத்திற்கான போர் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

(யாவும் கற்பனை)

# அரசியல் அம்பலம்



## இரத்தின பூமியில் சட்டமும் சட்டமும்

இரத்தினக்கல் விளையும் பூமியில் சட்டமும் சட்டமும் மோதுகின்றனவாம். நீல வானத்தில் முதன்மை வேட்பாளரான ரட்னவும் அதே பூமியில் தந்தையின் கூட்டுடன் இயங்கும் பவித்ர குமாரியும் முன்பு ஒரே கோர்ட்டில் ஒன்றாக வாதாடியவர்கள். சென்ற தேர்தலில் ஒரே வீட்டில் இவ்விரு சட்டக்காரர்களும் துப்பாக்கிச் சூடு, குண்டடி, கார் எரிப்பு என கோர்ட்டிற்கே செல்ல வேண்டியதாயிற்று.

நீறு பூத்த நெருப்பு போல் இருந்த இந்தக் குமுறல் இப்பொழுது மீண்டும் புகை விட்டு எரிய ஆரம்பித்து விட்டதாம்.

போகும் இடம் எல்லாம் மோதலாம். வழமையாக தனது தொகுதியைக் கோட்டை விடும் காவத்தை நாயகன் இந்த உள்வீட்டு சண்டையால் பச்சை வயலில் அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ளது என்கிறாராம்.

## திசை மாறிய தலையிடி

முருகனின் புனித பூமியில் திசை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த பச்சை வயல் காரனை இங்கே கொண்டு வந்து போட்டது தனக்குப் பெரும் தலையிடியாகி விட்டது என அடித்துக் கொள்கிறாராம் பஸ்ஸில் போய் பெருந் தெருவுக்கு வந்த பௌமியமானவர்.

இதை அறிந்த முன்னாள் பச்சை வயல்காரர் மர் மர் வின் வின் என தெருவில் நிற்பவர் மேல் பாய்கின்றாராம். பாவம் பௌமியமானவர் மீனவத்தலைவன் மஹிந்தனிடம் முறையிட்டாராம்.

இவருக்குத் தெரியாதா திசை மாறாமல் நின்று தனக்கு தலையிடி கொடுத்துக் கொண்டிருந்தவரை மர்மமாக அதிஉத்தமியின் காலில் விழ வைத்து கொழும்பில் குடியேற்றியவரே இந்த மஹிந்தன் தான் என நீலக் கடலில் உள்ளவர்கள் நக்கலடிக்கின்றனராம்.

## பிரேமையின் திசைமாறா தாக்கம்

தந்தையின் வழியில் திசைமாறாமல் நின்று ஏழைகளின் தோழன் ஆகி விட்டாராம் பிரேமையின் மைந்தன். எங்கு சென்றாலும் ஏக வரவேற்புண்டாம். இதைப் பொறுக்க முடியாத மஹிந்த சகோதரங்கள் 1983 ஆம் ஆண்டை நினைவுபடுத்தி அட்டகாசம் புரிகின்றனராம். பிரேமையின் மைந்தனை இல்லாமல் ஒழிப்பதே திட்டமாம்.

ஆனால் இப்போது இளைய குமாரன் மீது அனுதாப அலை ஓசை அதிகரித்து விட்டதாம். இதனால் மீனவத்தலைவனுக்கு எதிராக பிரேமையின் தாக்கம் ஒரு பக்கம் விருப்பு வாக்கு வேட்டையில் தலை கொடுப்பான் தம்பி என்பது மாறி தலை எடுப்பான் தம்பி என்றாகி விட்டதாம். உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்ட தாக்கம் மீனவத் தலைவனை தடுமாற வைத்துள்ளதாம்.

## வழிகாட்டியும் நீங்களே

ஒளிமயமான ஹோட்டலில் யோகமானவர் — சுவாமிகள் ஒன்று கூடல் ஒன்று நடைபெற்றதாம். அங்கு பேசிய எல்லோரும் தமிழரின் வாக்குகள் தமிழருக்கே என்ற கருத்தை வலியுறுத்தினார்களாம், பெருந் தலைவர்கள் எல்லோரும் தமிழ் வாக்காளர்கள். பெரும்பான்மையினருக்கு வாக்களித்துப் பழகிவிட்டனர். இதனால் தான் தமிழர்களின் ஓட்டுகள் பிரிந்து தமிழர்களை தோல்வி அடையச் செய்து விடுகிறது என்று வாக்காளர்கள் மீது குற்றம் சுமத்தினார்களாம்.

சும்மா இருப்பார்களா இந்த புத்திஜீவிகள்! துணிச்சலான ஒருவர் மேடைக்குச் சென்று நீங்கள் தானே ஐயா அவர்களை அழைத்துக் கொண்டு தோட்டம் தோட்டமாக வந்து இவரும் என்னுடன் ஒரே கட்சியில் போட்டியிடுகிறார். இவருக்கு ஒரு வாக்கைப் போடுங்கள் என்று வழிகாட்டினீர்கள், இப்பொழுது அது பழக்கமாகி விட்டது. இதற்குக் காரணம் நீங்களே என ஒரு போடு போட்டாராம். சுவாமியார் அதைக் கண்டு கொள்ளவில்லையாம். ஒருவாறு யோகமானவர் நிலைமையைச் சமாளித்தாராம்.

## ஆதித்திராவிடமும் மூவேந்தர் குலமும்

ஊவா மாகாணத்தில் ஜாதிச் சண்டை ரோட்டுக்கு வந்து விட்டதாம். ஜாதியைச் சொல்லி வாக்கு கேட்கும் கேவல நிலைக்கு வந்து விட்டார்களாம் தமிழ் வேட்பாளர்கள். ''முக்குலத்து மேலோர்'' என்றும் ''ஆதித்திராவிடர்'' என்றும் துண்டுப் பிரசுரங்கள் தூள்கிளப்புகின்றனவாம்.

இது தொடர்பாக முருகன் கை வேலனிடம் கேட்டாராம் பேனாக்காரர். ஆமாம் சேர, சோழ, பாண்டிய மன்னர் வழியில் வந்த முக்குலத்தோரும் நாங்களே. திராவிடமொழிகளில் ஒன்றான தமிழை தாய் மொழியாகக் கொண்ட ஆதித்திராவிடர்களும் நாங்களே! எங்கள் மீது சேறைப் பூச சிலர் செய்த சூழ்ச்சி அவர்களுக்கே ஆபத்தாகி விட்டது. நாம் இப்படி சின்னத்தனமான வேலையை செய்ய மாட்டோம்'' என்றாராம் வெற்றி வேலன்.

## அறியாமல் செய்யும் சிறியோர்

கொட்டாஞ்சேனை சந்தியில் இருபகுதி தமிழ் வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு இடையில் குடுமி பிடியாம். யோகமானவரினதும் சுவாமிகளினதும் ஆட்கள் இரண்டு இலக்கங்களை சொல்லி ''இவை இரண்டிற்கும் போடுங்கள் மூன்றாவது வாக்கை நமது தமிழ் வேட்பாள ருக்கே போடுங்கள்'' என்று கூறிக் கொண்டு சென்றனராம்.

அதேவேளை மனோகரமானவரின் ஆட்கள் ஒரு இலக்கத்தை சொல்லி இதற்குப் போடுங்கள். மற்ற இரண்டையும் இந்த நானாவுக்கு ஒன்றும் அந்த மாத்தயாவுக்கு ஒன்றும் போடுங்கள் என்று கூறிக் கொண்டு சென்றார்களாம். இதனால் வாக்காளர்கள் மத்தியில் பெரும் குழப்பமாம்.

யோகமானவரின் காரியாலயத்திற்குப் படை எடுத்தவர்கள், ''என்ன ஐயா நீங்கள் மூன்று தமிழர்களுக்கும் போடச்சொல்கின்றீர்கள் ஆனால் அவர்கள் ஒன்றுக்கு மட்டும் போடச் சொல்கின்றார்கள்'' என்று கதை கொடுத்தனராம். அதைக் கேட்ட யோகமானவர் சிரித்துக்கொண்டே அவர்களும் இல்லை, இவர்களும் இல்லை. எல்லாரும் நம்மவர்கள், அறியாமல் செய்வார் சிறியோர். நாம் பெரியோர் அதைப் பொறுப்போம் என்றாராம்.

# வன்னி மாவட்ட மக்களின் வாக்கு இம்முறை யாருக்கு?

**திருகோணமலை மாவட்டத்தைப்போன்று இம்முறை வன்னி மாவட்டமும் நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. ஐந்து வாக்காளர்களின் கருத்துக்களை சுடர் ஒளி செய்தியாளர் தொகுத்து அனுப்பியுள்ளார். படியுங்கள்.**




### நியூட்டன் (தரணிக் குளம்)

கடந்த வருடமும் தேர்தல் வந்தது. அன்று எமது வேட்பாளர்கள் எமது கிராமத்துக்கு வந்தனர். இதற்கு முன்னர் காணாதவர்கள் எல்லாம் வந்தனர். வாக்குறுதிகளை அள்ளி வீசினர்.

தேர்தல் முடிந்தது. வாக்குக் கேட்டு வந்தவர்கள், வெற்றி பெற்றனர். அதன் பின்பு இம்முறையே அவர்களை மீண்டும் காண்கிறோம்.

இம்முறை வாக்குக் கேட்டு வருபவர்களுக்கு எமது கிராம மக்கள் சார்பில் ஒன்று கூற விரும்புகின்றேன். எங்களின் வாக்குகளைப் பெற்றுத் தான் நீங்கள் நாடாளுமன்றம் போகிறீர்கள். இதனை நீங்கள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எனவே நீங்கள் வெற்றி பெற்றாலும் சரி தோல்வி அடைந்தாலும் சரி உங்களின் தேர்தல் தொகுதியில் உள்ள எங்களைக் கவனியுங்கள். எங்களின் நிலையை வந்து பாருங்கள். இதுதான் எங்களின் வேண்டுகோள்.

### முகமட் கறீம் (பட்டானிச்சூர்)

எங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தான் தஞ்சம் என்று கடந்த தேர்தல் வரை நம்பினோம். ஆனால் இம்முறை அந்த நம்பிக்கை போய் விட்டது. இந்தத் தேர்தலில் வவுனியா முஸ்லிம் களுக்கு பெரும் துரோகம் இளைக்கப்பட்டுவிட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை நிறுத்திய வேட்பாளர்களில் மூன்று முஸ்லிம்கள் மன்னார் மாவட்டத்தையும் ஒரு முஸ்லிம் முல்லைத்தீவு மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள். ஆனால் 7000 முதல் 8000 வரையிலான வாக்காளர்கள் உள்ள வவுனியாவைச் சேர்ந்த முஸ்லிம் எவரும் வேட்பாளராக நிறுத்தப்படவில்லை.

இதற்கு முஸ்லிம் காங்கிரஸ் கூறும் காரணம் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. ரவூப் ஹக்கீம் – ரணில் ஒப்பந்தம் தான் இதற்குக் காரணம் என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது. அனைத்து முஸ்லிம்களும் நினைத்தால் நிச்சயமாக அவர்களுக்கு சாட்டை அடி கொடுக்க முடியும்.

எமது வவுனியா வாழ் முஸ்லிம் மக்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். முஸ்லிம் காங்கிரஸ் எங்களுக்கு ஒரு பிரதிநிதியை நிறுத்தாததினால் நாம் எங்களுக்கு ஒரு பிரதிநிதியை நிறுத்த நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளோம். எங்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர் எங்களின் வீட்டுப் பிள்ளை ஜி.எஸ். ஆப்தீன்தான்.

### பொன்னையா நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் – வவுனியா)

எதிர்வரும் தேர்தலைப் பொறுத்த மட்டில் இத்தேர்தல் ஒரு பாரிய திருப்பு முனை. அதாவது தமி ழர்களுக்கு இது ஒரு திருப்பு முனை.

அன்று வெள்ளைக்காரன், உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்ட போது, எங்களுக்கு ஒன்றும் வேண்டாம் நாங்கள் ஒற்றுமையாக இருப்போம் என்று அன்றைய தலைவர்கள் கூறினார்கள். அவர்கள் அன்று விட்ட தவறு தான் இன்று எமது பிள்ளைகளை ஆயுதம் ஏந்த வைத்து விட்டது.

பழையதைக் கதைத்து இன்று எதுவித பிரயோசனமும் இல்லை. இன்றைய தமிழ்க் கட்சிகளின் கூட்டுப் பற்றிச் சிந்திப்போம்..

நீண்ட நாட்களாக முரண்பட்டு நின்ற தமிழ்க் கட்சிகள் இன்று ஏன் புரிந்துணர்வுக்கு வந்துள்ளன என்பது பெரும்பா லான மக்களுக்குத் தெரியவில்லை. இந்த கூட்டமைப்பினர் தாங்கள் புலிகளின் பிரதிநிதிகள் போன்று பிரசாரம் செய்கின்றனர். ஒருவேளை கூட்டமைப்பு தனது குறிக் கோளை எட்டாத பட்சத்தில் கூட்டமைப்பின் நிலை என்ன?

கூட்டமைப்பு தேர்தலுக்காக ஒன்று சேர்ந்துள்ளதாக எதிரணியினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இதனை கூ ட்டமைப்பு மறுக்கின்றது. எனது வேண்டுகோளும் அதுதான். வெறுமனே தேர்தலுக்காக அன்றி தமிழர்களின் உரிமையினை மீட்பதற்காக கூட்டமைப்பு இயங்க வேண்டும்.

### ராமசாமி அருள் (தரணிக்குளம் மீள் குடியேற்றத் திட்டம்)

தமிழனுக்கு ஒரு நல்ல பழக்கம் உண்டு. நன்றிக் கடன். செய் நன்றிக் கடன்.

நாங்கள் பல்வேறு இடர்களின் மத்தியில், சொல்லொன்னாத் துயரங்களின் மத்தியில் அகதி முகாம் என்ற சிறைச் சாலைக்குள் அடைபட்டு 5 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தோம்.

எமது கஷ்டத்தை நீக்க எவரும் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வில்லை. உரியநடவடிக்கை ஒன்றினை எடுத்தார் என்றால் அது டக்ளஸ் தேவானந்தாதான். அவர் தனது காசைக் கொண்டு இந்த வீட்டினைக் கட்டித் தரவில்லை.

இதே சமயம் வவுனியாவில் அவர் வந்து நின்று பலருக்கு காசு கொடுத்தார். அதுவும் அவரது காசு அல்ல என்பது எமக்குத் தெரியும். ஆனால் எனது வாக்கு டக்ளஸிக்கே.

### ராஜா (கோவில் குளம்)

எங்களின் கிராமத்தைப் பொறுத்த மட்டில் ஒரு இக்கட்டான நிலையில்தான் அனைவரும் உள்ளனர். அதாவது ஆரம்பகாலத்தில் எமது கிராமத்துக்கு ஒரு ஊன்று சக்தியாக இருந்தவர்கள் புளொட் அமைப்பினர் தான்.

குறிப்பாக 1994 க்கு முன்னர் எம் கிராமத்தில் சிங்களவர்களின் அச்சுறுத்தல் இருந்து வந்தது. அப்படியான சமயங்களில் எம்மையும், எமது கிராமத்தையும் பாதுகாத்தவர்கள் புளொட் அமைப்பினரே. அன்றைய புளொட் தலைவர்கள் மிகவும் துணிச்சல் காரர்கள். மக்களுடன் ஒத்துப் போகக் கூடியவர்கள்.

அவர்களின் மீது எமது கிராம மக்களும் வன்னி வாழ் மக்களும் நம்பிக்கை வைத்திருந்தனர். இதன் காரணமாக 1994 ஆண்டு தேர்தலில் அவர்கள் 3 ஆசனங்களைப் பெற்றனர்.

ஆனால் அவர்கள் நாடாளுமன்றம் சென்று என்ன செய்தனர்? எமக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட சட்டம், ஒடுக்கு முறை என்பவற்றுக்கு ஆதரவாக செயற்பட்டனர்.

இது நியாயமான ஒன்றா? எமக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கை எடுக்கப்படும்போதும், எமது சார்பாகக் குரல் கொடுக்கத்தான் எமது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்புகிறோம். அவர்கள் அங்கு சென்று எமக்கு எதிராக செயற்படுகிறார்கள் என்றால் பிறகு அவர்கள் எதற்கு? இதன் எதிரொலிதான் கடந்த தேர்தல் முடிவு. ஒரு தொகுதியிலாவது அவர்கள் வெற்றி பெற முடியவில்லை.

புளொட் அமைப்பு மீண்டும் பழைய நிலைக்குச் சென்றால்தான் மீண்டும் வன்னித் தேர்தல் தொகுதியில் ஒரு ஸ்திரமான நிலையினை அடையமுடியும். எதிர்வரும் தேர்தலில் மக்கள் சிந்தித்துத் தான் செயற்படுவார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

– மகாமுனி

---

## விடிகாலை

விடிகாலை நேரம்
இடை விடாது கூவிய சேவல்
தளர்த்தப்படாத ஊரடங்கைப் பற்றி
சூரியனுக்கு எச்சரிக்கை செய்கிறது.
சுற்றி வளைக்கும் அட்டூழியப் படைகள் போல
அடிவானிலும் கரு மேகக் கூட்டங்கள்
எறிகணைகள் வருமோ எனக் கலங்கி
வேப்பமரத்துக் கரிச்சான் குருவியும்
வெடிவாலைக் கிளப்பி எங்கோ பறக்கிறது
மேச்சல் நிலத்திலும் மிதிவெடிகள் என்று
தாய்ப்பசு அலறிக் கன்றுக்கு
ஆலோசனை கூறியது.
தெரு நாய்கள் ஊர்க்கோடியில்
கூடித் தேர்தலைப் பற்றித்தான் தில்லுமுல்லுப் பட்டன.
நிவாரணம் நிறுத்தப்பட்டு நீண்ட நாட்களாகியதால்
உலைப் பானைகளும் தேடுவாரற்றிருந்தன.
பாதிவயிறோ? பட்டினியோ? எப்படியோ:
வழமை போல சராசரித்
தமிழரொருவனின் பகற் பொழுது கழிகிறது.
தமிழர்களின் உணர்வுகள் தூங்கும் வரை
இப்படித் தான் விடிகாலைகள்
புலரப்போகின்றன.

– உசன் திவ்யன்

## காதல் தோல்வியால் வருவது!

வதனம் பொலிவிழந்து
மனது உடைந்து
வார்த்தைகள் தடுமாறி
வழமையான பழக்கங்கள்
திசைமாறி
மகிழ்ச்சி குன்றி
வாழ்க்கை வெறுத்து
வாழ்வை இழக்கும்நிலை
வருவது காதல்
தோல்வி வரும்போது!
மாசடையும் நட்புக்கல்ல!

– அ. அங்கயக்கன்னி,
சேனையூர் – 06.

## நம்பிக்கை வேண்டும்

*இங்கேதான் இன மத மொழி*
*இல்லை என்று*
*இரும்பு கொண்டு*
*எழுதி வைப்போம்!*
*தோல்விகள் எம்மை*
*துரத்தும் போதெல்லாம்*
*எங்களூர் மலைகளைப் பார்த்து*
*எங்கள் தோள்களை*
*நிமிர்த்துவோம்!*
*கொடிய இராப்பொழுதிலும்*
*விடியும் என்ற நம்பிக்கை*
*நிதர்சனமாய் என்றும்*
*நிறைந்து நிற்கட்டும்!*

– சு. பேரின்பநாயகி

## நான் செத்துப் போனேன்

சொல்லாமற் கொள்ளாமல் சூடிறங்கி உடல் குளிர
எல்லாம் சடுதியாய் நின்று போய் மூச்சடங்க...
சட்டென்றிதயம் சத்தம் விட்டடங்க, ரெத்தம்
திட்டாய் மென் சவ்வுத் திண்மமாய் ஆகியது.
கட்டி இத்தனை காலமாய்க் காத்த உடல்
வெட்டிய மரம் போல வீழ்ந்து கிடக்கிறது:
உணர்வில்லை, அதில் உச்சமென்று சொல்லுதற்கு
நிணநீர் தவிர இப்போ நிச்சயமாய் எதுவுமில்லை.
பிணமாகிப் போனேன் பேரிழந்து, – நேரம் போய்
கணச்சூடு கூட காலாவதியாகியது
எனக்குள்ளே இருந்த எண்ணங்கள், சிந்தனைகள்
மனக்குமுறல்கள், மார்படைத்த நினைவலைகள்...
எல்லாம் போயிப்ப ஏதுமற்ற வெளியாகி
மெல்லிய வெளிராக மூளை உள்ளே...
இப்போது என்னுடலில் எதுமிகப் பிரதானம்
முப்போது தெரிந்த முனிவர்கள் அறிவாரோ?
தாய் தடவி விட்டதலை, தளிர்போன்ற நீள்மூக்கு
வாயில் வடிவென்று அவள் சொன்ன மேலுதடு
சின்ன ஒளிவிழிகள், சீரிய மொழி நாக்கு
கன்னிக்கிருப்பது போற் கை நகங்கள் –
அவளொன்றும்
விரும்பிச் சரிகின்ற மேல் நெஞ்சு
அரும்புமுடி, கோபம், கொழுத்த புஜம்
குளுகுளென்ற கைகால்கள் – காமத்
தாபம் இழந்த தலை அங்கம் – எல்லாமே
ஏன்? என்று தெரியாமல் இயல்பை இழந்துவிட
நான் செத்துப் போனேன்... நடந்து...

பண்டிதர்

## எலக்சன்

செலக்சன் பண்ணச் சொல்லி – ஒரு
எலக்சன் வைக்கின்றார்கள் – வோட்டு
கலக்சன் ஆகியதும்...
வேட்பாளர் வீசிய வாக்குறுதி
கேட்பாரற்றுக் காற்றில் பறக்கும்!
வாக்காளர் எல்லாம்
கனவுகள் கலைய
கவலைகள் சுமந்து
எதிர்வரும் தேர்தலை
எதிர் பார்த்துக் காத்திருப்பார்கள்!
ஏமாற்ற யார் வருவார்
பொறுத்திருந்து தான் பார்ப்போமே?
ஆனாலும்...
இது ஒரு
விடியலின் தேர்தல்
ஆதிக்க ஆட்சியின் அழுத்தங்களுக்குள்
அகப்பட்ட
அன்னத்தைத் தமிழை
மீட்டெடுப்பதுடன்
புது விடியலில் நீராட
வாக்காளரே!
சிந்தித்து செயற்படுங்கள்
உங்கள் உரிமையை வென்றிட!

கவிசுகி, குருநகர்.

## அன்னை

கருணையின் வடிவம் அன்னையே – அவர்
காட்டிய அகிம்சை நெறிதனிலே
காலமெல்லாம் வாழ்ந்திடுவோம் – அவர்
கண்ட கனவை நனவாக்கிடுவோம்

பத்து மாதம் சுமந்தெடுத்து
பக்குவமாய் வாழவைத்த – அன்னையே
உம்மை வாழ்த்திடுவோம்
எப்போதும் உம்மை வணங்கிடுவோம்

அன்றாடம் எமக்கு உணவைத் தருவீர்
அடியவரை என்றென்றும் காத்தருள்வீர்
தப்பேதும் நாம் செய்திட்டால்
தயவுடனே எம்மை மன்னிப்பீர்
அலையும் மனதை அடக்கியே
அறிவை நன்கு பெருக்கிடவே
வழிகள் சொன்ன அன்னையே
வாழ்நாள் முழுவதும் உன்னை வணங்கிடுவோம்

– திவாகரன், வவுனியா.

## சமாதானம்

துப்பாக்கிகளை முத்தமிடும் ஜீவன்களும்
ஜீவன்களை முத்தமிடும் துப்பாக்கிகளும்
இருக்கும் வரை
நாடு சமாதானத்தை முத்தமிடாது!

ஆர். கே. மேனன்

## என்னுயிரே பிரியாதே

நானே நீயாகி நீயே நானாகி
போன பின்பும் எனக்கில்லாத
மதிப்பு உண்டு அதிகம் தான்.
அன்பே நீயின்றி என் வாழ்வில்லை
என்பது
உனக்கு தெரியாதா மறந்து நீ
என்னை பிரிந்தால் என் செய்வேன்
நான் உலகில்.
என் உறவுக்கு உறவாளி
உயிருக்கு காவலாகி
உடன் இருக்கும் அடையாள அட்டையே
பிரியாதே என்னைவிட்டு

ஆ. ஆன் கவிதா, சுண்டுக்குளி.

## சந்தோஷம் தராது!

சமத்துவம் இல்லாத சுதந்திரம்
சாத்தியப்படாது!
சண்டை நிறுத்தம் இல்லாத
பேச்சுவார்த்தை
சரிவராது!
சமய அனுஸ்டானம் இல்லாத
வாழ்க்கை
சந்தோஷத்தைத் தராது!
சந்தேகம் கொண்ட உறவு
நீடித்து வளராது!
சகோதர பாசம்
விட்டுப் போகாது!
சான்றோர் அறிவுரையை
மீறக்கூடாது!
தாய் சொல்லை ஒருபோதும்
தட்டிக்கழிக்கக்கூடாது!

– அ. அரசரெத்தினம்,
சேனையூர் – 06.

## காதலிக்கு

அன்று உன்னை கண்டேன்
என் நண்பியாக
இன்று உன்னை கண்டேன்
என் காதலியாக
நாளை உன்னை காண்பேன்
என் மனைவியாக
முடிவில் உன்னை காண்பேன்
என் குடும்பமாக
எப்போது உன்னை காண்பேன்
என் மனதில் நிஜமாக

– சுகந்தினி, மூதூர்.

# வன்முறைக் களமாக மாறும் மட்டக்களப்பு தேர்தல் களம்

## தோல்வியை எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்? இதுவே பெரிய கேள்வி

மட்டக்களப்பு தேர்தல் களம் படிப்படியாக வன்முறைகள் நிறைந்த ஒரு களமாக மாறிவருகின்றது. இங்கு போட்டியிடும் ஒரு சில அரசியல்வாதிகள் ஜனநாயக வழிமுறைகளைக் கைவிட்டு அராஜகத்தின் மூலம் ஆசனங்களைக் கைப்பற்றி விடலாம் என்று நினைக்கிறார்கள் போல் தெரிகின்றது. அதிலும் குறிப்பாக அதிகாரத்தை தமது கைகளில் வைத்துள்ள தரப்பினர்தான் அதிகமான வன் முறைகளிலும், முறைக்கேடுகளிலும் இங்கு ஈடுபட்டு வருகின்றனர் என குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு தேர்தல் களத்தில் இம்முறை பாரிய நெருக்கடிகளைச் சந்தித்துவரும் ஆளும் பொ.ஐ.



தாக்குதலில் காயமடைந்த ஐ.தே.க வேட்பாளர் சிதரன்

முன்னணியும், அதன் தோழமைக்கட்சிகளும், தமது அரசியல் எதிரிகளை பயமுறுத்துவதன் மூலமும், அவர்களுக்கெதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலமும் ஓர் ஆசனத்தையாவது கைப்பற்றிவிடவேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன. அவற்றின் தேர்தல் இயலாமைகள் பல சந்தர்ப்பங்களில் அரசியல் வன்முறைகளாக வெடித்து விடுவதையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.க சார்பாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவர் மீது காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், மர்சூர் படுகாயம் அடைந்து மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதே போன்று ஐ.தே.கட்சியின் மற்றொரு வேட்பாளரான சசிதரன் என்பவர் மீதும் அண்மையில் ஒரு கொலைமுயற்சி இடம்பெற்றது. மட்டக்களப்பு நகரின் மத்தியிலுள்ள அவரது இல்லத்தின் மீது நள்ளிரவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி தமது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சகிதம் உட்புகுந்த எதிரணி வேட்பாளர் ஒருவர், சசிதரனையும், அவரது மனைவியையும் தாக்கியுள்ளார்.

சசிதரனின் மனைவியை தாக்கியசிலர் அவரது ஆடையைக் கிழித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வேட்பாளருடன் வந்திருந்த அவரது ஆதரவாளர்கள் வீட்டிலுள்ள தளவாடங்களையும் அடித்து நொருக்கியதுடன் தங்க நகைகள் உட்பட வீட்டிலிருந்த சில பொருட்களையும் எடுத்துச் சென்றனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சசிதரன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 17 ஆம் திகதி ஐ.தே.க வின் மற்றொரு வேட்பாளரான தம்பிராஜா ஜெயக்குமார் என்பவர் இனந்தெரியாத ஆயுததாரி ஒருவரால் ஒந்தாச்சிமடம் என்ற இடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணி பற்றி பல் வேறு ஊகங்கள், அபிப்பிராயங்கள் வாக்காளர்களால் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எனினும் இந்தக் கொலைச் சம்பவத்திற்குப் பின்னால் பொ. ஐ. முவினர் அல்லது அதன் தோழமைக்கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்று கொலை செய்யப்பட்ட நபரின் நெருங் கிய உறவினர்களும், அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் தெரிவிக்கின்றார்கள்.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரத்தைக் குழப்பும் கும்பல்.

பொ. ஐ. மு. அரசில் அங்கம் வகித்த முன்னாள் பிரதி அமைச்சரின் உறவினர் ஒருவர் த.வி. கூட்டணி நடத்திய பிரசாரத்தின் போது குழப்பம் விளைவித்தார் என்றும், கூட்டணி தொண்டர்களைத் தாக்கினார் என்றும் பொலி ஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் பொலிஸ், இராணுவத்தின் துணை கொண்டும், தமது உச்ச அதிகாரங்களைப் பாவித்தும், எதிர் முகாம்களைச் சேர்ந்தவர்கள் மீது அச்சுறுத்தலை ஏற்படுத்தியும் வருகின்றனர். அதேவேளை, அரசின் தோழமைக் கட்சிகளும் இதே வகையிலான வன்முறைகளை மேற் கொண்டு வருவதை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

நவீன ஆயுதங்களுடன் வாக்கு வேட்டை நடத்திவரும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் மற்றைய வேட்பாளர்களுக்கு பல வழிகளிலும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறார்கள்.

'புளொட்' அமைப்பு சார்பாக தேர்தலில் போட்டியிடும் பிரபா என்பவர் த.வி.கூ. தொண்டர்களை அச்சுறுத்தினார் என்று கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேபோன்று வேறொரு சம்பவத்தில் த.வி.கூ. ஆதரவாளர்கள் மூவர் ஆரையம்பதி என்ற இடத்தில் வைத்து 'புளொட்' உறுப்பினர்களால் தாக்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

மற்றொரு சம்பவத்தில் பிரசாரத்திற்குச் சென்ற கூட்டணி வேட்பாளர் ஒருவரை சிலர் ஆயுதங்களைக் காண்பித்து மிரட்டி திருப்பியனுப்பியுள்ளார்கள்.

இதேபோன்று, முஸ்லிம் பிரதேசங்களான காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூர் போன்ற இடங்களிலும் ஆயுதங்களுடன் திரியும் பல குழுக்கள் பலவிதமான வன் முறைகளில் ஈடுபட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. மாற்றுக் கட்சி வேட்பாளர்களையும், ஆதரவாளர்களையும் தாக்குவது, அவர்களை அச்சுறுத்துவது போன்ற நிகழ்வுகள் இங்கு சாதாரணமாகவே இடம்பெற்று வருகின்றன.

இலக்கத்தகடு பொருத்தப்படாத வாகனங்களில் திரியும் பொ.ஐ.மு. குண்டர்களே இது போன்ற வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், ஒரு பாரிய தேர்தல் மோசடியைச் செய்வதற்கு இவர்கள் திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க முதன்மை வேட்பாளர் அலிஸாகிர் மௌலானா தேர்தல் ஆணையாளரிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

ஓர் ஆரோக்கியமான தேர்தல் போட்டியை ஜனநாயக ரீதியாக எதிர்கொள்ள முடியாத, தெரியாத அரசியல்வாதிகள் இந்தத் தேர்தலில் அவர்களுக்கு ஏற்படக் கூடியதான தோல்வியை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பது இங்குள்ள வாக்காளர்களிடம் காணப்படுகின்ற ஒரு மிகப் பெரிய கேள்வி.

—சாத்வீகன்

# ராசி பலன்

**02.12.2001 முதல் 08.12.2001 வரை**
**பொ.சந்திரன்.**

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

செவ்வாய், ராகு, கேது போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சந்திரன் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை வெற்றிகரமாக நிறைவேற்றலாம். வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. உடலில் உள்ள நோய்கள் விலகி ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் பெரிதாக லாபம் இருக்காது.

### இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

குரு, புதன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், சந்திரன் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாக நிறைவேற்றலாம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. தேக சுகம் சில சமயம் பாதிப்படையலாம். தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் இருக்காது.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

சூரியன், செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயல் தாமதமாகலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உடலில் உள்ள நோய்கள் விலகும். பிரயாண வாய்ப்புண்டு. தொழில்துறை சீராக முன்னேறும். நண்பர்களால் உதவி இருக்கும். தெய்வ அனுக்கிரகம் பெரியோரின் ஆசி கிட்டும்.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேதுக்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை தாமதமாக நிறைவேற்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறை சீராக இருக்கும். பிரயாண வாய்ப்புண்டு.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

சூரியன், புதன், சுக்கிரன், குரு போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, சனி ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறை சீராக முன்னேறும்.

### கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

சுக்கிரன், செவ்வாய், சூரியன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, குரு ஓர் அளவு நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு. உடல் சுகம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறை முன்னேறும்.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். கேது, சூரியன் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை ஓர் அளவு சிரமப்பட்டே செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

### விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

சுக்கிரன், செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், புதன் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை நல்ல முறையில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

குரு, சந்திரன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சனி, சூரியன் ஓர் அளவு நன்மை செய்யலாம். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். எடுத்த செயலை தாமதமாக நிறைவேற்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு, பிரயாண வாய்ப்புண்டு. உடல் சுகம் சிறிது பாதிப்படைய வாய்ப்புண்டு. தொழில்துறை சீராக முன்னேறும்.

### மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

புதன், சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேதுக்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம், கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இராது. வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் உதவி இருக்கும்.

### கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

குரு, புதன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், கேது ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் நிறைவேற்றலாம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில்துறை முன்னேறும்.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

புதன், சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, குரு ஓர் அளவு நன்மை செய்யலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

# சாதிகள் இல்லையடி...

— ச. கவிதா —

சுடர் ஒளி சிறுகதை

'கதிரவன் தன் கதிர்களைப் பரப்பிக் கொண்டு இருள் என்னும் அவனது எதிரியைத் துரத்திக்கொண்டு மேலெழுந்தான். அதிகாலையில் எழுந்தவள்தான் அனுராதா. பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள். தன் இரு பிள்ளைகளையும் பாடசாலைக்குத் தயார்செய்து அனுப்பிவிட்டு, கணவனுக்கு மதிய உணவைக் கட்டிக்கொடுத்து, அவனைச் சாப்பிடவைத்து, வேலைக்கனுப்பிவிட்டு, நிமிர்ந்தபோது நேரம் பத்துமணி.

அப்பாடா. நிம்மதியாக இருந்தது. காலை நாலுமணிக்கு எழுந்தால் பத்து மணிவரை ஓயாத வேலை. அதன்பிறகு இரண்டு மணிவரை அமைதிதான். மெதுவாக தந்தையின் அறையை எட்டிப்பார்த்தாள். அவரைக் காணவில்லை.

மேசையில்வைத்த ரீ ஆறி—ஆடைபிடித்திருந்தது. கவலை தோய்ந்த மனதுடன் அதை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். தந்தைக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் ரீவைப்பது அவள் வழக்கம். அதைத் தொடாமல் வெளியேறுவது அவர் வழக்கம். இன்று மட்டுமல்ல. கடந்த பத்து வருடங்களாகவே அவர் இப்படித்தான்.

மகளிடம் எதுவுமே சாப்பிட மாட்டார். பச்சைத் தண்ணீர் கூடக் குடிப்பதில்லை. எல்லாம் வெளியேதான். தண்ணீரைக்கூட வெளியிலிருந்து தான் எடுத்துக் கொண்டு வருவார்.

சாப்பாடு மட்டுமா? வீட்டில் அனுவைத் தவிர யாருடனும் பேசமாட்டார். அனுவிடம் தேவையென்றால் மட்டும் ஓரிரு வார்த்தை பேசுவார். அதுவும் அவள் கணவன் அரவிந்தைக் கண்டால் போதும், அந்த இடத்திலேயே நிற்கமாட்டார்.

என்னுடன் அன்பாக இருந்த அப்பா இன்று இப்படி விலகி விலகிப் போவதற்குக் காரணம் நான்தானே? எனது பிடிவாதத்தால்தானே அவர் இப்படியிருக்கின்றார். ஆனால் நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றேன்? ஏன் தன்னை அவர் மாற்றிக் கொள்ளவில்லை?' அனுராதாவின் மனது அடிக்கடி கவலையில் உழன்றுகொண்டிருக்கும். அவளின் எண்ண அலைகள் கடந்தகாலத்தை நோக்கிச் சென்றன.

* * *

"அனுக்குட்டி. அனு..." கூப்பிட்டபடி வந்தார் தந்தை தியாகராஜன்.

என்னப்பா? சமையல் கட்டில் வேலையாக இருந்த அனுராதா எட்டிப் பார்த்தாள். "இங்க வாம்மா. இதக் கொஞ்சம் பார்த்துட்டுப் போ" கூறியவர் கையில் இரண்டு போட்டோக்கள். வாங்கிப் பார்த்தவள் அதிர்ந்தாள். இரண்டும் வாட்டசாட்டமாக இருக்கும் இரு இளைஞர்களின் போட்டோக்கள்.

"எ — எதுக்குப்பா இதெல்லாம்?"

"இதுல எந்தப்பையனைப் பிடிச்சிருக்கெண்டு சொல்லும்மா. இந்தப் பையன் டொக்டரா இருக்கான். இந்தப் பையன் கொழும்பில் பிஸ்னெஸ் செய்றான். நாலஞ்சு கம்பனிகளுக்கு முதலாளி. ரெண்டுபேரும் நம்ம ஜாதிக்காரங்க தான். அவர் முகத்தில் பெருமிதம் தெரிந்தது.

அனுவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன்னுடைய மனதில் இருப்பதைக் கூறிவிட நினைத்தாள். ஆனால் முடியவில்லை. பயத்தில் கைகள் நடுங்கின. நாக்கு வரண்டு போக—முகம் வியர்த்துக் கொட்டியது.

"என்னம்மா? உனக்குப் பிடிக்கலியா? பரவாயில்லை. வேற பையனைப் பார்க்கலாம். நீ கவலைப்படாதம்மா. நம்மிடமிருக்கும் பணத்துக்கும், உன்னுடைய அழகுக்கும் போட்டி போட்டுக் கொண்டு வருவாங்க." கபடமில்லாது கூறினார்.

இனியும் மறைப்பதில் பயனில்லை தீர்மானித்தவள், தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அருகே கிடந்த ஸ்ரூலில் இரண்டு போட்டோக்களையும் வைத்தாள். "அப்பா, நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்க மாட்டீங்களே?"

"என்னடா? நீ கேட்டு நான் தப்பா நினைக்கிறதா? சொல்லும்மா. என்ன விஷயம்?"

"நான் — நான் ஒருத்தர விரும்புறனப்பா..." அதிர்ச்சி அப்பட்டமாய் அவர் முகத்தில் தெரிந்தது. அதை மறைக்கப்பாடுபட்டார் அவர். "யாரும்மா அவரு? என்ன வேலை செய்யறார்?"

"அவர் ... அவரு... அரவிந்... பேங்குல வேல செய்யறாரு." திடுக்கிட்டு நிமிர்ந்தார் தியாகராஜன். "யாரு? அந்த தேவராசன் பையனா?" கோபம் அவர் முகத்தில் கொப்பளித்தது.

"ஆமாப்பா." நடுங்கும் குரலில் சொன்னாள்.

தியாகராஜனுக்குப் புரிந்தது. அனுராதா பிடிவாதக்காரி. இந்த விடயம் — கோபப்பட்டால் சரிப்படாது. கண்களை மூடிக்கொண்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். "என்னம்மா இது? அவன் என்ன ஜாதியின்னு தெரியுமில்லையா? நம்ம முன்னாடி கைகட்டி வேலை செய்யிறவன் தேவராசன். அவன் ஜாதிக்கும் நம்ம ஜாதிக்கும் ஏணிவச்சாலும் எட்டாதம்மா. சீசீ... இந்த சம்பந்தம் வேணாம்மா" உறுதியோடு கூறினார்.

"இல்லப்பா. நானும் அவரை மனசார விரும்புறன். அவரில்லா விட்டால் எனக்குக் கல்யாணமே வேண்டாமப்பா. நான் இப்படியே இருந்திட்டுப் போறன்." பிடிவாதம் அவள் குரலில் தெரிய உறைந்து போனார் தந்தை.

அன்றிலிருந்து தந்தைக்கும் — மகளுக்குமிடையே பேச்சுக் குறைந்து விட்டது. ஒரே வீட்டில் இருவரும் நடைப் பிணமாக வாழ்ந்தனர். தியாகராஜன்தான் துடித்துப்போனார். மகளின் பாராமுகம் அவரை வதைத்துக் கொண்டிருந்தது.

தியாகராஜனுக்கு அனுராதா ஒரே மகள். மகளை அவரிடம் தந்துவிட்டு அவரது மனைவி மறைந்து விட்டாள். மகளை அன்போடு தாயாகவும், தந்தையாகவுமிருந்து வளர்த்தார். மகளுக்காகவே மறுமணம் செய்து கொள்ளவில்லை. அவர் பரம்பரைப் பணக்காரர்தான். அனு வந்த நேரமோ... பணம் பெருகியது. மகளின் மனம் நோகும்படி எதுவும் பேசமாட்டார். மிகவும் நல்லவர்தான். ஆனால் அவரிடம் மிதமிஞ்சிக் காணப்பட்டது. சாதிப்பாகுபாடு ஒன்றே.

மகளுக்காகவே வாழ்ந்தவருக்கு, மகளின் விருப்பமே பெரிதாகப்பட சம்மதித்து விட்டார்.

அரவிந் — அனுராதா திருமணம் விமரிசையாக நடைபெற்றது. ஊர் பலதும் பேசியது. "சாதி, சாதி என்று பேதம் பார்ப்பானே. இப்ப என்ன நடந்திடுச்சு பார்த்தியா? இப்பிடித்தான் ஒவ்வொருவன்ர நிலைமையும்... அதிகம் அலட்டினா இதுதான் நடக்கும்..." அவர் காதுபடப் பேசியது. பொறுத்துக் கொண்டார். தனக்குள்ளேயே ஒடுங்கிப் போனார்.

திருமணம் முடிந்ததிலிருந்து தொடங்கியவர்தான். வீட்டில் சாப்பிடுவதையே நிறுத்திவிட்டார். மருமகனிடமோ, இரு பேரக்குழந்தைகளிடமோ கூடப் பேசுவதில்லை.

ஹோலில் பெல் சிணுங்கியது. எழுந்து கதவைத்திறந்தாள் அனு. யாரோ இரண்டுபேர் நின்றிருந்தார்கள். "இது தியாகராஜன் வீடுதானே?" "ஆமாம். நீங்க யாரு?"



"நாங்க சொல்றதக் கேட்டு பதட்டப்படாதீங்க. தியாகராஜன் — அவசரமா சாலையைக் கடக்கும் போது, ஒரு கார் அவர்மேல் மோதி... ரொம்ப சீரியஸா இருக்காரு. ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணிருக்கோம்"

"அ—ப்—பா—... அலறினாள். துடித்தாள். அவர்கள் சென்று விட்டார்கள். சிலகணங்கள்தான். உடனேயே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, மளமளவென்று செயற்படத் தொடங்கினாள்.

கணவனுக்கு தொலைபேசியில் அறிவித்தவள், பிள்ளைகளை பக்கத்து வீட்டில் பார்க்கச் சொல்லிவிட்டு, தந்தைக்கு வேண்டியவற்றினை ஒரு பையினுள் திணித்துக் கொண்டு, உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்.

அங்கே அவளது தந்தையை அவசரப் பிரிவில் சேர்த்திருந்தார்கள். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது, உள்ளே நுழைந்து விட்டான் அரவிந். அவனைக் கண்டதும் 'ஓ' வென்று அழுதாள் அனு. அவன் ஆறுதல் சொன்னான். டொக்டரிடம் கேட்டபோது, மாமனாருக்கு இரத்தம் நிறைய சேதமாகியிருப்பது தெரிந்தது. அவரது குரூப் இரத்தம் உடடினயாகத தேவைப்பட்டது.

அவரது குரூப்பும், அவனது குரூப்பும் ஒன்றாகவே இருக்க, தியாகராஜன் உடலில் அரவிந்தின் இரத்தம் சேரத் தொடங்கியது. ஒரு வாரம்.... பெற்ற தந்தைபோலப் பேணிப் பாதுகாத்தான் அரவிந். மெதுவாக சுயநினைவு பெற்றார் தியாகராஜன்.

அவர் கண்விழித்ததும் மறைந்து கொண்டான் அரவிந். அனுதான் பிறகு பார்த்துக்கொண்டாள். நாட்கள் நகர்ந்தன. பூரணசுகமாகி வீட்டுக்கு வந்தார்கள். அப்போதும் அவருக்கு தன்மானம் இடந்தரவில்லை. பழைய கதை தொடர்ந்தது.

* * *

அன்று காலையில் வழமையாகத் தான் செல்லும் கடைக்குச் சென்றார் தியாகராஜன். கடை முதலாளியைக் காணவில்லை. பத்து வருடங்களாக அங்கு சாப்பிட்டதில் கடைமுதலாளி நண்பராகியிருந்தார். அவரைத் தேடிக் கொண்டு உள்ளே நுழைந்தவர் அப்போதுதான் அவனைக் கண்டார். உடல் வெடவெடவென்று ஆடியது. அவனா இவ்வளவு காலமாக சமைத்தான்?' இருக்காது. நான் ஆஸ்பத்திரியில் இருந்த போதுதான் இவன் வந்திருக்கணும். சமாதானமாகிப் போனார்.

வெளியே வந்தவரின் எதிரில் முதலாளி. "என்ன தியாகு சாப்பிடலியா? இப்போ உடம்பு எப்படியிருக்கு? நேற்றுப் பின்னேரம்தான் ரிக்கட் வெட்டினதாக்கும்?..." அக்கறையுடன் கேட்டார்.

"அதெல்லாம் இருக்கட்டும். சமையலுக்கு புது ஆள் எடுத்திருக்கியா?" தியாகராஜன் கேட்டபோது, முதலாளி ஆச்சரியப்பட்டார்." இல்லியே ஏன் கேட்கின்றாய்"

"இல்லையா? அப்போ, அந்த தேவராசன் எத்தின வருஷமா வேலை செய்யிறான்?" பதட்டப்பட்டார் தியாகராஜன்.

"ஏன்? அவன் பத்து வருஷமா செய்யிறான். அவனுக்கென்ன?"

"அவனுக்கா? துரோகி. ரெண்டு பேருமாகச் சேர்ந்து என்னை ஏமாத்திட்டீங்களே. நம்ம சாதிக்காரன்தானேன்னு உன்ர கடைக்கு வந்தா, நீ சாதிகுறைஞ்சவனையெல்லாம் சமைக்க வைச்சிருக்கியே? ச்சே. அநியாயம் செய்து போட்டியே? இதவிட நான் என் மகள் கையாலயே சாப்பிட்டிருப்பனே?"

"தியாகு... சாதி என்னப்பா? சாதி பார்க்கிற காலமா இப்ப? நாட்டில இனக்கலவரம்தான் நடக்குது. நீ சாதிக்கலவரமாக்கிடாதே. நீ மட்டுமா? தேவராசனும் குறைஞ்ச ஆளில்லை. தங்கட ஜாதிப் பொண்ணக் கட்டல்ல எண்டுதான் மகன்ர உழைப்பைக்கூட வாங்காம சமையல் செஞ்சு சாப்பிடுறான். அதவிட்டுட்டு வந்து சாப்பிடு..."

எனக்கெதுக்கு இனி உன் சாப்பாடு? இத்தனை வருஷம் சாப்பிட்டதெல்லாம் நஞ்சாகும் போல இருக்குதே? உன்ன நம்பி வந்ததுக்கு எனக்கு வேணும். மனுஷன் தானா நீ? நம்பின என்னை நாசம் பண்ணிட்டியே. இரத்தம் கொதிக்குது எனக்கு. பாவி..." படபடத்தார்.

"அதுசரி தியாகு. உனக்குக்கூட ரத்தம் கொதிக்குமா? அது உன்ர மருமகனோட ரத்தமாச்சே? அதெப்பிடி? சாப்பாட்டில மட்டும்தான் சாதிப்பார்ப்பியா ஓடுற ரத்தத்தில் பார்க்கமாட்டியா? உன் உடம்பில ஓடுறதே அவன் ஜாதி ரத்தம் தானே?"

"எ—என்னது?" தீயை மிதித்தார் தியாகராஜன். மீண்டும் அதிர்ச்சி தாக்க நிலைகுலைந்தார். கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது. கடைமுதலாளி நடந்ததைக் கூற, சிலையாகிப் போனார்.

கண்களிலிருந்து கண்ணீர் பெருக, அதைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் வீட்டிற்கு வந்தார். சாப்பிடுவதற்கு அப்போதுதான் அமர்ந்தான் அரவிந். வாசலில் செருப்பைக் கழற்றும் மாமனாரைக் கண்டதும் உடனே எழுந்து உள்ளே மறைந்து கொண்டான்.

"மாப்பிள..." குரலில் சுருதிகுறைந்திருந்தது. தன் காதுகளையே நம்பமுடியவில்லை அரவிந்துக்கு. வெளியே வந்து எட்டிப் பார்த்தான். சந்தேகமே இல்லை. மாமாதான்.

"என்னை மன்னிச்சிடுங்க மாப்பிள. நான் என்ர வறட்டு கௌரவத்தால என் மகள்ர குடும்பத்தையே வெறுத்திட்டன். சாதி சாதி எண்டு என்னத்தைச் சாதிச்சிட் டன்? கடைசியில எனக்கு உயிர் தந்ததே நீங்கதானே. என்ன மன்னிப்பீங்களா மாப்பிள்ளை? அம்மாடி-நீயும் என்னை மன்னிச்சிடும்மா. நான் பாவியாகிட்டன்" குலுங்கிக் குலுங்கி அழுதார்.

"அழாதீங்க மாமா. நாங்கதான் உங்கள எதிர்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டம்: எங்களத்தான் நீங்க மன்னிக்கணும். இப்பதான் எல்லாம் சரியாகிப் போச்சே." தேற்றினான் அரவிந்.

"அம்மாடீ. என் பேரக் குழந்தைங்க எங்கம்மா? பாவி நான். அதுகளோடு கூடக் கதைக்கல்லை..." "வாங்க மாமா சாப்பிடுவம்." தயங்கியவாறு கூப்பிட்ட மருமகனைக் கண்டு கோபத்துடன் திரும்பினார்.

"நல்லாருக்கே உங்களோட கதைச்சா, உங்களோடயே நான் சாப்பிடுவன் எண்டு நினைச்சீங்களா?"

அவரது அதட்டலில் மிரண்டுபோனாள் அனு. அரவிந் கூட திடுக்கிட்டான். இப்போதுதான் மன்னிப்புக்கேட்டு மனம்மாறி வந்தார். அதற்குள் என்ன நடந்தது?

இவர்களது மருண்ட பார்வையைப் பார்த்த தியாகராஜன் சிரித்தார். "அம்மாடி, என் பேரக்குழந்தைங்களோட சாப்பிடறேன்மா. எத்தனை வருஷமா அதுகளோட கூடக் கதைக்கவில்லை நான். பாவியாகிட்டேனே என்ன இருந்தாலும் நான் செஞ்சது தப்புதானே? பச்சப் புள்ளைங்களோடக்கூட கதைக்காம இருந்திட்டானே?...

*மாமா. இப்ப ஏன் அதையே நினைச்சி வருந்திட்டு* இருக்கீங்க? அதெல்லாம் முடிஞ்ச விசயம். இத்தனை வருசத்துக்குப்புறம் இப்ப சந்தோஷமாத்தானே இருக்கிறம். போய் வேற வேலையைப் பாருங்க மாமா. இனிமேலும் கலங்கக்கூடாது."

"சரி மாப்பிள்ளை. நீங்க சாப்பிட்டுட்டு வேலைக்குப் போங்க. நான் குழந்தைகளோட சாப்பிடுறன்." கூறியவர், மனதில் பத்து வருடங்களுக்குப் பின் மீண்டும் ஒரு சந்தோஷம் படருவதை உணர்ந்து சிலிர்த்துப்போனார்.

கதிரையில் அமர்ந்து கண்களை மூடியவர்; குழந்தைகளின் சத்தத்தில் கண்விழித்தார். இப்போது அவர் மனமும் ஒரு குழந்தையாய் மகிழ்ந்தது.






# சினிமாவில் ஹீரோக்கள்! நிஜத்தில் சீரோக்கள்!!

## வெளுக்கிறது கதாநாயகர்களின் சாயம்


விஜயகாந்த்

திரையுலகில் சமுதாயத்தினைச் சீர்திருத்துபவர்களாகவும் அக்கிரமக்காரர்களை அழிப்பவர்களாகவும் தோன்றி ரசிகர்களின் கைதட்டல்களைப் பெற்று விடுகிறார்கள் ஹீரோக்கள். இந்த ஹீரோக்கள் நிஜத்தில் சீரோக்களாகவே இருக்கிறார்கள். அதற்காக

சமுதாயத்தில் சீர்கேடு என்றவுடன் தட்டிக் கேட்கும் சிங்கங்களாக மாறவேண்டும். சினிமாவில் காட்டுவது போன்று சீர்கேட்டுக்குக் காரணமானவர்களைத் துரத்தித் துரத்தி அடிக்க வேண்டும் என்று சொல்ல வரவில்லை.

தமது பிரபலத்தைப் பயன்படுத்தி அட்லீஸ்ட் ஒரு அறிக்கையையாவது விடலாம் என்பது எனது மட்டுமல்ல, பெரும்பான்மையானவர்களது எண்ணக் கருத்து.

படத்தில் ஜெயிலில் வாடும், மக்களுக்காக தியாகம் செய்யும் நடிகர்களுக்கு தங்கள் சொந்த வாழ்க்கையில் அதனைச் செயற்படுத்தி முன்மாதிரியாக வாழ்ந்து காட்டும் தைரியம் இல்லை.

சந்தர்ப்பம் பார்த்து சகாப்தம் படைப்பதில் ஒருசில நடிகர்கள் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

கலைஞர் தாக்கப்பட்ட சம்பவத்தின் போது சம்பவம் நடந்து ஒரு சில நிமிஷங்களிலேயே அத்தனை நடிகர் நடிகைகளுக்கும் விஷயம் தெரிந்து விட்டது. அனைவரும் செல்போனில் விஷயத்தைப் பேசிக் கொண்டார்கள், அதிர்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் உடனடியாக அறிக்கை விடும் துணிச்சல் யாருக்கும் வரவில்லை.

இருந்தாலும் துணிவே துணை என்று களத்தில் இறங்கிய ரஜினி முதலில் அறிக்கை விட்டார். இவரைத் தொடர்ந்து கமல், நெப்போலியன், தியாகு, சந்திரசேகர், ராதிகா, பாண்டியன் ஆகியோர் காவல்துறையைக் கண்டித்து தமது கருத்தைத் தெரிவித்தார்கள். சில நட்சத்திரங்கள் பிரபல தொலைக்காட்சியிலும் ஜெயலலிதாவைக் கண்டித்துப் பேசினார்கள்.

இதனைப் பார்த்தவர்கள் அடடா! சினிமா நட்சத்திரங் களுக்கு துணிச்சல் வந்துவிட்டதே!? என்று நினைத்தனர்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன வென்றால். இந்த ஆட்சி கலைக்கப்பட்டு விடும் இனி கலைஞர் ஆட்சி தான். அதனால் ஜெயலலிதாவைக் கண்டித்து அறிக்கை விடலாம் என்று யாரோ தகவலைக் காற்றில் பரப்பி விட்டிருக் கிறார்கள். அதனால் தான் இத்தனை தைரியமாகப் பேசினார்களாம்.

இதில் மிகவும் துணிச்சலாகப் பேட்டி கொடுத்தவர் பார்த்திபன். ஆனால் நடிகர்கள் நினைத்தது நடக்கவில்லை. அம்மாவும் இல்லை கலைஞரும் இல்லை கடைசியில் யாருமே நினைத்துப் பார்க்காத பன்னீர்ச் செல்வம் முதல்வராகி விட்டார். பன்னீர்ச் செல்வம் ஜெயலலிதாவின் சொற்படி நடக்கும் ஒருவர் என்பதனால் தமிழ் நாட்டில் நடப்பது ஜெயலலிதாவின் மறைமுக ஆட்சி என்று கூறலாம்.

இப்போது கலைஞருக்கு சார்பாக அறிக்கை விட்டவர்களை லிஸ்ட்


சரத்குமார்

எடுங்கள் என்று ஆளுங்கட்சி தரப்பு நடிகர் ஒருவருக்குத் தகவல் போனது என்றும் அவரும் கிளிப்பிள்ளையாக அறிக்கை விட்ட நடிகர் நடிகைகளின் பெயர்களை அம்மாவிடம் எழுதிக் கொடுத்திருக்கிறாராம். இதனால் அறிக்கை விட்ட பிரபல நடிகர்களுக்கு குளிர்காய்ச்சல் ஏற்படத் தொடங்கியிருக்கின்றது.

இவர்களில் ஒவ்வொருவராக அம்மாவிடம் சரண்டர் ஆகிக் கொண்டிருக் கிறார்கள் என்று கூறுகின்றது. கோடம்பாக்கம் சரத்குமார் ஆரம்பத்தில் மல்லுக் கட்டினாலும் இப்போது அம்மா தயவில் எம்.எல்.ஏ. ஆகியிருக்கிறார்.

ஆனால் எல்லோரையும் திடுக்கிட வைக்கும் விஷயம் ஒன்று, சமீபத்தில் நடந்திருக்கின்றது. அது விஜயகாந்த் ஜெயலலிதாவைச் சந்தித்தமையே. எந்தக் கட்சியையும் விஜயகாந்த் வெளிப் படையாக ஆதரித்ததில்லை. ஆனால் அவரது செயற்பாடுகள் அவரை தி.மு.க ஆதரவாளராகவே இனங்காட்டி வந்துள்ளது.

ஆனால் அ.தி.மு.க. பற்றி விஜயகாந்திற்கு அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. குறிப்பாக ஜெயலலிதா மேல் அவருக்கு சிறிதளவு மரியாதையும் இருந்ததில்லை. கருணாநிதிக்குப் பவள விழா எடுக்கும் அளவுக்கு அவர் மேல் தனிப்பட்ட முறையில் பாசம் வைத்திருந்தவர்.

இப்படிப்பட்டவர் சமீபத்தில் ஜெயலலிதாவை ரகசிமாகச் சந்தித்து விட்டு வந்திருக் கிறார். இச்சந்திப்பை அவர் ரகசியமாக வைத்திருந் தும் எப்படியோ விஷயம் அம்பலமாகி விட்டது. "விஜயகாந்த் கட்டிய பொறியியல் கல்லூரி விஷயமாகவே அவர் ஜெயலலிதாவைச் சந்தித்தார் என்று விஜயகாந்த் தரப்பில் காரணம் கூறப்பட்டாலும் ஒருசிலர் அதனை ஏற்கத்தயாராக இல்லை.

இவர் நடித்து தீபாவளிக்கு வெளியான தவசி படத்தின் விற்பனை 8 கோடி. இத்தகைய தொகையை விநியோகஸ்தர்கள் மறுபடியும் வசூலிப்பது என்பது இலேசுப்பட்ட காரியமில்லை. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வசூலிப்பது, ஓவர் டிக்கெட் அனுமதிப்பது போன்றவற்றைச் செய்தால்தான் எதிர்பார்த்த அளவு வசூல் செய்ய முடியும்.

இதற்கு ஏற்படும் பொலிஸ் கெடுபிடியைக் குறைப்பதற்காகவே ஜெயலலிதாவை விஜயகாந்த் சந்தித்தார் என்று கூறபடுகின்றது. உண்மை அவருக்கே வெளிச்சம்.

— ஷாம்

'ராஜ்ஜியம்' படத்தில் பிரியங்கா த்ரிவேதியுடன் இன்னொரு கதாநாயகியாக ஷில்பா ஷெட்டியின் தங்கை ஷமீதா ஷெட்டியும் நடிக்கப் போகிறார்.

## ஷாமின் பாராட்டு சுந்தரத்துக்கு வேட்டு

"சிம்ரன் நல்ல நடிகை. ப்ரெண்ட்லியாகப் பழகுகிறார். சிறிதளவும் பெருமை கிடையாது என்று சிம்ரனைப் பற்றிப் பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார் நடிகர் ஷாம். அவர் தொடர்ந்து கூறுகையில், 'ஜோடி' படத்தை நண்பர்களுடன் தியேட்டரில் பார்த்தேன். அந்தப்படத்தில் சிம்ரன் பிரமாதமாக நடித்திருந்தார். அவரது ரசிகனான நான் '12 பி' படத்தில் அவருடன் இணைந்து நடிப்பேன் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை" என்கிறார். இவர் இப்படிக் கூறிக் கொண்டிருக்க சிம்ரன் — ஷாம் நட்பினால் சிம்ரனின் காதலர் சுந்தரம் கடுப்பாகியிருக்கிறார் ராம்.


ஷாம் — சிம்ரன்

## திரை மறைவில்

'ரீன்' நடிகையும் உடன்பிறப்பும் கருத்து வேறுபாடுகாரணமாக தனித்தனி வாடகை வீட்டில் வசித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் அக்கா மேல் தங்கை வைத்திருக்கும் பாசம் இன்னும் குறைந்து விடவில்லையாம். அக்கா நடிக்கும் படத்தின் ஷூட்டிங் சென்னையில் நடைபெறுவதாக இருந்தால் அங்கே ஆஜராகி விடுவாராம் தங்கை.

* *

சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துள்ளார் சூப்பர்ஸ்டார். இன்னும் ஓரிரண்டு படங்களில் நடிப்பது என்று முடிவெடுத்துள்ளாராம். வாழ்க்கையின் பிற்பகுதியை பெங்களூரிலேயே கழிக்க விரும்புகிறார் என்றும் கூறப்படுகின்றது.

* *

'தில்' நடிகரின் மனைவியும் 'பிஷ்' நடிகையும் நகமும் சதையும் போல இணைபிரியாத தோழிகள். இந்த நட்புப்பாலத்தின் மீது ஏறித் தான் காதலிஸஅல்பத்தில் நடிகருடன் டூயட் பாடினாராம் அம்மணி. இப்போது என்னடாவென்றால் இதே நட்புப் பாலத்தைப் பயன்படுத்தி புதிய படங்களில் நடித்துவிட எண்ணுகிறாராம். 'பிஷ்' இதற்காக 'தில்' நடிகரிடம் சிபாரிசு செய்யு மாறு தோழியை நச்சரித்து வருகிறாராம்.

* *



சென்னை நெசப்பாக்கம் பகுதி யிலிருந்து தியாக ராஜ நகருக்கு குடிவந்திருக்கிறார் 'ஸ்நேக' நடிகை. சிறந்த புதுமுக நடிகை என்ற விருது கிடைத் திருப்பதனால் இமேஜ் கூடி விட்ட தாகக் கருதும் நடிகை கூடவே தன்னுடைய பாதுகாப்பு அதிகாரியாகச் செயற்படும் வாட்ட சாட்டமான அண்ணனுக்கு வாய்ப்பும் தேடி வருகிறாராம்.

* *

முனிவரின் பெயரில் அறிமுகமான சப்த நாயகர் முதல் படம் வெளி வந்ததும் படவாய்ப்பு தன்னைத் தேடி வரும் என்று ஆரவாரப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் படம் நல்ல விளம் பரத் தைப் பெற்றுக் கொடுத்தாலும் எந்தத் தயாரிப்பாளரும் அவரது வீட்டுக் கதவைத் தட்டவில்லை. இதனால் நொந்து போயுள்ள நடிகர் வேறு துறைகளில் காலடி எடுத்து வைக்கலாமா என்று யோசித்து வருகின்றாராம்.

* *

'த்ரீ ரோஸஸ்' என்ற படத்தில் ஒளி மயமான நடிகையும் ஒரு ரோஸாக நடிக்கிறார் என்பது தெரிந்த செய்தி. ஆனால் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டவர்கள் நடிகையிடம் போய் 'என்ன அம்மணி நீங்களும் கும்பலோடு கும்பலாக வந்து போகும் நிலைக்கு மாறி விட்டீர்கள்?, என்று கேட்கவே ஆடிப் போய்விட்ட நடிகை. இனிமேல் இப்படி மூன்று கதாநாயகிகள் நடிக்கும் படத்தில் நடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறாராம்.

* *

'தமிழ்' என்று தலைப்பிட்டு காதல் இளவரசன் நடிக் கும் ஒரு படத்தை தயாரித்து வருகின்றனர். அரைவாசிப் படத்தின் படப்பிடிப்பும் முடிந்து விட்டது. இப்படியிருக்கையில் ஜீ.வி. தயாரிக்கும் ஒரு படத்திற்கு 'தமிழன்' என்று தலைப்பு வைத்துள்ளனர். இளைய தளபதி கதாநாயக னாக நடிக்கப் போகின்றார். இவை தெரிந்த செய்திகள். ஆனால் தமிழ் வெளி வரும் காலகட்டத்திலேயே தமிழனையும் தயாரித்துத் தலைப்பிடுவது எந்த வகையில் நியாயம்? ஏன் இது போன்ற குழப்பங்களைச் செய்கின்றனர் என்று கேட்டிருக்கிறார் காதல் இளவரசனின் தந்தை.




Agent for all Air Lines

யாழ்ப்பாணம், வவுனியா Transport வசதியும் எம்மிடம் உண்டு.

**TRAVEL DATA TOURS & TRAVELS**

நியாயமான விலையில் அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

Visa, Passport, Hotel வசதிகளையும் சிரமமின்றி நாம் செய்துதருகிறோம்.

இல. 63, Maliban Street, Colombo - 11. Mobile : 071-734100

Toronto: Mr.Param 416-6098381

61, Chatham Street, Colombo - 11. Tel: 385900, 338241-3 Fax: 94-1-338244

ZURICH: Militarstass 88-Ch-8004 Zurich Tel: 01 - 2412885 / 86 E-mail: slccz.travel@bluewin.ch

எம்மிடம்
Zurich - Colombo-Rtn
Toronto-Colombo-Rtn
London-Colombo-Rtn
விமான டிக்கெட்டுக்களை - கொள்வனவு செய்பவர்களுக்கு விமான நிலையத்திற்கான போக்குவரத்து வசதி இலவசம்!



விஜய் — ரிச்சா
படம்:— 'ஷாஜஹான்'

# விஜய் படம் முன்னணியில்...!

தீபாவளிக்கு வெளிவந்த படங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை 'ஆளவந்தான்', 'ஷாஜஹான்', 'நந்தா', 'பார்த்தாலே பரவசம்' ஆகியவையே.

இவற்றில் 'நந்தா' தன்வழி தனிவழி என்ற ரீதியில் வித்தியாசமான கதையம்சம் கொண்டது என்பதனால் போட்டியின்றி தன் பாட்டில் வெற்றி வாகை சூடிக் கொண்டிருக்கின்றது.

பாலசந்தரின் 'பார்த்தாலே பரவசம்' நான் போட்டிக்கு வரவில்லையப்பா என்கிற ரீதியில் வெளியிட்ட தியேட்டர்களில் வஞ்சகமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றது. இறுதியில் ஆளவந்தானுக்கும் ஷாஜஹானுக்கும் இடையில் தான் பலத்த போட்டி நிலவியதாம். 'ஆளவந்தானின்' விளம்பரத்தில் முரட்டுத்தனமாக கத்தியுடன் தோன்றிய கமலைப் பார்த்தவர்கள் ''நல்லநாள் பெருநாள் அதுவுமா குழந்தைகளுடன் ஒன்றாக இருந்து படம் பார்க்க வேண்டும். இந்தப்படம் சரிவராது விஜய் படம் ஜாலியாகப் பார்க்கலாமப்பா'' என்று கருத்துக் கூறியவாறு ஷாஜஹானைத் தெரிவு செய்திருக்கின்றனர்.



ரம்யாகிருஷ்ணன் — பிரபு
படம்:— 'ஆயிரம் பொய் சொல்லி'

# பிரபுவின் ஆதங்கம்

'பட்ஜெட் பத்மநாபன்', 'மிடில் கிளாஸ் மாதவன்', 'சூப்பர் குடும்பம்' என்று சமீபத்தில் குடும்பப் பாங்கான வேடங்களில் மட்டுமே நடித்து வந்தார் பிரபு. தற்போது அவர் நடித்து வரும் 'ஆயிரம் பொய் சொல்லி' படமும் காதலை மையமாகக் கொண்ட குடும்பக் கதைதான். ரசிகர்கள் வரவேற்கிறார்களோ இல்லையோ பிரபுவிற்குக் காதல் திகட்டி விட்டதாம்.

தனக்கு நெருங்கிய தயாரிப்பாளர் ஒருவரிடம் தனது ஆதங்கத்தினைக் கூறியிருக்கிறார். சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்ட தயாரிப்பாளரும் அதற்கென்ன காதலைக் கிடப்பில் போட்டுவிட்டு அக்ஷனை கையில் எடுத்தால் போச்சு என்று சமாதானம் கூறியதுடன் குறைந்த சம்பளத்திற்குப் பிரபுவின் கால்ஷீட்டையும் வாங்கி விட்டாராம்.



மும்தாஜ் — கார்த்திக்
படம்:— 'அழகான நாட்கள்'

# இரட்டைப் போட்டி மும்தாஜ் பதிலடி

கவர்ச்சியாக நடித்தாலும் கதாநாயகி அந்தஸ்த்துப் பெற்றவர் மும்தாஜ். இதனால் மும்தாஜிற்கு இரட்டைப் போட்டியைச் சமாளிக்க வேண்டி யுள்ளது.

எங்கே தம் இடத்தைப் பிடித்து விடுவாரோ? என்றுகதாநாயகிகளும் தம் பிழைப்பிலும் மண்ணைஅள்ளிப்போடுகிறாரே என்று கவர்ச்சி நடிகைகளும் மும்தாஜின் மேல் கோபமாக இருக்கிறார்கள். சமீபத்தில் படப்பிடிப்பொன்றில் இதனைப்பற்றி மும்தாஜின் காது படவே கூறியிருக்கிறார் ஒரு கவர்ச்சி நடிகை. மும்தாஜும் சும்மா விட்டுவிடவில்லை. ''என்னிடம் கவர்ச்சியும் இருக்கிறது. நடிப்பும் இருக்கிறது. அதனால் தான் தயாரிப்பாளர் கள் என்னைத் தேடி வருகிறார் கள். என்று பதிலடி கொடுத் திருக்கிறாராம் மும்தாஜ்.

'தில்' படத்தைத் தயாரித்த லட்சுமி புரொடக்ஷன்ஸ் ஏ. பூர்ண சந்திரராவ் விஜய்யை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார். இப்படத்தை வின்செண்ட் செல்வா இயக்குகிறார்.

* *

ஆஸ்கார் பிலிம்ஸின் சார்பில் ரவிச்சந்திரன் தயாரிக்கும் புதிய படத்தில் விஜயகாந்த் நடிக்கப் போகிறார்.

* *

# இனி இவர்கள்..!

'தேவன்' படத்தில் மீனா — கவுசல்யா கதாநாயகிகளாக நடித்து வருகிறார்கள்.

* *

'விழா' படத்தில் பார்த்திபன் — மம்முட்டி இணைந்து நடிக்கப் போகிறார்கள். கதாநாயகி—தேவயானி.



சூர்யா

# நந்தா கொடுத்த மகிழ்ச்சி..

சூர்யா இதுவரை தான் நடித்த எந்தப் படத்திற்கும் படாத கஷ்டத்தை 'நந்தா' படத்திற்காகப் பட்டிருந்தார். அதிக முயற்சி எடுத்து கரெக்டரிற்கு உயிர் கொடுத்திருந்தார் சூர்யா. இப் போது முயற்சிக்கு பலன் கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருக்கிறார். அதுமட்டுமல்ல புதிய படங்களில் நடிப்பதற்கு வாய்ப்பு வந்தபோதும் நந்தாவிற்காக ஒத்துக்கொள்ள மறுத்தவர் இப்போது சந்தோஷமாக கால்ஷீட்டுக்களை வழங்கிக்கொண்டிருக்கிறாராம்.


# Rain Bow Travels (Pvt) Ltd



No. 113, Chatham Street,
(Ground Floor)
Colombo-01.
T.P.:320645, 321072, 075-363341
Fax : 075-363343

## நியாயமான விலையில் மகத்தான சேவை

மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டன், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, சென்னை, திருச்சி, திருவானந்தபுரம் போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்




# உஷாரானார் திவ்யா உன்னி!

டேக் இட் ஈஸி கொள்கையைப் பின்பற்றிய போதும் பரபரப்பாக முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார் நடிகை திவ்யா உன்னி. காரணத்தை அவரிடமே கேட்டபோது, சத்யராஜ் ஸார் தான் என்னுடைய வெல்விஷர். அவரைக் கேட்டுத் தான் என்னை ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்று யாரோ செய்தியைப் பரப்பி விட்டு விட்டார்கள். இதனால் தான் தயாரிப்பாளர்கள் என்னை ஒப்பந்தம் செய்வதற்கு தயங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு இந்த விஷயம் தெரியாது. இப்போது காரணம் புரிந்து விட்டது. இனி உஷாராக இருப்பேன்'' என்று மூச்சு விடாமல் பேசி முடித்தார் திவ்யா உன்னி.



பிரசாந்த் — ஜெயாரே

# ஆடைக்குறைப்பிற்கு அக்கா அட்வைஸ்....

'சாக்லெட்' படத்தின் மூலம் தமிழிற்கு வந்தவர் ஜெயாரே. மனிஷா கொய்ராலாவிற்கு உறவுக்காரப்பெண். மனீஷா கொடுத்த ஊக்கத்தின் பேரிலேயே தமிழ்த் திரையுலகில் காலடி எடுத்து வைத்தார். 'சாக்லெட்' படத்தில் நடிக்கும் போது மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டாலும் படம் வெளி வந்த பின்னர் அம்மணியைப் பற்றித் தேடுவார் யாருமில்லை.

மனிஷாவிடம் சென்று இதைப் பற்றி கலந்தாலோசித்து இருக் கிறார். ஜெயாரே சொன்னதை அமைதியாகக் கேட்ட மனிஷா.

''தமிழ் ரசிகர்களுக்கு குளுகுளுவென்று குண்டாக இருந்தால் தான் பிடிக்கும். அதுமட்டுமல்ல, அதிகமாக ஆடைக் குறைப்பு செய்தாலும் ஓரங்கட்டி விடுவார்கள். ''பார்த்து நடந்துக்க'' என்று அட்வைஸ் செய்திருக்கிறார்.


## வெள்ளவத்தையில்

## Sathu Travels, Communication and Agency Post office



429 C, Galle Road,
Wellawatte, Colombo -06.
T.P.: 075-557311-2, 075/550076
Fax : 075-522491

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளவும்.

அத்துடன் எமது முகவர் தபால் நிலையமூடாக வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்கள், உறவினர்களுக்கு தேவையான உடுதுணிகள், உணவுப் பொருட்கள், அன்பளிப் புக்கள் ஆகியவற்றை விரைவில் அனுப்பி வைப்பதற்கு உத்தவாதம் வழங்கப்படும்.

## 24 மணி நேர சேவை

இதர சேவைகள் IDD, Local, Fax, Laminating, Translation, Typing. net2 Phone

கனடாவில் தொடர்பு:- கணபதிப்பிள்ளை ரவீந்திரன்
தொலை பேசி:- (416) 8987284

# Little Asia Emporium

கல்யாணப் பட்டுச் சேலைகள், புது ரக மனங்கவர் சல்வார் கமீஸ்கள், ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமியர் அனைவருக்குமான ஆடைகளை ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றிட இப்பொழுது வெள்ளவத்தையில்...

காலத்திற்கேற்ற மாற்றத்துடன் லிற்றில் ஏசியா எம்போரியம்

இது கடையில்லை அண்ணே, கடல்!



இல. 317, 317A, Little Asia Exporium
Galle Road, Wellawatte, Colombo -06. T.P. 504470

# ஆரோக்கியமான விந்து மூலம் திடகாத்திரமான குழந்தைகள்

**கே:** எனக்கு வயது 34 (ஆண்). எனக்கு திருமணமாகி 2 வருடங்கள் ஆகி விட்டன. எங்களுக்கு குழந்தை இல்லை. இதனால் ஒரு மருத்துவரிடம் சென்று பரிசோதித்துப் பார்த்தோம். முதற்கட்ட மாக எனது விந்து சோதனைக்காக அனுப்பப்பட்டது. அந்த சோதனை முடிவைப் பார்த்த மருத்துவர் எனது விந்தின் உயிரணுக்கள் நல்ல நிலையில் இல்லை என்றும் அதனால் எனக்கு குழந்தை பிறக்கச் சந்தர்ப்பம் இல்லை என்றும் கூறிவிட்டார். என்னால் இதைத் தாங்குவது கஷ்டமாக இருக்கிறது. எப்படியாவது எங்களுக்கு ஒரு குழந்தை வேண்டும். எங்கள் உடலுறவில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எனக்கு எந்த விதமான கெட்ட பழக்கமும் இருந்ததில்லை. எனது பரம்பரையில் எல்லோருக்கும் குழந்தைகள் உண்டு. எனக்கோ என் மனைவிக்கோ வேறு எந்த நோயும் இல்லை. நானும் மனைவியும் மிகவும் ஒற்றுமையாக இருக்கிறோம். எமக்கு இக்குறையைத் தாங்கும் சக்தி இல்லை. எமக்கு ஒரு தீர்வை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

**ப:** *குழந்தைகள் இல்லாத தம்பதிகளைச் சோதித்துப்பார்க்கும் பொழுது அவர்களின் உறவிலே எந்தப் பிரச்சினையும் இல்லாவிட் டால் முதற் கட்டமாக ஆண்களையே சோதித்துப் பார்ப்பது வழக்கம். ஆண்களில் எந்தப் பிரச்சினையும் இல்லாவிட்டால் அடுத்த கட்டமாக பெண்களில் பல்வேறுபட்ட சோதனைகள் செய்யப்பட்டு குழந்தைகள் கிடைக்காமல் இருப்பதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படும். இதற் கமயவே முதற்கட்டமாக உங்கள் விந்து சோதிக்கப்பட்டிருக்கிறது. இந்த பரிசோதனையின் பொழுது உங்களின் இந்திரியத்தின் ஒவ்வொரு கன அளவிலும் எத்தனை உயிருள்ள தொழிற்பாடுள்ள விந்துகள் இருக்கின்றன என்பது நுணுக்குக் காட்டியை உபயோகித்து எண்ணப்படும். இந்த எண்ணிக்கை குறைவாக இருந்தால் சாதாரண உறவின் மூலம் குழந்தை கிடைக்கும் சந்தர்ப்பம் இல்லை. இப்படி ஒரு நிலையே உங்களுக்கு இருக்கிறது என்று நினைக்கிறேன்.*

*ஆனால் நீங்கள் பரிசோதனையின் முழு விவரத்தையும் கடிதத்தில் குறிப்பிடவில்லை. இவ்வாறாக உங்கள் இந்திரியத்தில் உள்ள விந்தின் செறிவு – எண்ணிக்கை குறைவாக இருந்தால் உங்கள் இந்திரியத்தை எடுத்து அதில் நல்ல நிலையிலுள்ள விந்துகளை ஒருமுகப்படுத்தி விந்தின் செறிவு கூடிய ஒரு திரவத்தை தயாரிக்கலாம். அந்த திரவத்தை நேரடியாக உங்கள் மனைவியின் கருப்பையினுள் செலுத்துவதன் மூலம் உங்களுக்கு குழந்தை கிடைக்கச் செய்யலாம். உங்களைப் போன்ற நிலையிலுள்ள பலருக்கு இந்த முறை மூலம் குழந்தைகள் கிடைத்திருக்கின்றன. இதனை இலங்கையிலுள்ள பல அரசாங்க பொது மருத்துவமனைகளில் செய்து கொள்ளலாம். சில சமயம் உங்கள் இந்திரியத்தில் உள்ள விந்துகளின் எண் ணிக்கை மிகவும் குறைவாக இருந்தால் இந்த முறை வெற்றி அளிக்காமல் போகலாம். இந்த நிலையில் இன்னுமொரு மாற்று வழி உண்டு. இரத்த தானம் செய்வதுபோல பலர் தமது விந்தையும் தானம் செய்கிறார்கள். இவ்வாறு விந்தை தானம் செய்யும் ஒருவரிடம் இருந்து பெறப்படும் இந்திரியத்தை உங்கள் மனைவியின் கருப்பையினுள் செலுத்துவதன்மூலம் குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தமுறையின் மூலமும் இலங்கையிலே பலருக்கு குழந்தைகள் கிடைத்திருக்கின்றன. நோய்கள் எதுவுமற்ற புத்திக்கூர்மையுள்ளவர்களிடமிருந்து விந்து தானமாகப் பெறப்படுகிறது. எனவே பிறக்கும் பிள்ளைகளும் திறமைசாலிகளாக வரும் சந்தர்ப்பம் உண்டு. இந்தமுறை மூலம் குழந்தைகள் பெற்றுக் கொள்வதாயின் உங்களினதும் உங்கள் மனைவியினதும் பூரண சம்மதத்துடனேயே செய்து கொள்ள முடியும்.*

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:–
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு – 06.

## செங்கண்மாரி நோய் ஒரு தடவை ஏற்பட்டால் மீண்டும் ஏற்படுமா?

**கே:** எனக்கு வயது 43 (ஆண்). எனக்கு கடந்த 2 வருடங்களில் 3 தடவை செங்கண்மாரி நோய் வந்து விட்டது. கை மருந்துகளின் மூலம் அது சுகப்பட்டுவிட்டாலும் மீண்டும் இது ஏற்பட்டு விடுமோ என்று பயமாக இருக்கிறது. எனக்கு குடிப்பழக்கம் இல்லை. வீட்டில் சமையல் செய்த சுத்தமான உணவையே உண்கிறேன். இரண்டு தடவை கேணியா ஒப்பறேசன் செய்ததைத் தவிர எனக்கு வேறு ஒரு வருத்தமும் இல்லை. இந்த நிலையில் இந்த நோய் மீண்டும் ஏற்படாமல் தடுப்பது எப்படி?

**ப:** *செங்கண்மாரி நோயை கெப்பரைரிஸ் (**Hepatitis**) என்று சொல்லுவார்கள். இதில் பலவகை உண்டு. பொதுவாக மக்களிடையே தொற்றிப் பரவும் செங்கண்மாரியை **Hepatitis - A** என்று சொல்லுவார் கள். இது சுத்தமற்ற உணவு, நீர் என்பவற்றை பருகுவதன் மூலமும் நோயாளியுடன் நெருக்க மாகப் பழகுவதன் மூலமுமே தொற்றிக் கொள்கிறது. இது பொதுவாக எந்தவித பின்விளைவையும் ஏற்படுத்தாது. பூரணமாக குணமாகிவிடும். ஒரு தடவை இந்த நோய் ஏற்பட்டால் மீண்டும் அது ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இல்லை. எனவே மீண்டும் மீண்டும் உங்களுக்கு ஏற்படும் இந்த நோய் **Hepatitis - A** ஆக இருக்க முடியாது. குடி வகைகள், சில மருந்து வகைகள் பாவிப் பவர்களுக்கு மீண்டும் மீண்டும் **Hepatitis** வருவதற்கு சந்தர்ப்பம் உண்டு. ஆனால் நீங்கள் இவற்றைப் பாவிப்பதில்லை. எனவே இது இவற்றின் பாவனையாலும் வந்திருப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை. எனவே உங்களுக்கு ஏற்பட்டிருப்பது **Hepatitis - B** ஆக இருக்கக் கூடும். இது சற்று ஆபத்தான நோய். ஒரு தடவை உடலிலே தொற்றிக் கொண்டால் அந்த வைரசுகள் நீண்டகாலம் உடலிலே இருந்து பலதடவைகள் செங்கண்மாரி போன்ற தோற்றப்பாடுகளை ஏற்படுத்தி இறுதியில் ஈரலைப் பழுதடையச் செய்துவிடக்கூடும். இவை உணவினாலோ அல்லது நீரினாலோ பரவுபவை அல்ல. இவை தொற்றிக் கொள்ளும் முறைகளாவன. இந்த நோய் தொற்றியுள்ள ஒருவரின் இரத்தம் உங்களுக்கு ஏற்றப்படுதல், நோயாளிக்கு பயன்படுத்திய சவரக்கத்தி, ஊசிகள் போன்றவற்றை உங்களுக்கு பயன்படுத்துதல், பாதுகாப்பற்ற உடலுறவு போன்றவையாகும். நீங்கள் உடனடியாக பொது மருத்துவமனை ஒன்றிற்குச் சென்று இந்த நோய் இருக்கிறதா என சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த நோய் காணப்படின் வைத்தியர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள். இந்த கொடிய நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்காக சலூன்களில் உங்களுக்கு சவரம் செய்யும் பொழுது புதிய 'பிளேட்' களை உபயோகிக்குமாறு கேட்டுக் கொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. அதேபோல வைத்திய சாலைகளில் உங்களுக்கு ஊசி ஏதாவது ஏற்றப் படும் பொழுது புதிய ஊசியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்வதற்கும் உங்களுக்கு உரிமை இருக்கிறது. பாதுகாப்பற்ற உடலுறவும் ஆபத்தானது. இந்தக் கொடிய நோயினால் உலகில் வருடம் தோறும் 20 லட்சம் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இலங் கையிலே 2003 ஆம் ஆண்டு தொடக்கம் எல்லா சிறுவர்களுக்கும் இந்த நோய்க்கு எதிரான தடுப்பூசி கொடுக்கப்பட இருக்கிறது.*

## முகப்பருக்கள் உங்களுக்கு ஒரு பிரச்சினையா?

**கே:** எனக்கு வயது 26 (பெண்) தயவு செய்து இதை ஒரு அழுகுக்குறிப்பாகக் கருதாமல் பதில் தருவீர்கள் என்று நினைக்கிறேன். நான் நிறம் குறைந்த பெண். முகப்பருக்கள் வந்ததன் காரணமாக முகத்தில் சில அடையாளங்களும் இருக்கிறன. பலமுறைகளைக் கையாண்டு இப்பொழுது புதிதாக முகப்பருக்கள் வருவதைக் கட்டுப்படுத்தி விட்டேன். முகத்திற்கு பேசியல் (Facial) செய்யும் போது முகத்தில் ஏற்பட்டிருக்கும் அடையாளங்கள் மறைவதுடன் முகமும் வெளிப்பாக இருக்கிறது. ஆனால் இரண்டு வாரங்களின்பின் முகம் மீண்டும் பழைய நிலையை அடைந்து அடையாளங்கள் தெரியத் துவங்குகின்றன. அடையாளங்கள் மறைந்து மீண்டும் தோன்றுவதற்கான காரணம் என்ன. மாதம் ஒரு முறை பேசியல் செய்துகொள்வதால் ஏதாவது தீங்கு ஏற்படுமா?

**ப:** *தோலின் மேற்பகுதியிலே ஒரு படலமாக கரோட்டின் எனப்படும் ஒரு கவசம் இருக்கிறது. இது தோலை கிருமித்தாக்கங்களிலிருந்தும் மேல திக சூரிய வெளிச்சத்திலிருந்தும் (uv light) பாதுகாக்கிறது. பேசியல் செய்யும் மூலம் இந்த தோலின் கரோட்டின் கவசம் அகற்றப்படு கின்றது. கரோட்டின் கவசத்திற்கு உள்ளே காணப்படும் தோல் சற்று வெள்ளையாக இருப்பதால் முகம் வெளிப்பாகத் தோன்றும். கரோட்டின் கவசம் அகற்றப் படும் பொழுது தோலின் உள்ளே இருக்கும் கலங்கள் நேரடியாகத் தாக்கத்திற்கு உட்படுவதால் அவை வீக்கமடையும். இதனால் முகத்தில் ஏற்பட்டிருக் கும் சிறு பள்ளங்கள் மறையும். ஓரிரு வாரங்களுக்குள் தோல் மீண்டும் அந்த கரோட்டின் கவத்தை உட்படுத்தி செய்துகொள்வதால் முகம் பழைய நிலையை அடையும். பேசியல் செய்வதன் மூலம் இவ்வாறு அடிக்கடி தோலின் கரோட்டின் பாதுகாப்பு கவசம் அகற்றப்படுவது நல்லதல்ல. இதனால் தோலிலும் உடலிலும் கிருமித் தொற்றுதல்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிப்பதுடன் தோல் நேரடியாக சூரிய வெளிச்சத்தின் தாக்கத்திற்கு (uv light) உட்படுகிறது. இதனால் பல்வேறு விளைவுகள் ஏற்படலாம். எனவே அடிக்கடி பேசியல் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏதாவது விசேட தினங்களில் நீங்கள் இதனைச் செய்துகொண்டால் அந்த நாட்களில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முகத்தை மிகவும் சுத்தமாக வைத்திருப்பதுடன் வெய்யில் நேரங்களில் வெளியே உலாவுவதையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.*

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட் ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனை நேரம் | பில்லர் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி.. | இப்படிக்கு தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானாதில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள்... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி ... | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பில்லர் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# நாதம் பேசிய "நாத விவாதம்"

சனாதன தர்ம யுக விழிப்புணர்ச்சிக் கழகமும் சங்க நாத சஞ்சிகையும் இணைந்து வழங்கிய ''நாதவிவாதம்'' நிகழ்ச்சி



சுழலும் சொற்போருக்கு தலைமை தாங்கிய ஆர்.ஜனார்த்தனனையும் பேச்சாளர்களாகப் பங்கு பற்றிய ஊடகவியலாளர்களையும் படத்தில் காண்கிறீர்கள். படம்: சிவா

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்களின் ஒருமித்த ஆற்றல் ஒரே மேடையில் வெளிப்படுத்தப்பட்டது.

மகா பாரத யுத்தத்துக்குக் காரணம் சகுனியின் சூழ்ச்சியா? திரௌபதியின் சபதமா? பீஷ்மரின் விரதமா? கிருஷ்ணனின் சாதுரியமா? என்ற தலைப்பிலான வழக்காடு மன்றத்தில் ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் பேச்சாளர்களாகப் பங்கேற்றுக் கொண்டார்கள். வழக்காடு மன்றத்துக்கான தலைமை நீதிபதியாக கம்பவாரிதி இ. ஜெயராஜ் விளங்கினார்.

அறிவிப்பாளர்களும், எழுத்தாளர்களும் திடீரென பேச்சாளர்களாக மாறிய போது சிறிது சலனம் இருக்கத்தான் செய்தது. ஆனாலும் அத்தனை பேரும் அற்புதமாக தமது வாதப் பிரதிவாதங்களை முன்வைத்துப் பேசினார்கள்.

இரண்டாவதாக மேடையேற்றப்பட்ட சுழலும் சொற்போர் நாளைய மன்னர்களின் இன்றைய தலையாய தேடல் காதலா? பணமா? கல்வியா? வெளிநாட்டு வாய்ப்பா? என்ற தலைப்பில் அமைந்தது.

இந்த சுழலும் சொற்போருக்கு தலைமை வகித்தவர் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த நவரசப் பேச்சாளர் ஆர். ஜனார்த்தனன்.

மேடை அலங்காரம் மிக அற்புதமாக இருந்தது. பார்த்ததுமே விசுவின் அரட்டை அரங்கமோ என்ற சந்தேகம் மனதில் எழச் செய்தது.

திட்டமிட்டு நிகழ்வுகளை ஒழுங்குற நடத்துவதில் சனாதன தர்மயுக விழிப் புணர்ச்சிக் கழகத்துக்கும் ஓர் இடம் உண்டு.

கடந்த சில மாதங்களுக்கு முன் இதே இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட ஓர் இசை நிகழ்ச்சியை சங்கநாத சஞ்சிகையும் சனாதன தர்ம யுக விழிப்புணர்ச்சிக் கழகமும் இணைந்து வழங்கியது இன்னும் நினைவில் இருக்கத்தான் செய்கிறது.

இந்த நிகழ்ச்சியில் விவாத அரங்கிற்கு முன்னர் சுழலும் சொற்போரை வைத்திருந்தால் இறுதிவரை பார்வையாளர்கள் இருந்திருப்பார்கள்.

மேடைப் பேச்சுக்குப் புதியவர்கள் என்றாலும் அனைத்து ஊடகத் துறையைச் சேர்ந்த பேச்சாளர்களும் நன்றாகப் பேசினார்கள்.

புதியதோர் கடின முயற்சியில் சித்தியடைந்த சனாதன தர்மயுக விழிப்புணர்ச்சிக் கழகத்துக்கு எத்தனை முறை பாராட்டுக்களைக் கூறினாலும் தகும்.

## கலையமுதம்

க.சிவகுமார்





கவிஞர் ரீ.எல். ஜவ்பர்கான் எழுதிய 'மௌனதேசம்' நூல் வெளியீட்டு விழா காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது, நூல் நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி செ. யோகராசா நிகழ்த்துகிறார். மேடையில் அருட் தந்தை ஸ்ரீதரன் சில்வஸ்டர், உட்படப் பலர் காணப்படுகின்றனர்.

# கல்வியியற் கல்லூரியின் கலை விருந்து

வவுனியா கல்வியியற் கல்லூரியின் மாணவர்கள் படைத்தளித்த கலை நிகழ்வுகள் 10ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றன.

எச்சங்கள், மன்னவன் தீர்ப்பு, சிறுவர்களுக்கான நாடகம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் இவர்கள் படைத்தளித்த நிகழ்ச்சிகள் ஆகும்.

இதில் எச்சங்கள் என்ற நாடகம் சிந்திக்க வைத்தது. குறைகளை விட நிறைகளே அதிகம். பாத்திரப் படைப்புகளை ஏற்று நடித்தவர்கள் மிகைப்படாமல் நடித்தார்கள்.

வில்லுப்பாட்டு ஓரளவு ரசிகர்களைக் கவர்ந்தது. வில்லுப்பிடித்தவரின் மிகையான கலைத்திறத்தால் ஒட்டு மொத்தமாய் வில்லுப் பாட்டின் ரசனையை ரசிக்க முடியவில்லை. பாடல்களை, கதை வசனங்களை மிகையான நளினம் கலந்து வெளிப்படுத்தியமை, பழக்கப்பட்டுப் போன ராகங்களைக் கொண்டு பாடலை உருவாக்கியமை, ரசனையைக் கெடுத்தது. கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் நிகழ்ச்சிப் படைப்பு உயர் தரமாய் இருக்கும் என்ற எதிர்பார்ப்புக்கு போதிய திருப்தியைத் தரவில்லை.

சிறுவர் நாடகம் சிறுவர்களை மட்டுமல்ல வயது வந்த பார்வையாளர்களையுமே வெகுவாகக் கவர்ந்தது.

மன்னவன் தீர்ப்பு என்ற நாடகமும் கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள்தான் வழங்கினரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. சிறுவர்கள் நடித்த நாடகம் போன்ற பிரமையையே ஏற்படுத்தியது.

இந்த நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட நடிகர்களுக்கான ஒப்பனை சரிவர அமையவில்லை. அவ்வப்போது அரசர்களின் முறுக்கு மீசைகள் கழன்று தொங்குவதும் பின்னர் அரசர்கள் மீசையைப் பிடித்து ஒட்டுவதற்கு எடுத்த பிரயத்தனங்களும் பார்வையாளர்களுக்கு சிரிப்பை ஏற்படுத்தின.

இந்த நாடகத்தில் அரச, அரசி பாத்திரப் படைப்புக்களுக்கு பெண்களையே பயன்படுத்தியது, சிறிய பாடசாலை மாணவர்களின் நாடகங்களை நினைவுபடுத்தியது.

இந்த மன்னவன் தீர்ப்பு நாடகத்தில் அரசி பாத்திரம் ஏற்று நடித்த நீடிய பைங் கூந்தல் வல்லி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்ந்தார்.



மண்முனை தென் எருவிற்பற்று பிரதேச செயலக கலாசார விழாவையிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் கிராமிய நடனத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலய மாணவிகளை படத்தில் காண்கிறீர்கள்.

# அல்-மதீனா வெளியீட்டு விழா

அனுராதபுரப் பாடசாலைகளில் ஒன்றான அ/அல் மதீனா முஸ்லிம் வித்தியாலய மாணவர் மன்றம் ''அல்— மதீனா'' எனும் சஞ்சிகையை அண்மையில் வெளியிட்டது.

பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு வைபவம் பாடசாலை அதிபர் ஜனாப் எஸ். எச். ஏ. அஸீஸின் தலைமையில் வெகு சிறப்பாக நடந்தது.

வைபவத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட பல இலக்கிய ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். இப்பெரு விழா பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக இடம்பெற்ற விழா என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமையுரையை வித்தியாலய அதிபர் ஜனாப் எஸ். எச்.ஏ. அஸீஸ் வழங்கினார். இதழின் அறிமுகவுரையை இதழ் பொறுப்பாசிரியர் ஜனாப் எப். ராஸீக் பரீட்ஹ் நிகழ்த்தினார். கருத்துரைகளை ஜனாப் எம். ஐ எம். சிஹாம், ஜனாப் யூ.எல். கபைர் உட்பட பலரும் வழங்கினார்கள்.

சஞ்சிகையின் முதற்பிரதியை பாடசாலை அதிபர் சஞ்சிகை பொறுப்பாசிரியரிடமிருந்து பெற்று வெளியிட்டு வைத்தார். சிறப்புப் பிரதிகளை எம். எஸ். பர்ஹானா, ரி. மனோன்மணி, ஏ.சி.எம். ஹனீபா உட்பட பலரும் பெற்றுக் கொண்டார்கள்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக பல ஆசிரியர்கள் கௌரவம் பெற்றார்கள். மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் மேடை ஏற்றப்பட்டன.

நன்றியுரையை வித்தியாலய பிரதி அதிபர் ஜனாப் ஏ.எச்.ஏ. றஸாக் வழங்கினார். விழா நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நாடகக் கலைஞர் ஜனாப் எம். ஏ. றிஸ்வான் தொகுத்தளித்தார்.

# எதிர்த்தரப்புக்கு புலிச்சாயம் பூசும் பிரசாரம் வெற்றி தருமா?

அடுத்துவரும் பன்னிரெண்டாவது நாள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள். ஆம், இலங்கையின் 12 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவிருக்கும் நாள். வடக்கு கிழக்கு மக்களுக்கும் ஒரு திருப்புமுனையாக அமையவிருக்கும் நாள்.

பண்டிகை நாளை எதிர்பார்த்து நாட்களை எண்ணிக் கொண்டிருப்பது போன்று தேர்தல் நாளை கணக்கிட்டு காத்துக் கொண்டிருப்பது விநோதமானதுதான்.

அந்த வகையில் திருகோணமலையில் தேர்தல் களம் மிகுந்த திருப்புமுனையில் இருக்கின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 280 பேர். போட்டியிடும் கட்சிகள் ஆறு. மொத்த வேட்பாளர்கள் 42. நான்கு ஆசனங்களுக்காகவே இத்தனை போட்டி.

இம்முறை திருமலையில் விசித்திரம் என்னவென்றால் கட்சிகள் வேட்பாளர்களையோ, விருப்பு வாக்குகளையோ முதன்மைப்படுத்தவில்லை. கட்சியின் சின்னத்தைக் காட்டி ''கட்சியைப்'' பலப்படுத்துங்கள்.'' என்று மட்டும் கேட்டிருக்கின்றன. இது வழமைக்கு மாறாகத்தான் இருக்கின்றது.

பொ.ஐ. முன்னணி, ஐ.தே.கட்சி, (ஸ்ரீ.ல. மு. காங்கிரஸும் இணைந்துள்ளது.) புதிய இடது சாரி முன்னணி, ஜே.வி.பி மற்றும் ஈ.பி.டி.பி. தமிழர் கூட்டமைப்பு ஆகிய ஆறு கட்சிகளுமே போட்டியிடுகின்றன. சுயேச்சைக்குழு எதுவும் போட்டியிடவில்லை. கடந்த வாரத்தைவிட இந்தவாரம் 'களம்' மாற்றம் பெற்று இருக்கின்றது.

பொ.ஐ. முன்னணி எதிர்த்தரப்புக்கு புலிச்சாயம் பூசிப் பூசியே வாக்கு வேட்டையாடத் துடிக்கின்றது.

''யானை — புலி—நரி தேசத் துரோகிகளின் கூட்டை தோற்கடிக்க ஜே.வி.பி.யுடன் இணைந்து கொள்ளுங்கள்'' என்று ஜே.வி. பி. ஒரு புறம் பிரசாரம் செய்து வருகின்றது.

பொ.ஐ.மு. மற்றும் ஐ.தே.க. ஆகிய கட்சிகளில் போட்டியிடும் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களாலும், ஈ.பி.டி.பி.யினாலும் சிதறடிக்கப்படுவதற்கென சில வாக்குகள் காத்து இருக்கின்றன.

பிந்திக் கிடைத்த தகவலின்படி கந்தளாய், மூதூர், கிண்ணியா போன்ற இடங்களில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களோடு அண்டி வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள், அவர்களது இன்பதுன்பங்களில் கலந்துகொண்டு வேலை வாய்ப்பு — பிற உதவிகள் பெற்றவர்கள், கலவரங்களின் போது அவர்களிடம் அடைக்கலம் பெற்றவர்கள் என்ற வகையில் தமிழ் வாக்குகள் பிரிந்து செல்லக்கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

''தூரத்துத் தண்ணி ஆபத்துக்கு உதவாது'' என கூறும் இவர்களிடம், என்ன சொல்லிப் புரிய வைப்பது? இப்பொழுதும் இரு பெரும் கட்சிகளின் பின்னால் பழங்கால தூண்கள் என்றபோர்வையில் திரிபவர்களை எப்படி மீட்பது?

இத்தகைய அவதானங்கள் மூலம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமிழ் ஆசனங்களை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதை எதிர்வு கூறமுடிகின்றது.

எஸ். எஸ். ஆர்.

# மலையக அபிவிருத்திக்கு ரணில் அளிக்கும் உறுதி

மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் தோட்டங்கள் தோறும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்படும். தொழிலாளர்களுக்கான வீடமைப்பு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, சுய தொழில் முயற்சி, பாடசாலை அபிவிருத்தி, மற்றும்


ரணில்

உயர்கல்வி அபிவிருத்தி என்பனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதி அளித்துள்ளார்.

கொட்டகலையில் நடைபெற்ற ஐ.தே.க தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு உறுதியளித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் தான் தோட்டத் தொழிலாளர்களுக்கென என தனியான அமைச்சு உருவாக் கப்பட்டது என்று சிலர் தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனால் அது பெயர் அளவில் மட்டுமே. எந்த ஓர் அமைச்சரையும் அவர்கள் சுதந்திரமாக செயல்படவிடவில்லை.

ஆறுமுகம் தொண்டமானுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கிவிட்டு அப்பணத்தை செலவிடக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தவர் ஜனாதிபதி. இன்று ஆறுமுகம் எதையும் செய்யவில்லை என்று குறை கூறுகின்றார்.

ஐ.தே.க ஆட்சியின் போதே தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது. மலையக இளைஞர் யுவதிகளுக்கு முதன் முறையாக ஆசிரியர் நியமனங்களை வழங்கினோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆண் – பெண் பேதமின்றி சமசம்பளத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். தோட்டத்தில் பணிபுரியும் அனைத்துப் பெண்களுக்கும் பிரசவ சகாயப் பணம் வழங்கினோம். நான் கல்வி அமைச்சராக இருந்த போதே சுவிஸ் அரசின் அனுசரணையுடன் சீடா நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தித் திட்டம் இங்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் தோட்டப்புற பாடசாலைகளுக்குப் பல கோடிரூபா செலவில் நவீன கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியே மலையக சமுதாய அபிவிருத்திக்கு அடித்தளமிட்டது. இதை எவரும் மறுக்க முடியாது.

மீண்டும் நாம் ஆட்சிக்கு வருவது உறுதி. முதற்கட்டமாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பாரிய அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் அதிகரிக்கப் படும். சுய தொழில் முயற்சி, கால்நடை அபிவிருத்தி என்பன ஊக்குவிக்கப்படும். படித்த இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் தராதரத்திற்கேற்ப தொழில் வாய்ப்புகள் ஏற் படுத்தப்படும். மலையகத்தில் தொழிற்சாலைகள் நிறுவப்படும். நகர்ப்புறப் பாடசாலைகளைப் போல் மலையகப் பாடசாலைகளும் தரமுயர்த்தப்படும். கணினி மற்றும் தொழில் நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும். அதற்கான ஆய்வு கூடங்கள் அமைக்கப்படும்.

இவை வெறும் தேர்தல் வாக்குறுதி மட்டும் அல்ல. இவை அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்பது உறுதி இப்படி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

கொட்டகலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டத் தில் முன்னைய அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்கா, ஆறுமுகம் தொண்டமான், பெ. சந்திரசேகரன், முத்து சிவலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

மலையக மக்கள் பல்வேறு அரசியல் மேடைகளைக் கண்டவர்கள். அரசியல் வாக்குறுதிகளைக் கேட்டுச் சலித்துப் போனவர்கள். எல்லா வாக்குறுதிகளையும் கேட்க நன்றாகத்தான் இருக்கின்றது. வாக்குறுதிகளை வாரி வீசுபவர்களுக்கு பக்கபலமாக இருக்கும் மலையக அரசியல் தலைவர்கள் அவற்றை நடைமுறைப்படுத்திக் கொள்வதிலேயே தங்கி இருக்கின்றது மலையக அபிவிருத்தி.

# வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் ஏற்பட்ட மாற்றம் காலத்தின் தேவை

கடந்த ஒரு வருட காலத்துக்குள் இலங்கையின் அரசியல் களநிலைவரம் குறிப்பிடத்தக்கதொரு மாறுதலுக்குள்ளாகி இருப்பது சகலராலும் உணரக்கூடியதாக உள்ளது. கடந்த கால பெரும்பான்மை இன அரசியல்வாதிகளால் புலிகளாக வர்ணிப்பட்ட சிறுபான்மை இனங்கள் இன்று ஆணிவேர்களாகி பெரும் விருட்சங்களாக உருவெடுத்துள்ளன. நிலைமையை தீர்மானிக்கும் சக்திகளாக அவை வளர்ந்திருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

இவ்வாறு மலையகத் தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலம்வரை சிறுபான்மைக் கட்சிகளை ஓரங்கட்டி அரசியல் சாதனை படைக்க முனைந்த சதிவலைப் பின்னல்கள் அறுக்கப்பட்டுவிட்டன.

இதன் விளைவாக மீண்டுமொரு வாக்கு வேட்டை இப்போது ஆரம்பமாகி இருக்கிறது.

இன்று மலையகத்திலும் வடக்கு கிழக்கிலும் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றங்கள் காலத்தின் தேவையாக இருப்பதை

**மலையகக் கண்ணோட்டம்**
**இரா.புத்திரசிகாமணி**

நாம் உணரத்தவறி விடக் கூடாது.

கடந்த கால கசப்பான பல நிகழ்வுகளால் கூறுபட்டுக் கிடந்த நம் தமிழ்த் தலைமைகள் இக்கால கட்டத்தின் தேவை உணர்ந்து, தமக்கிடையே ஒன்றுபட்டு ஒரு குடையின் கீழ் மக்கள் முன் தோன்ற எடுத்திருக்கும் முடிவை நாம் வரவேற்கத்தான் வேண்டும்.

பெரும்பான்மைக் கட்சிகளின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக என்றுமே தமிழன் நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், ஆட்சியில் இருப்போருக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுத்து சாதிக்கக் கூடியவற்றை சாதிக்க வேண்டும். இந்த நாட்டின் மூன்றாவது அரசியல் சக்தியாக நிச்சயம் தமிழர் உருவெடுக்க வேண்டும். இந்த நிலையைத் தமிழ் மக்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மலையகத்தில் இன்று எமது தமிழ் அரசியல்வாதிகள் தாக்கப்படுகிறார்கள். தமிழ் பேசும் மக்களுக்கு இனவாதிகளின் அச்சுறுத்தல்கள் பல கோணங்களிலும் வந்து கொண்டிருக்கின்றன.

காலம் காலமாக பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு வந்த மலையகத் தமிழர்கள் இன்று படிப்படியாக ஒரு சக்தியாக உருவெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். மலையகம் ஒரு விடிவைத் தேடி இன்று மெல்ல மெல்ல எழுச்சி காண்கிறது.

இந்நிலையில் மலையகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தமிழ்த் தரப்புத் தலைமைகளின் ஒற்றுமையை நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றோம். இன்று மலையகத்தின் பெரும் சக்தியாக உருவெடுத்திருக்கும் மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டுச் சக்தியை நாம் ஆதரிக்கின்றோம்.

கடந்த காலங்களில் கூறுபட்டு சேறுபட்டுப் பறிபோய் விட்ட மலையகத்தின் தமிழ் பிரதிநிதித்துவங்களை மீட்டெடுப்பதற்கு மலையக மறுமலர்ச்சிக் கழகம் தனது மனப்பூர்வமான பங்களிப்பையும் ஆதரவையும் மலையக கூட்டுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

எனவே, மலையகத்தின் தமிழ் வாக்காளர்களே... தமிழ் தலைமைகளின் இந்த ஒற்றுமைக்கு வாக்களித்து மலையகத் தமிழரின் சக்தியை உங்கள் வாக்குப் பலத்தால் தீர்மானியுங்கள். சரித்திரம் படைத்து ஒரு சாதனை புரிய வாருங்கள்.

கண்டி மாவட்டத்தின் தமிழ் வாக்காளர்கள் கடந்த காலத்தில் தாம் விட்ட தவறுகளை உணர்ந்து இம்முறை நிச்சயம் தமது வாக்குகளைச் சிதறடிக்கவிடாது பயன்படுத்த வேண்டும்.

அந்த வகையில்... ஓரணியில் நின்று – இன்று எம்முன் வந்திருக்கும் மலையக கூட்டணி வேட்பாளர்களின் கரங்களை எமது வாக்குகளால் பலப்படுத்துவது காலத்தின் தேவை.

கண்டி மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களே... பறி கொடுத்த நாடாளுமன்ற ஆசனத்தை மீட்டெடுப்போம் வாருங்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

– கண்டியன்

# டேஸ்ட் கடை தணிகாசலம்

"முன்ன பின்ன தெரியாதவன் எல்லாம் வந்து ஒப்பாரி வைக்கிறானுங்க. செத்த பொணத் தைக்கூட நிம்மதியா கொண்டு போக உடமாட்டேங்கிறாங்களே" அலுத்துக் கொண்டே அப்பாவு தலைவர் டேஸ்ட்கடை தணிகாசலத்தின் கடை பெஞ்சில் வந்து குந்தினார்.

"என்ன அப்பாவு தலைவரே செத்த வீட்டில இருந்து வாராப்புல இருக்கு. இந்தாங்க இந்த தேத்தண்ணியை குடிங்க" தணிகாசலம் ஒரு கப் டீயை கொடுத்தார்.

"அது சரி செத்த வீட்டுல முன்னுக்கு நின்னு காரியம் பாக்க வேண்டிய நீங்க இப்படி ஒஞ்சி ஒக்காந்திட்டீங்க"



"அந்த வயித்தெரிச்சல என்னான்னு கேளுங்க தணிஅண்ணே மேட்டுலயத்து ராமையா கிழவன் எவ்வளவு நல்லா இருந்த மனுசன். பிந்துனுவெவ கொலப்பத்தில கிழவனோடமகனுங்க மூனுபேரும் பொயிட்டாங்க"

"ஆமாங்க தலைவரே அந்த மூனு பசங்களும் நம்ப தோட்டத்துல இருக்கப்ப ஒரு நாய்க்குட்டி கூட இங்க வராது"

"அப்புடி வீமன் காமன் மாதிரி இருந்த பசங்கள அள்ளி வச்சிப்புட்டு கிழவன் நடைபொணமா பொயிரிச்சி"

"வேலை இல்ல, ஊட்டுல யாரும் இல்ல கால்போன போக்குல அலைஞ்சி படுத்த படுக்கையா போச்சி. ஏதோ நம்ப தோட்டத்து சனங்க ஆளு ஆளுக்கு பாத்துக்கிட்டாங்க ஓட்டுக்கேட்க வந்த மந்திரிமாரு எல்லாம் இந்தப் பசங்கங்கிட்ட எவ்வளவு வேல வாங்கினாங்க. ஆனா அந்த புள்ளாங்கலோட அப்பங்காரன்படுர அவஸ்தைய எந்த கட்சிக்காரனும் எட்டிக் கூட பார்க்கல"

"அது எங்கயும் நடக்கிற விசயம்தானே தலவரே தேவைக்கு கால புடிப்பாங்க. விஷயம் முடிஞ்ச ஒடனே காலை வாரி விட்டுடுவாங்க அது எல்லாம் பழைய கதை. இப்ப ஏன் நீங்க அலுத்துக்கிறீங்க"

"அங்க தானே அண்ணே இருக்கு விஷயமே. டவுன் ஆஸ்பத்திரியில் இருந்து பொணத்த வீட்டுக்கு கொண்டு வந்தப்ப டவுன்ல பெட்டி கடைக்கிட்ட நின்ன ரெண்டு மூனு பேரு வந்து விசாரிச்சாங்க"

"ஏன் இவரு சொகம் இல்லாம இருந்து தானே செத்தாரு அதுக்கு என்ன விசாரணை?"

"அந்த விசாரணை ஒன்னும் இல்லீங்க அண்ணே. தேர்தல் வந்ததும் போதும் இந்தப் பந்தக்காரனுங்க பெட்டிக்கடை, ஆஸ்பத்திரி, கலியாண ரெஜிஸ்டர் கந்தோர். இப்புடி எல்லா இடத்திலும் நிக்கிராங்க. அங்க ஏதாவது ஒன்னு நடந்தா ஒடனே அவுங்க அவுங்க கச்சியில் ஓட்டு கேக்குரவுங்கள கூட்டிக்கிட்டு வந்திடுறானுங்க. ஒதவி செய்யிர மாதிரி படமும் புடிச்சிக் கிறாங்க"

"இது என்னடா புது சங்கதியா இருக்கு."

"இது மாதிரி தாங்க அண்ணே இன்னக்கி ராமையா கிழவன் ஊட்டுலயும் இந்த அரசியல் வாதிங்க தொல்லை பொறுக்க முடியல காலையில் இருந்து ஆளுமாத்தி ஆளுவாரனுங்க. கூட்டம் கூட்டமா வந்து தொலையிரானுங்க"

"அது தான் ஜீப்புகளும் காருகளும் மேலயும் கீழயும் ஓடுதா. நான்கூட என்னமோன்னு பார்த்தேன்"

"வந்தவனுங்க சும்மா இருந்தா பத்தாதா யாரு எவருன்னே தெரியல. வாரவுங்க போர வுங்க எல்லாரையும் கட்டிப்புடிச்சி அழுவுரா னுங்க. இவனுங்களுக்கும்கூட வார அடியாட்க ளுக்குப் சோடா குடுத்தே களைச்சி போனாங்க போங்க"

"என்னாங்க தலைவரே செத்தவூட்டுக்கும் நாலு மனுசர் வந்தாத் தானே நல்லா இருக்கும். நமக்கும் உதவியா இருக்கும்"

"என்னமோ உதவி போங்க. இவங்களால பெரிய ஒவத்திரியமா போச்சி"

"அப்புடி என்னாங்க தலைவரே நடந்திச்சி?"

"ஓட்டு கேக்க வந்தவனுங்க வேன்ல பூட்டி இருந்த லவுர்ஸ் பீக்கர கொண்டு வந்து கூட்டம் பேச ஆரம்பிச்சிட்டாங்க. ராமையா அண்ணன் பேரை கூட தெரியாதவனுங்க. இந்திரன் சந்திரன்னு பேசி ஒப்பாரி வைக்க ஆரம்பிச்சிட்டாங்க"

"சொல்லுங்க சொல்லுங்க இதுவும் நல்லாத்தான் இருக்கு"

"ஒருத்தன் மாத்தி ஒருத்தன் பேச ஆரம்பிச்சிட்டானுங்க. ஆதலவேற அவனைபத்தி இவனும், இவனபத்தி அவனும் கொற சொல்ல ஆரம்பிச்சி கடைசியில நடந்த கலபுலயில பொணப் பெட்டிய பெரட்டிப்புட்டானுங்க"

"அட சனியன்களா செத்த வீட்டிலயும் அரசியலா?"

"ஆமாங்க அண்ணே அந்த செத்தமனுசனுக்கு சாங்கியம் கூட சரியா செய்ய முடியாம போச்சி"

"அப்படியா சங்கதி. அப்பரம் எப்படி சமாளிச்சிங்க"

"நல்ல நேரத்தில நம்ம கந்தசாமி வந்தான். நான்கூட பயந்துட்டேன். பழைய மாதிரி கசிப்பு அடிக்க ஆரம்பிச்சிட்டானோன்னு"

"இல்லங்க தலவரே இப்ப கந்தன் ரொம்ப திருந்திட்டான்"

"அத தாங்க சொல்ல வந்தேன். அவனுங்க பேசுன மைக்க புடுங்கி. ஒங்கள்ல எத்தனை பேருக்கு இந்த பெரியவரோட பேரு தெரியும். அவரோட புள்ளங்க யாரு. அவுங்க புள்ளங்கல அடிச்சி கொன்னப்ப எத்தன பேரு வந்தீங்க. யாருயாரு ஒதவி செஞ்சீங்க, இந்த பெரிய மனுசன் பசி பட்டினியா கெடந்தப்ப ஒரு துண்டு ரொட்டி கொண்டாந்து கொடுத்தது யாரு, எல்லாத்தையும் உடுங்க. இவரு ஆஸ்பத்திரியில கெடந்தப்ப ஒரு கூறு வெத்தில கொண்டு போய் குடுத்து பார்த்தது யாரு. தைரியம் இருந்தா முன்னுக்கு வாங்கன்னு ஒரு போடு போட்டான்"

"அடிச்சக்க கந்தனும் நல்லாத்தான் குடுத்திருக்கான்"

"கந்தன் போட்டபோடுல இந்தப் பயலுங்க எல்லாம் வந்த றோட்டு தெரியாம மெதுவா கிளம்பிட்டாங்க. ஒருபடியா பொணத்தை அடக்கம் பன்னிப்புட்டு வந்திட்டோம்."

"நல்ல காரியம் செஞ்சிக்க தலைவரே"

"ஆமாங்க தனி அண்ணே மழைவர்ற மாதிரி இருக்கு நானும் போய் குளிச்சிட்டு வாரன்" கிளம்பினார் அப்பாவு தலைவர்.

அப்பாவு தலைவர் போனபின் றேடியோவை முடுக்கினார் தணிகாசலம். அதில் "உன்ன சொல்லி குற்றமில்லை. ஊரை சொல்லி குற்றமில்லை" என ஒலித்தது.

– இராசிகா

# டெண்டுல்கர் மீது தடை கிரிக்கெட் உலகில் கொந்தளிப்பு

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு தன்டனை வழங்கப்பட்ட விடயம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது டெஸ்ட்போட்டியின்போது சச்சின் டெண்டுல்கர் பந்தை சேதப்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டார்.

அதனால் போட்டி ஊதியத்தில் 75 சதவீத அபராதத்துடன் ஒரு விளையாட ஒத்திவைக்கப்பட்ட தடையும் விதிக்கப்பட்டது.

அத்துடன் தீப்தாஸ் குப்தா, ஹர்பஜன் சிங், விரேந்தர் ஸேவாக் சிவ்சுந்தர் தாஸ் ஆகியோர் அடிக்கடி ஆட்டமிழப்பு கோரி முறையிட்டதாக குற்றம் சாட்டப்பட்டனர். அணித் தலைவர் கங்குலி வீரர்களைக் கட்டுப்படுத்தத் தவறியதாகக் குற்றம் சுமத்தப்பட்டார்.


டெண்டுல்கர்

இவர்களில் ஸேவாக்கிற்கு 75சதவீத அபராதமும் ஒரு போட்டியில் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டது. ஏனையோருக்கு அபராதத்துடன் ஒத்திவைக்கப்பட்ட தடை விதிக்கப்பட்டது.

இதில் டெண்டுல்கருக்குத் தண்டனை விதிக்கப்பட்டமை இந்தியாவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் முன்னாள் வீரர்கள் பத்திரிகையாளர்கள் அரசியல்வாதிகள் ஆகியோ ரும் இத்தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

டெண்டுல்கர் பந்தை சேதப்படுத்தவில்லை. பந்திலிருந்த அழுக்கை அகற்றவே முனைந்தார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

டெண்டுல்கருக்குத் தண்டனையளித்த மத்தியஸ்தரை மாற்ற வேண்டும். அல் லது தண்டனையை நீக்கவேண்டும். இவ் வாறு இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா கோரினார்.

இக்கோரிக்கையை ஐ.சி.சி நிராகரித் தது. இதையடுத்து போட்டியிலிருந்து விலகப் போவதாக இந்தியா அச்சுறுத்தியது.

இந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக மத்தியஸ்தர் மைக் டென்னிஸை ராஜினாமா செய்யும்படி தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கோரியது. அதற்கு டென்னிஸ் மறுத்தார். இறுதியில் மைக் டென்னிஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்ற தடை விதித்தது தென் னாபிரிக்கா.

ஐ.சி.சி. விடவில்லை. தாம் நியமித்த மத்தியஸ்தரை நீக்கியதால் இப் போட்டியை உத்தியோகபூர்வ டெஸ்ட் போட்டியாகக் கருத முடியாது என்று அறிவித்தது ஐ.சி.சி.

தென்னாபிரிக்கா இந்திய அணிகளுக்கிடையிலான முதலிரு போட்டி முடிவுகளின்படி இத்தொடரின் வெற்றி கணிக்கப்படும். இதன்படி தென்னா பிரிக்கா 1-0 விகிதத்தில் வென் றது எனக் கருதப்படுகிறது. இவ் வாறு ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

ஆனால் ஐ.சி.சி தலைவர்கள் சுயமாக இத்தகைய முடிவை எடுக்கமுடியாது. நிறை வேற்றுக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களே இப்போட்டி யின் அந்தஸ்து குறித்து தீர் மானிக்க முடியும். இவ்வாறு ஜக்மோகன் டால்மியா கூறினார்.

இதேவேளை ஐ.சி.சி மத்தியஸ்தருக்கு எதிராக இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கை களுக்கு இங்கிலாந்து, அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைகள் ஆட்சேபித்துள்ளன.

இந்திய கிரிக்கெட் சபை ஆசிய நாடுகளின் ஆதரவைக் கோரியுள்ளது. இவ்விடயத்தில் இந்தியாவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆதரவு தெரிவித்தது.

இதேவேளை இந்தியா, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டிகளில் மத்தியஸ்தராகக் கடமையாற்ற நான் அழைக்கப்பட்டால், அதை ஏற்றுக்கொள்வேன். இவ்வாறு மைக் டென்னிஸ் கூறினார். இவர் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் ஆவார்.




நுவரெலியா கால்பந்தாட்டச் சங்கம் நுவரெலியா சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் அனுசரணையுடன் அண்மையில் 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தியது. கொட்டகலை த.ம.வி. இச்சுற்றுப் போட்டியில் சாம்பியனாகியது. அப்பாடசாலைக்கான பல்லாயிரம் ரூபா பெறுமதியான கால்பந்தாட்ட சீருடைகளை நுவரெலியா பிரதி நகர முதல்வரும் மாவட்ட கால்பந்தாட்ட லீக் செயலாளருமான எல்.நேருஜி பாடசாலையின் கால்பந்தாட்டப் பொறுப்பாசிரியரிடம் கையளிக்கிறார். அருகில் கொட்டகலை த.ம.வி. பிரதி அதிபர் வி.குமார் எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராம நுவரெலியா இயக்குநர் திவாகர் ரட்ணதுரை, அந்நிலையத்தின் உத்தியோகஸ்தர் குமார் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# சிறுநீர் சோதனையில் இங்கிலாந்து வீரர்கள்!

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் தினமும் தமது சிறுநீரைப் பரிசோதிக்க வேண்டும். இவ்வாறு இங்கிலாந்து அணியின் மருத்துவர் நைகல் ஸ்டொக்கில் கூறியுள்ளார்.

உடலின் நீர் சமநிலையைப் பேணுவதற்காகவே வீரர்கள் இவ்வாறு கோரப்பட்டுள்ளனர். தற்போது இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளது.

இங்கிலாந்து அணியினர் தமது நாட் டில் குளிர்கால ஆடைகளுடன் பயிற்சி பெற்றனர். ஆனால் இந்தியாவில் 45பாகை செல்ஸியஸ் வெப்பநிலையை எதிர்கொள்கின்றனர். இதனால் வீரர்களின் உடலில் நீர்பற்றாக்குறை ஏற்படலாம் என இங்கிலாந்து கிரிக்கெட் அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

தினமும் குளிர்நீரில் குளித்தல், உடல் எடையை அளவிடல் ஆகியவற்றுடன் வீரர்கள் தமது சிறுநீரைப் பரிசோதிக்கவும் வேண்டும். சிறுநீரின் நிறம், அளவு, சிறுநீர் கழிக்கும் தடவைகள் ஆகியவற்றை கணிப்பிட வேண்டும்.

நிறம், நாற்றம், என்பன இல்லாமல் தாராளமாக சிறுநீர் கழித்தால் உடலின் நீர் சமநிலை சாதகமாக இருக்குமென்று அர்த்தம். அப்படி இல்லாவிட்டால் வீரர்கள் கூடுதலான அளவு நீரைப் பருக வேண்டும்.

விளையாடும் போது ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் 100-150 மி.லீ.நீர் அருந்த வேண்டும். தேநீர், கோப்பி, மதுபானங்களைக் கண்டிப்பாக மட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு இங்கிலாந்து வீரர்களிடம் கூறப்பட்டுள்ளது.

# பொரிஸ் பெக்கர் மீது வரிமோசடி குற்றச்சாட்டு

முன்னாள் டென்னிஸ் வீரர் பொரிஸ் பெக்கர் வரி மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

1985 இற்கும் 1993 ஆம் ஆண்டிற் கும் இடைப்பட்ட காலத்தில் வரி ஏய்ப்பு செய்ததாகப் புகாரிடப்பட்டது. இது தொடர்பான புலனாய்வுகள் நடைபெறுகின்றன. இவ்வாறு ஜேர்மன் நீதியமைச்சு கடந்த வாரம் தெரிவித்தது.

வரி செலுத்துவதிலிருந்து தப்புவதற்காக மொனாக்கோ நாட்டு முகவரியொன்றைப் பாவித்ததாகவும் குற்றம் கூறப்படுகிறது.


பொரிஸ் பெக்கர்

சுமார் 5 கோடி ஜேர்மன் மார்க்குகள் வரி செலுத்த வேண்டுமென அதிகாரிகள் பெக்கரிடம் தெரிவித்தனர். இவ்வாறு ஜேர்மன் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் 2.5 கோடி மார்க்குகள் செலுத்தும்படியே கோரப்பட்டுள்ளது. இவ்வாறு பெக்கரின் சட்டத்தரணிகள் கூறினர். 3 தடவை விம்பிள்டன் சாம்பியானாகத் தெரிவானவர் பெக்கர். மிகவும் இளம் வயதில் விம்பிள்டன் சாம்பியனாகிய பெருமையும் இவருக்கே உரியது.

1985 ஆம் ஆண்டில் தனது 17 வயதில் முதல் முறையாக விம்பிள்டன் பட்டத்தைக் கைப்பற்றினார். 1999ஆம் ஆண்டில் டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றார். தற்போது விளையாட்டுத் தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஜேர்மன் சட்டத்தின்படி பொரிஸ் பெக்கர் மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்படுமானால் அவருக்கு 10 வருடங்கள் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

ஆனால் இவை வெறும் சம்பிரதாய நடவடிக்கைகளே. விரைவில் இவ்விடயத்தில் இணக்கப்பாடு ஏற்படலாம். இவ்வாறு பொரிஸ் பெக்கரின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஜேர்மனியின் மற்றொரு டென்னிஸ் நட்சத்திரமான ஸ்டெபி கிராப்பின் தந்தையான பீட்டர் கிராப் வருமானவரி மோசடி செய்ததாக 1997 ஆம் ஆண்டு குற்றம்சுமத்தப்பட்டார்.

தனது மகளின் 70 லட்சம் டொலர் வருமானத்திற்கு முறையாக வரி செலுத்தவில்லையென அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இதனால் 2 வருடங்களைச் சிறையில் கழித்தார் பீட்டர் கிராப்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## உலகக் கிண்ணக் கால்பந்தாட்டம்:

# தகுதி பெற்றபின் பயிற்றுநர் நீக்கம்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கால் பந்தாட்டத்தின் இறுதிச் சுற்றுக்கு பரகுவே தகுதி பெற்றது. இத் தகுதியை பெற்ற 9 நாட்களுக்குள் தனது பயிற்றுநரை பதவி நீக்கம் செய்துள்ளது அந்நாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனம்.

இறுதியாக விளையாடிய தகுதிகாண் போட்டிகள் இரண்டிலும் உருகுவே தோல்வியுற்றமையே இதற்குக் காரணம். வெனிஸுலா அணியுடன் 3-1 கோல்களாலும் கொலம்பியா அணியிடம் 4-0 கோல்களாலும் உருகுவே தோற்றது. ஆனால் இப்போட்டிகளுக்கு முன்பே அவ்வணி உலகக்கிண்ணத்திற்கானத் தகுதியைப் பெற்றிருந்தது.

"கடந்த இரு வருடங்களாக நாம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் கொலம்பியாவுடனான் போட்டியுடன் வீணாகிவிட்டன. உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக புதிய உத்திகளைக் கையாள வேண்டியுள்ளது." இவ்வாறு பரகுவே கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

பரகுவே அணியின் பயிற்றுநர் சேர்ஜியோ மார்காரியன் ஆவார். இவர் ஒரு உருகுவே பிரஜை. 1999 ஆம் ஆண்டில் பரகுவே அணியின் பயிற்று நராகப் பொறுப்பேற்றார். அவரது வழிகாட்டலின் கீழ் உருகுவே 18 போட்டிகளில் பங்குபற்றி 9 வெற்றிகளையும் 6 தோல்விகளையும் பெற்றுள்ளது. 3 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன.

கடந்த வாரம் நடைபெற்ற கொலம்பியாவுடனான போட்டியில் பரகுவே தோற்றது. இத்தோல்வி மார்காரியனின் தாய் நாடான உருகுவேயிலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

காரணம் தென் அமெரிக்காவின் 5ஆவது இடத்திற்காக உருகுவேயிற்கும் கொலம்பியாவிற்கும் இடையே கடும் போட்டி நிலவியது. "மாக்காரியம் மீண்டும் உருகுவேவுக்குள் நுழைய முடியாது" இவ்வாறு உருகுவே அணியின் முன்கள வீரர் டாரியோ சில்வா கூறினார்.

பரகுவே அணி தனது கடைசி 2 போட்டிகளிலும் முக்கிய வீரர்கள் இருவர் இன்றியே விளையாடியது. முன்கள வீரர் ரோக் சான்டகுரூஸ், அணித் தலைவரும் கோல் காப்பாளருமான ஜேம்ஸ் லூயிஸ் ஆகியோரே இவர்களாவர்.

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற போட்டியொன்றில் பிரேஸில் வீரர் ரொபர்ட் மேடோ கார்லோஸின் முகத்தில் துப்பினார் லூயிஸ்.

இதனால் அவருக்கு 4 போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ண இறுதிச்சுற்றிலும் பரகுவேயின் முதலிரு போட்டிகளில் அவர் பங்குபற்ற முடியாதுள்ளார்.

# எஸெக்ஸ் அணியில் ஃபிளவர்

ஸிம்பாப்வே கிரிக்கெட் வீரர் அன்டி ஃபிளவர் இங்கிலாந்தின் எஸெக்ஸ் அணியில் விளையாடவுள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள இங்கிலாந்துப் பிராந்திய அணிகளுக்கிடையிலான போட்டிகளில் அவர் பங்குபற்றுவார்.


அன்டி ஃபிளவர்

விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ஃபிளவரின் டெஸ்ட் துடுப்பாட்டச் சராசரி 54 ஆகும். டெண்டுல்கருக்கு அடுத்ததாக கூடிய சராசரியைக் கொண்டவர் இவர்.

அடுத்த வருடம் அவுஸ்திரேலிய சுற்றுலாவின் பின்னர் மே மாதத்தில் எஸெக்ஸ் அணியில் பிளவர் விளையாடு வார். "பிராந்திய சாம்பியன்ஷிப் சுற்றுப்போட்டியிலும் ஒரு நாள் தொடரிலும் ஃபிளவர் எமக்குப் பெரும் சொத்தாகத் திகழ் வார்." இவ்வாறு எஸெக்ஸ் அணியின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவிட் கூறினார்.

நடைபெறவுள்ள ஐ.சி.சி நொக்அவுட் சுற்றுப்போட்டிக்காக மீண்டும் ஸிம்பாப்வே அணிக்குத் திரும்புவார் பிளவர். ஐ.சி.சி நொக்அவுட் சுற்றுப் போட்டி செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

# கண்டியில் சுடர் ஒளி அலுவலகம்

சுடர் ஒளி பத்திரிகை தனது முதலாவது பிராந்திய கிளை நிறுவனம் ஒன்றை அண்மையில் கண்டியில் திறந்து வைத்தது.

மத்திய பிரதேச அலுவலகமான இந்த நிறுவனம், கண்டி — காசல் வீதியில் உள்ள நபீஷா கட்டடத்தின் முதல் மாடியில் தற்பொழுது இயங்கி வருகிறது.

இந்த கிளை நிறுவனத்தின் திறப்பு விழா வைபவத்தில் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன், முன்னாள் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரும் தேசிய கல்வி நிறுவனத்தின் கண்டி நிலைய விரிவுரையாளருமான எம். வை. எம் முஸ்லிம், கண்டி திரித்துவக் கல்லூரி ஆசிரியர் இரா. சிவலிங்கம், தமிழோவியன், தமிழ் ஆவணக் காப்பகத்தின் பணிப்பாளர் குரும்பசிட்டி கனகரத்தினம், இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரரான முத்தையா முரளிதரன் தந்தையும், பிரபல தொழில் அதிபருமான எஸ். முத்தையா, வர்த்தகப் பிரமுகர்களான நா. இரத்தினசபாபதி, ஏ.எம். இஸ்மைல் ஆகியோரும் மற்றும் பொதுப்பணியாளர்களும், பத்திரிகை விற்பனையாளர்களும் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவை தொடர்ந்து சுடர் ஒளி பொது முகாமையாளர் வீ. சோமசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் பல பிரமுகர்களும் உரை நிகழ்த்தினர்.


தமிழோவியன்


கலாநிதி துரை மனோகரன்


எம்.வை.எம்.முஸ்லிம்


தொழில் அதிபர் எஸ்.முத்தையா சுடர் ஒளி பொது முகாமையாளர் வீ.சோமசுந்தரத்திடமிருந்து சுடர் ஒளி பிரதிகளைப் பெறுகிறார்.

பேராசிரியர் சி. தில்லைநாதன் பேசுகையில், ''ஊடகத்துறை உலகளாவிய ரீதியில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ள இவ்வேளையில் வாசகர்களுக்கு எமது நாட்டுப் பத்திரிகைகளும் சரியான தகவல்களை வழங்குவதில் முக்கிய பணியாற்ற வேண்டியுள்ளது.

தமிழ்ப் பத்திரிகைத்துறை வளர்ச்சியில் மற்றொரு படிக்கல்லாக சுடர் ஒளி பத்திரிகை வெளிவந்திருப்பது தமிழ் பேசும் மக்களின் கல்வி, சமூக, சமய, பொது அரசியல் மேம்பாட்டுக்கு பெரிதும் உதவும்'' என்றார்.


பேராசிரியர் சி.தில்லைநாதன் உரை நிகழ்த்துகிறார்.

பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி துரை மனோகரன் பேசுகையில்,

"அறிவுக்கும் பொழுது போக்குக்கும், சிந்தனை வளர்ச்சிக்கும் பத்திரிகைகள் துணையாக இருக்கின்றன. இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தொட்டுக் காட்டவும் பிரச்சினைகளுக்கு நியாயம் தேடவும் அளப்பரிய பங்கை தமிழ்ப் பத்திரிகைகள் செய்து வருகின்றன.

இப் பணிக்கு மேலும் ஒரு படியாக சுடர் ஒளி நாளிதழ் வெளி வந்திருப்பது மகிழ்ச்சிதருகிறது. தனக்குரிய பாதையைத் தேர்ந்தெடுத்து சுடர் ஒளி செல்வதைக் காண்கிறோம். இது தமிழுக்கு ஆரோக்கியமான வளர்ச்சியை மேலும் உருவாக்கியுள்ளது. தமிழ் பேசும் வாசகர்கள் நிச்சயமாக இந்த முயற்சியை வர வேற்பார்கள்'' என்றார்.


நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

விரிவுரையாளர் எம்.வை.எம். முஸ்லிம் பேசுகையில் தமிழ் பேசும் மக்களுக்கு சுடர் ஒளி ஒரு வரப்பிரசாதம் என்றார்.

— அப்துல் றஸாக்

# ஜீவாவின் செருக்கு; பட்டத்தையே தூக்கி எறிய வைத்துவிட்டது

**ஜீவாவுக்கு யாழ் பல்கலைக்கழக கௌரவப்பட்ட சர்ச்சை**

ஈழத்திலே சொக்கன், அகளங்கன், செங்கை ஆழியான், கே. ஆர். டேவிட், முல்லைமணி, தாமரைச்செல்வி, அருள் செல்வநாயகம், தெளிவத்தை ஜோசேப், புலவர்மணி செரிப்தீன், சில்லையூர் செல்வராஜன், சுபைர் இளங்கீரன் போன்ற தமிழறிஞர்கள் இருக்கும் பொழுது கௌரவப் பட்டத்துக்காக யாழ். பல்கலைக்கழகம் டொமினிக் ஜீவாவைத் தெரிவு செய்தது மடைத்தனம்.

அப்படியிருந்தும் அந்தப் பட்டத்தை ஏற்க மறுத்தது ஜீவா விட்ட மகா மடைத்தனம்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் கடந்த வருடம் 200, 300 பக்கங்களைக் கொண்ட 120 நூல்களை எழுதிய செல்வராஜ கோபாலுக்குத்தான் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது என்பதனை ஜீவா அறிவாரா!

எமது விடுதலைப் போராட்டத்தில் சாதி ஒழிப்பும் ஓர் அங்கம். அதனால் சாதி ஒழிப்புக்காகவும் போராடி வருகின்றது.

இந்த நிலையில் ஜீவா எதற்கெடுத்தாலும் கூட்டத்திலும் அறிக்கையிலும் சாதியைப் பயன்படுத்தி தன்னைத்தானே தாழ்த்திக் கொள்வது வேதனைப்பட வைக்கிறது. போராட்டத்தைப் பின்னடையச் செய்கிறது.

மேலும், இச் செய்கையானது மறைந்து கொண்டு வரும் சாதிப் பிரச்சினையைக் கூட்டுமேயொழிய குறைக்காது.

பல்கலைக்கழகம் சாதிக்காக ஜீவாவுக்கு கலாநிதிப் பட்டம் கொடுக்கவில்லை என்று கூறுவது முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியது. இது ஒரு குழந்தைப் பிள்ளைத்தனமான பேச்சு.

ஏனெனில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் எத்தனை இழிசனர்கள் பேராசிரியர்களாகவும் கலாநிதிகளாகவும் கடமை புரிகின்றார்கள் என்பது ஜீவாவுக்குத் தெரியாதா என்ன!

அவர்கள் இழிசனர்கள் என்பதற்காக பல்கலைக்கழகம் பட்டம் கொடுக்காமல் விடவில்லையே!

வறுமைக் கோட்டில் வாழும் எழுத்தாளர்கள் மல்லிகைக்காக தபாலட்டைகளில் கவிதை எழுதி அனுப்பினால், மல்லிகையை அவமதித்ததாகக் கூறி அந்தக் கவிதைகளையே கிழித்து எறியும் ஜீவாவின் செருக்கு—

ஆரம்ப எழுத்தாளர் அல்லது சிறிய எழுத்தாளர்கள் சந்திப்பதற்காக வாசல்படி தேடிச் செல்லும் வேளைகளில், இப்பொழுது சந்திக்க முடியாது என்று எழுத்தாளர்களையே எடுத்து எறியும் ஜீவாவின் செருக்கு—

பல்கலைக்கழகப் பேராசிரியர்களாலும் கலாநிதிகளாலும் மல்லிகைக்காக எழுதப்படும் கட்டுரைகளில் பெயர்களை மட்டுமே பிரசுரித்து பட்டங்களைத் தூக்கி எறியும் ஜீவாவின் செருக்கு — இன்று கௌரவப் பட்டத்தையே தூக்கி எறிய வைத்து விட்டது.

வேறொன்றுமில்லை, பல்கலைக்கழகங்களே ஒரு ஜீவாவுக்காக உங்கள் பணியை நிறுத்தி விடாதீர்கள். தொடருங்கள் உங்கள் பணியை.

— கௌரி

# பித்தன் பதில்கள்

ராஜேஸ், சுதுமலை.

கே : வாக்குச் சாவடியில் வரக்கூடிய பெரிய தகராறு ஒன்றைச் சொல்லுங்கள் பித்தா?




ப : ஒருவர் வாக்கு போடச் சொல்கிறார். இன்னொருவர் அவரின் பெயரில் கள்ள வாக்குப் போடச் செல்கிறார். இருவரும் வாக்குச்சாவடியில் சந்திக்கும்போது ஏற்படும் தகராறு



விஜயன், பதுளை.

கே : மனைவியரை வேலைக்கு அனுப்பி டாட்டா காட்டி விட்டு ஜாலியாக வீட்டில் இருக்கும் கணவன்மார்கள் பற்றி ஒரு வரி சொல்லு பித்தா?

ப : பசுவின் கழுத்தில் நுகத்தை வைத்து உழுது பயன் பெறும் கொடியவர்கள். ஆண்மை இல்லாத அருகதையற்றவர்களுக்கு ஆடை எதற்கு?

கயல்விழி, மட்டக்குளி.

கே : பெண்கள் எவ்வளவு குண்டாக இருக்க வேண்டும்?



ப : அது அவரவர் வீட்டு வாசல்களைப் பொறுத்தது.

ராஜரட்ணம், கொழும்பு — 6.

கே : வசதிக்குத் தகுந்தாற்போல் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, நன்றி மறக்கும் வஞ்சகர்களை என்னவென்று சொல்லுவது பித்தா?

ப : சுற்றி வளைத்து மூக்கைத் தொடாமல் அரசியல்வாதிகள் என்று சொல்லி விடுங்களேன்.

சுதாகரன், வவுனியா.

கே : கஷ்டகாலத்தில் நண்பர்களை நம்புவதா, உறவினர்களை நம்புவதா?

ப : முதலில் உமது கையை நம்பும்.



கார்த்திக், உடுவில்.

கே : நடிகை ரம்பாவுக்கு மார்க்கெட் டோப்விட்டது ஏன்?

ப : மார்(க்) கட்டை மட்டும் நம்பியிருந்தால் அப் படித்தான்.

தர்மன், மொறட்டுவ.

கே : மறுபிறவி என்பது உண்டா பித்தா?

ப : இந்தப் பிறவியில் பெரிதாக என்னத்தைத் தான் கிழித்துவிட்டோம்.

சுமதி, தெகிவளை.

கே : தேவயானியின் இடத்தையார்பிடிப்பார்?

ப : இடை, தொடை, தொப்புள் எல்லாவற்றுக்கும் போட்டி உண்டு. குடும்பப்பாங்கான நடிகை யார் இருக்கிறார்?

நிரோஷன், தின்னவேலி.

கே : இம்முறை இறந்தவர்களின் வாக்காளர் அட்டைகள் எல்லாம் பயன்படுத்தப்பட உள்ளனவாமே?



ப : செய்தியை செம்மணியில் சொல்லிவிட வேண்டும்.

சமீனா, வாழைச்சேனை.

கே : பெற்றோர் எதிர்க்கிறார்கள் என்காதலியை மணந்து கொள்ள ஒரு வழி சொல்லுங்கள்.

ப : முதலில் அவளை ஒரு வழி பண்ணிவிடுங்கள்.

நிஷார், கிண்ணியா.

கே : வரவர அரசியலில் நாணயமே இல்லாமல் போகிறது.

ப : யார் சொன்னது? நாணயம் இல்லாவிட்டால் அரசியலே இல்லையப்பா.

# மர்மப் பெண் 22

கதை: மாஸ்டர் சிவலிங்கம் சித்திரம்: தீபன்







## பூமியைச்சுற்றி...



பூமியைச் சுற்றிலும் வளிமண்டலம் காணப்படுகின்றது. இதில் 20 வாயுக்கள் உள்ளன. ஒக்சிஜனும் நைதரசனும் அதிக அளவில் அடங்கியுள்ளன. இதுதவிர நீராவியும் துகள்களும் கலந்திருக்கின்றன. இந்தக் காற்று வெளிக்கும் நிறை இருக்கிறது. புவி யீர்ப்பு சக்தியை வைத்தே பொருளின் நிறை நிர்ணயிக் கப்படுகின்றது. வளிமண்டலத்தில் உள்ள வாயுக்கள் மற்றும் துகள்களை பூமியின் புவிஈர்ப்பு விசை கீழ்நோக்கி இழுக்கின்றது. பூமி முழுவதும் வளிமண்டலம் பரவியுள்ளது. இதனால் நிறை அதிகம் ஆனால் பூமியைவிட சந்திரனில் நிலஈர்ப்பு சக்தி குறைவு. பூமியில் 40 கிலோ நிறை கொண்ட மனிதன் சந்திரனில் கிட்டத்தட்ட 8 கிலோ நிறையையே கொண்டிருப்பான். இவ்வாறு பூமியைச் சுற்றி வாயு மண்டலம் இல்லாவிடில் சூரிய வெப்பத்தை பூமியிலுள்ள உயிரினங்களினால் தாங்க முடியாது.

## விடுகதைகளும் விடைகளும்

1. காற்றில் அசைபவன் காற்றிலே இசைவான் அவன் யார்?
2. பாலாற்றிலே கறுப்பு மீன் உலாவுது. அது என்ன?

விடைகள்— 1. மூங்கில் 2. கண்விழி

செல்வி ச. சத்தியப்பிரியா, உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.

*13 ஆயிரம் தீவுகளைக் கொண்டது இந்தோனேசியா.

*கரும்பில் சுக்ரோஸ் வெல்லமே அதிகம் காணப்படுகின்றது.

## சிறுவர் கைவண்ணம்



பு. சுகேந்திரன், தரம் — 10, இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.



ஜீ. ஜீவனா, யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, தரம் — 7B, கரணவாய் தெற்கு, கரவெட்டி.



ஷர்மிலா

'ஒக்டோபஸ்' எனும் பயங்கர கடல் வாழ் பிராணிக்கு எட்டுப்புயங்கள் காணப்படுகின்றன. இந்தப் புயங்களையே நீந்துவதற்குத் துடுப்பாகவும் பயன்படுத்துகின்றது. இரையைத் தேடுவதற்கும் இப்புயங்களிலுள்ள நச்சுத் திரவங்களே உதவுகின்றன. ஆழ்கடலில் செல்லும் பாரிய கப்பல்களை வளைத்துப்பிடித்து தள்ளாட வைத்து விடுகின்றன. சமீபத்திய காலங்களில் இதன் அட்டகாசம் வளைகுடா நாடுகளில் அதிகரித்துக் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒக்டோபஸிற்கு அலர்ஜியை ஏற்படுத்தும் திரவியங்களை நீரில் கலப்பதற்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.



## ஒக்டோபஸின் தொல்லை! இனிமேல் இல்லை!!

## தாய்மண்ணே வணக்கம்!

இன்டெர் நெட்மூலம் எதை வேண்டுமானாலும் விற்கவோ வாங்கவோ முடியும். இன்டெர் நெட்மூலமான மின்—வர்த்தகம் சூடுபிடித்துள்ள இந்த நேரத்தில் இன்டெர் நெட் மூலமான மண்விற்பனை அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. 'களிமண் குவியல்' என்பதன் ஆங்கில வார்த்தையான பைல் ஒப் மட் கொம் (Pile of mud.com) என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தளத்தில் பல வகையான மண்ணை நினைவுப் பரிசாக வழங்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இந்த வெப்தளத்திற்கு பலத்த வரவேற்பு கிடைத்துள்ளதாம்.

இன்டெர் நெட் மூலம் கட்டளைகளைக் கொடுத்தால் தேவையானவர்களின் வீட்டிற்கு பொருளை அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

தாய் மண்ணை நேசித்துக் கொண்டிருக்கும் வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கு சேவை செய்யும் முகமாக பலநாட்டு மண்களை சேகரித்து விற்பனைக்கு வைக்கப் போகிறார்களாம்.

## எல்லாம் ஒரு மணித்தியாலத்தில்!

ஒரு மணித்தியாலத்தில் நீங்கள் 25000 வார்த்தைகளைப் பேசுகிறீர்கள். (அதாவது விடாது பேச அனுமதித்தால்) 500 தடவைகள் கண்களின் இமைகளை மூடித்திறக்கிறீர்கள் உங்கள் இருதயம் 2 தொன் இரத்தத்தைப் பாயச் செய்கிறது. அதே சமயம் உங்கள் உடல் ஒரு லீற்றர் (1L) தண்ணீரைக் கொதிக்க வைக்கத் தேவையான அளவு வெப்பத்தை இழக்கிறது. உங்கள் விரல் நகங்கள் ஓர் அங்குலத்தில் 324 பாகம் அளவிற்கு வளர்கின்றன. ஆமாம் சும்மா இருந்தாலும் நீங்கள் சுறுசுறுப்பானவர்கள் தான்.

த. சாருனி, தரம் — 10, யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா?

*கருங்கல் பாறை நகரம் ........................ அபெர்டீன்.
*கென்யாவின் நாணயத்தின் பெயர் ........................ ஷில்லிங்.
*இந்தியாவின் சூர்யோதய பிரதேசம் ........................ அருணாசலா.
*காற்று நகரம் என்றழைக்கப்படுவது ........................ சிகாகோ.
*பிறந்த குழந்தைக்கு கறுப்பு வெள்ளை வர்ணங்களை மட்டுமே வேறுபிரித்தறிய முடியும்.
*ஒரு காலத்தில் ஆபிரிக்க நாட்டுக் கடத்தல்காரர்கள் புறாக்களைப் பயன்படுத்தியே வைரங்களைக் கடத்தினர்.
*பறவைகளில் நெருப்புக் கோழிக்கு மட்டுமே இமை உண்டு. பறக்க முடியாத பறவைகளுள் இதுவும் ஒன்று.

## விஞ்ஞான விளக்கங்கள்

1. துப்பாக்கியினால் சுடும் போது அதன்பிடி பின்னால் ஒரு விசையை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு. (நியூற்றனின் மூன்றாம் விதி)

2. மாணவர்களுக்கு அடிக்கும் போது பிடரியில் அடித்தல் கூடாது என அதிபர் ஆசிரியர்களுக்குக் கண்டிப்பான கட்டளை கொடுத்தார் இதற்குரிய காரணம் என்ன?

பிடரி மூளையின் பிற்பகுதி ஆகும். இதில் மூளி காணப்படுகிறது. மூளிதான் ஒரு மனிதனின் உடற் சமநிலையைப் பேணுகின்றது. எனவே மூளி பாதிக்கப்பட்டால் மனநோயாளியாவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படலாம்.

3. மண்குடத்தில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கிறது.

ஆவியாதலைப் பொறுத்தே நீரின் குளிர்ச்சி அமைகின்றது. மண்குடத்திலுள்ள நுண்துளைகள் நீரை விரைவில் ஆவியாக்கி விடுகின்றன. அதனால் மண் குடத்தில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கும்.

க. கம்சவாகினி, தரம் — 10B, மு/வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை.

## நல்ல நட்பு மேன்மை தரும்

ஒரு ஊரில் ஒரு தச்சுத் தொழிலாளி இருந்தான். இவன் மிக அழகாக மரவேலைப் பாடுகளுடன் நாற்காலிகளைச் செய்வான். எனவே இவனது பொருட்களுக்கு எப்போதும் நல்ல வரவேற்பு இருக்கும். பக்கத்தில் உள்ள காட்டுக்குச் சென்று நல்ல மரங்களை தெரிவு செய்து அதைவெட்டுவான். ஒரு நாள் இப்படி மரத்தைத் தேடிச் சென்றான். அப்போது வழியில் சிங்கம் ஒன்றைக் கண்டான். அதன் தோற்றத்தைக் கண்டு பயந்தான். ஆனால் அந்த சிங்கமோ நல்ல சிங்கம். மனிதனை நண்பனாக்கிக் கொண்டது. அதன் நண்பர்களான சிறுத்தையும், நரியும் தான் மிகவும் கெட்ட குணம் உடையவர்களாக இருந்தனர். சிங்கம் பசித்தால் மட்டுமே வேட்டையாடும்.

மற்ற நேரங்களில் பிராணிகளைக் கொல்லாது. நரியும், சிறுத்தையும் சிங்கத்தை அவ்வப்போது ஊக்கம் கொடுத்து மிருகங்களை கொல்லச் செய்யும். ஆனால் சிங்கமோ நல்லகுணம் படைத்தது. அப்படிப்பட்ட சிங்கம் தன்முன் நடுங்கிய படி நிற்கும் மனிதனைக் கண்டு பரிதாபப்பட்டது. அதற்குள் தச்சன் ''சிங்கமே நீ ரொம்ப நல்ல குணம் கொண்டவன் என்று என் மனைவியிடம் உன்னைப் பற்றி சொன்னேன். அவள் உனக்கு நிறைய பலகாரம் செய்து கொடுத்திருக்கிறாள். இதை சாப்பிட்டு பாரு. உனக்கு ரொம்ப பிடிக்கும்.'' என்றான் பயத்துடன்.

மகிழ்ந்து போன சிங்கம், ''நண்பா... உன் அன்பான உபசரிப்புக்கு நன்றி. நான் பச்சையாகவே மாமிசத்தை சாப்பிட்டு பழக்கப்பட்டவன். உங்கள் உணவை சாப்பிட்டு பழக்கமில்லை. நீங்கள் மாமிசத்தை நெருப்பில் சுட்டு சாப்பிடுவீர்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். உங்கள் உணவை நான் சாப்பிட்டதே இல்லை. இருந்தாலும் உன் மனைவி ஆசையுடன் கொடுத்திருக்கிறார். எனவே நான் சாப்பிடுகிறேன். இதன் பெயர் என்ன?'' என்றது சிங்கம். தச்சனுக்கு போன உயிர் திரும்பி வந்தது. இவர்களுடைய நட்பு இறுக்கமடைந்தது. சிங்கம் சொன்னது உனக்கு என்ன தேவையோ அதைக்கேள் நான் செய்து தருவேன் என்றது. இதனால் சிறுத்தைக்கும், நரிக்கும் கோபம் ஏற்பட்டது. ஏனென்றால் சிங்கம் தச்சன் கொண்டு வரும் பலகாரங்களைச் சாப்பிட்டதனால் வேட்டையாடவில்லை. புலிக்கும் நரிக்கும் உணவு கிடைக்க வில்லை. ஆத்திரம் கொண்ட நரியும், சிறுத்தையும் ''நண்பா... அவரவர் இனத்துடன் நட்பு கொள்ள வேண்டும். இந்த மனிதர்களுடன் எதற்கு நட்பு, அவர்கள் மோசமானவர்கள். மனித மாமிசம் சாப்பிடுவதற்கு மிகவும் ருசியாக இருக்கும். நாமும் எத்தனை நாட்களுக்குத் தான மிருகங்களையே சாப்பிடுவது. ஒரு மாற்றத்திற்கு உன் நண்பனைக் கொல்லு நண்பா'' என்றன.



''சீ''... நட்புக்கு இலக்கணம் தெரியாத நீங்கள் என் ஜென்மங்கள் என்று சிங்கம் கோபத்துடன் சொல்லியது. இனி என் நண்பனுக்கு தீங்கு செய்யச் சொன்னால், உங்களைக் கொன்று விடுவேன் என்று மிரட்டி விட்டுச் சென்றது. நாட்கள் சென்றன. ஆத்திரம் கொண்ட நரியும், சிறுத்தையும் ஒரு ஐடியா சொன்னது. நண்பா நானும் நீயும் சிங்கத்துடன் சென்று அந்த தச்சனை அறிமுகப்படுத்திய பின்னர் சிங்கத்துக்கு தெரியாமல் அவனைக் கொன்று விடுவோம். நரியும், சிறுத்தையும் அப்படியே சிங்கத்திடம் சென்று உங்கள் நண்பனிடம் எங்களை அறிமுகம் செய்துவையுங்கள் என்றன. நரி, சிறுத்தையின் சூழ்ச்சியை அறியாத சிங்கம் கூட்டிக் கொண்டு சென்றது. அவர்களைக் கண்டதும் தச்சன் மரத்தின் மேல் ஏறியிருந்தான். உடனே சிங்கம் கேட்டது'' நண்பா என்ன இது ஒரு காலமும் இல்லாத புதுப்பழக்கம். நான் உன் அருமையான நண்பன் தானே வந்துள்ளேன். என்னிடம் உனக்கென்ன பயம்?'' என்றது.''என் அருமை நண்பனே. நீ மிகவும் நல்ல மனம் படைத்தவன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உன் நண்பர்களை கண்டு பயப்படாமல் இருக்க முடியுமா? எல்லாருமே உன்னைப் போல நல்லவர்களாக இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம். அதனால் தான் பாது காப்புக்காக மரத்தில் ஏறி இருந்தேன் என்றான் மனிதன். நரியும், சிறுத்தையும் வெட்கத்தால் தலைகுனிந்தன.

சிறுவர்களே! நீங்கள் நல்லவர்களாக இருந்தாலும் உங்கள் நண்பர்கள் கெட்டவர்களாய் இருந்தால் உங்களுக்குக் கெட்ட பெயர் கிடைக்கும். அத்துடன் கொஞ்சங் கொஞ்சமாகப் பேசி உங்கள் நல்ல குணத்தையே மாற்றிவிடுவார்கள் எனவே தான் நல்ல நண்பர்களுடன் நட்பு பாராட்ட வேண்டும்.

ம. ரஜீவ்கரன், தரம் — 8E, வ/த/ம/ம/வி.

# வசதிகள் அதிகரிக்கின்றன பெண்களை அடைவதில்லை



சுகாதார வசதிகள் துரிதப்படுத்தப் படுகின்றன. ஆனால் இந்த வசதிகள் அனைத்தும் மக்களைப் போய் அடைவதில்லை. அதிலும் பிற்போக்கான கிராமப் பெண்களை சென்றடைவது மிகக் குறைவு. அதே வேளை சமூகத்தில் இருக்கும் பலருக்கு அடிப்படை சுகாதார தகவல்கள் தெரியாது.

இதனால் சமூக பிரச்சினைகள் பல எழுந்துள்ளன.

முறையற்ற கருத்தரிப்பு

உலகளாவிய ரீதியில் இரண்டு கோடிக்கும் அதிகமான பெண்கள், பாதுகாப்பற்ற பாலியல் உறவு காரணமாக கருத்தரிக்கின்றனர். இவர்களில் 95% சதவீதமானோர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பலர் திருமணத்திற்கு முன்னரே கருத்தரித்து விடுகின்றனர். இவ்வாறு கர்ப்பமடையும் பல பெண்கள் பாலிய வயதை சேர்ந்தவர்கள்.

பாதுகாப்பான பாலியல் உறவு பற்றி பலபெண்களுக்கு எந்தவித அறிவும் இல்லை. குறிப்பாக பாலிய வயதில் கர்ப்ப மடைந்து விட்டால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் இவர்களுக்குத் தெரியாது. அல் லது அதன் தாக்கத்தை அவர்கள் உணர்வதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அல்லது உணர்ச்சி வேகத்தில் பெண்கள் தவறான முடிவுகளை எடுக்கின்றனர். இவற்றின் பயங்கர விளைவுகளும் இறுதியில் பெண்களையே வந்தடைகின்றன.

கருக் கலைப்புகள்

தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே இலங்கையில் கருக் கலைப்பு அனுமதிக்கப்படுகிறது. ஆனால் வேண்டாத கர்ப்பங்கள் பல கருக்கலைப் பில் முடிந்து விடுகின்றன. எத்தனையோ, கருக் கலைப்புகள் தாயின் உயிரையே எடுத்து விடு கின்றன. ஏனெனில் முறையற்ற கருத்தரிப்புகளுக்குச் செய்யப்படும் கருக்கலைப்புகளும் முறையற்றவையாகவே இருக்கின்றன.

பணவசதி உள்ளவர்கள் சரியான மருத்துவ வசதிகள் இருக்கும் இடங்களுக்குச் செல்கின்றனர். பண வசதி குறைந்தவர்கள் கருவைக் கலைக்கச் செல்லும் இடங்களும் வசதி இல்லாதவையாகவே இருந்து விடுகின்றன. இந்த கருக்கலைப்புகள் மூலம் உயிராபத்து ஏற்படுவதில் ஆச்சரியமில்லை.

கன்னித் தன்மை

முறையற்ற கர்ப்பங்களும் கருக்கலைப்புகளுக்குமிடையே பெண்களின் கன்னித் தன்மைக்கு சமூகத்தில் பெரிய ஒரு அந்தஸ்து இருக்கிறது.

பாலியல் உறவில் ஈடுபடாத ஒரு பெண் தான் கன்னிப் பெண். இதனை எத்தனை பேர் ஏற்றுக் கொள்கின்றனர்? உடலுறவு கொள்ளும் போது இரத்தக் கசிவு ஏற்பட்டால் தான் அவள் கன்னிப் பெண் என்ற எண்ணம் பல ஆண்களிடம் இருக்கிறது. ஏன், சில பெண்கள் கூட அதை நம்புகின்றனர். சிங்கள பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் தமது கன்னித்தன்மையை நிரூபிக்கத் தவ றினால் திருமணமான நாளே அந்த பந்தம் முறியும் அபாயம் கூட உள்ளது. இது ஒரு தவ றான அபிப்பிராயம், விஞ்ஞான பூர்வமற்ற வாதம். நம்பகத் தன்மையில்லாத பரிசோதனை.

முதற் தடவை உடலுறவு கொள்ளும் போது, 20—25 சதவீதம் பெண்களுக்கு இரத்தக் கசிவு ஏற்படுவதில்லை. இது தான் உண்மை. இதனை விட்டு, இரத்தம் கசியாத பெண் கன்னித் தன்மையை இழந்தவள் என்று நினைப் பது முட்டாள் தனம். இலங்கையில் இருக்கும் அதிக எண்ணிக்கையான இளை ஞர்கள் 'கன்னித் தன்மை'யை இழக்காத பெண்க ளையே தமது மனைவியாக அடைய விரும்புகின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களுக்கும் தனியாக ஆண்களோ அல்லது பெண்களோ மட்டும் தான் காரணம் என்று கூற முடி யாது. இச் சிக்கல்களுக்கு தீர்வுகாணப்படுவதை சமுதாயம் பொறுப்பேற்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் சுயமாகவே தன் அறிவின் மூலம் தவறான கருத்துகளை தம்மிடையே இருந்து அகற்றிவிட வேண்டும். எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு முன்பு சிந்திப்பது அவசியம், முக்கிய மாக மிக நுட்பமான விடயங்களில் அதிக அவதானம் தேவை.

யதார்த்த பூர்வமற்ற பல விடயங்களை நாம் பழக்கப்படுத்தி க் கொண்டுள்ளோம். அவற்றை அகற்றிவிடுவதால் எந்த தீமையும் ஏற்படப் போவதில்லை. மாறாக சமுதாயம் சீர்திருந்தும், அது சரியான வழியில் நடத்தப்படும்.

# அறிந்து கொள்ளுங்கள்



நீங்கள் ஒருவரை காதலிப்பீர்கள். ஆனால் அவர் உங்களை காதலிக்கிறாரா என்று தெரியாமல் இருக்கும்.

ஒருவர் உங்களைக் காதலிக்கிறாரா என்பதைக் கண்டுபிடிக்க சில டிப்ஸ்—

* காரணமே இல்லாமல் தினமும் பலமுறை தொலைபேசியில் தொடர்பு கொள்வார்.
* அவர் அம்மாவின் பிறந்த நாள் பரிசை தேர்ந்தெடுக்க உங்களை அழைத்துச் செல்வார்.
* அன்றைய நாள் முழுவதும் செய்ததை ஒன்றும் விடாமல் உங்களிடம் சொல்வார்.
* தான் பாவிக்கும் 'பேர்பியும்' (Perfumed) ஆப்டர் ஷேவ்' (After Shave) ஆகியவை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா என்று கேட்பார்.
* நீங்கள் ஒரே விடயத்தை எத்தனை முறை கூறினாலும் கவனமாகக் குறுக்கிடாமல் கேட்பார்.
* உங்களுக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது என்று கேட்டு தெரிந்து கொள் வார்.
* தன் நண்பருடன் செலவிடும் நேரத்தை விட அதிகமான நேரத்தை உங்களுடன் செலவிடுவார்.
* உங்களால் அவரை இலகுவில் புண்படுத்தவோ உற்சாகப்படுத்தவோ முடியும்.
* உங்களை புகழின் உச்சிக்கே கொண்டு போய் விடுவார்.

மேலே உள்ளவற்றில் ஆறுக்கு மேல் பொருந்தினால் வாழ்த் துக்கள். அவர் உங்களைக் காதலிக்கிறார்.

நான்கு தான் பொருந்தினால் காத்திருக்கவும். ஒன்று அல்லது இரண்டு பொருந்தினால் அவர் மீதுள்ள காதலை மற ந்து விடுங்கள்.

## பெண

—பசீனா

# கீரையை ஒதுக்காதீர்கள்....

உணவு மேசையில் கீரை வகைகளைக் கண்டாலே எம்மில் பலருக்கு அலர்ஜி. கீரையை ஒதுக்கி வைத்து விட்டு சாப்பிடுவது அனேகருக்கு பழக்கமாகி விட்டது. நீங்கள் ஆயிரக்கணக்கில் பணம் செலவிடாமல் பல பயன்களை அடைய கீரைவகைகளினால் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொள்ளுங்கள்.

* முருங்கைக் கீரை:— சர்க்கரை நோயை படிப்படியாகக் குறைத்து விடும். உடல் வலிமையையும் இருதயப் பலத்தையும் அதிகரிக்கும்.
* அகத்திக் கீரை:— வாய், தொண்டை, குடல் முதலானவற்றில் ஏற்படும் புண்களுக்கு சிறந்த நிவாரணி.
* பொன்னாங்கண்ணிக்கீரை:— மேனியின் பளபளப்பை அதிகரித்துக் கொள்ள எல்லோருக்கும் விருப்பம் தானே, இனி ஏன் பொன்னாங்கண்ணியை ஒதுக்கி விடுகிறீர்கள்.
* புதினாக் கீரை :— நரம்புத்தளர்ச்சி மற்றும் பித்தத்தால் அவதிப்படுபவர்கள் புதினாக் கீரையை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# சருமத்திற்கும் தண்ணீர் தேவை!

சருமத்தின் தன்மை ஆளுக்காள் வேறு படுகிறது. சிலருக்கு வரண்ட சருமமும் வேறு சிலருக்கு எண்ணெய்ப் பிசுபிசுப்பான சருமமும் இருக்கின்றது. ஆனால் எந்த வகையான சருமத்தையும் சூரியக் கதிர்கள் தாக்குகின்றன. வெப்பத்தால் தோலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

தண்ணீரின் அளவு குறையும்போது உள்ளுறுப்புகள் மட்டுமே பாதிக்கப்படுவதாக நினைப்பது தவறு. உடலில் நீர் குறையும் போது சருமத்தில் மாற்றம் ஏற்படுகிறது. பொதுவாகவே உடலின் அத்தியாவசிய பகுதிகளுக்கு நீர் கிடைத்த பின்பு மிகுதியாக உள்ளது தான் தோல், தலைமயிர் போன்றவற்றிற்கு கிடைக்கிறது.

குடிப்பதனால் மட்டும் சருமத்திற்கு நீர் கிடைக்க வேண்டும் என்றில்லை. குளிப்பது மற்றும் சருமத்தைக் கழுவுவதன் மூலம் நீர் கிடைக்கிறது. வெப்பம் அதிகமான நாட்களில் தண்ணீர் நிரப்பிய தொட்டி ஒன்றில் அரை மணி நேரம் இருக்க முடியும் என்றால் சருமத்திற்கு மிக நல்லது.

இளநீர், வெள்ளரிக்காய், முதலான குளு குளு உணவுகளை சாப்பிட்டு வந்தால் தோலின் வரட்சியை கட்டுப்படுத்தலாம். வெயில் காரணமாக ஏற்படும் சன் டேன (Sun Tan) யும் இவ் உணவுகள் இல்லாமல் செய்யக் கூடியவை.

வெயில் காலத்தில் வியர்வை வெளியேறுவது அதிகம் வியர்வையும் சருமத்திலிருந்து இயற்கையாக வெளியேறும் எண்ணெயும் சேர்ந்து சருமத்தின் துவாரங்களை அடைத்து வருகின்றன.



எனவே எப்போதும் முகத்தில் வியர்வை வழியாமல் தடுத்துக் கொள்ளுங்கள்.

# சுத்தமாக இருப்போமே



தமது வீட்டை சுத்தமாக வைத்திருக்க அனைவரும் முயற்சி செய்கிறார்கள். பார்ப்பதற்கு அழகாக வீட்டை வைப்பது தான் சுத்தம் என்று பலர் நினைக்கிறார்கள். அழகு வேறு, சுகாதாரம் வேறு. ஆனால் இரண்டும் சேர்ந்தால் வீடு சொர்க்கமாகி விடும்.

சுகாதாரம் அல்லது சுத்தம் என்று கூறும்போது, கழுவிய பாத்திரத்தை மீண்டும், மீண்டும் கழுவுவதல்ல. சில சிறிய செயல்களால் உங்கள் சுகாதாரத்தை மேம்படுத்தலாம்.

*வெளியே போய் வரும் போது செருப்புகளை வெளியே கழற்றி வைத்து விடுவது எங்கள் வீடுகளில் பழக்கமாகி இருக்கிறது. இது சுகாதாரத்துக்கு நல்லது. வீட்டில் குழந்தைகள் இருந்தால் ஒரு போதும் செருப்புடன் எவரையும் உள்ளே அனுமதிக்காதீர்கள். ஏனெனில் செருப்புகளில் நோய்க் கிருமிகள், அசுத்தங்கள் என்பன காவிச் செல்லப்படுகின்றன.

* வீட்டை மிக அழகாகவும் நேர்த்தியாகவும் சிலர் வைத்திருப்பார்கள். ஆனால் சமைத்த உணவுகளை மூடிவைக்க மறந்து விடுவார்கள். உணவு வகைகளை திறந்து வைப்பதன் மூலம் நுண்ணங்கிகள், அசுத்தங்கள் என்பன உணவில் கலந்து விடுகின்றன. அதன் பின்பு ஆயிரக் கணக்கான ரூபாக்களை வைத்தியருக்கு செலவிடுவது தான் மிகுதியாக இருக்கும்.

* பொரித்த உணவுகளை செய்தித்தாளில் ஒற்றி எண்ணெயை எடுத்து விடுவது எம்மில் பலருக்கு இருக்கும் ஒரு பழக்கம். இவ்வாறு செய்வதால் செய்தித் தாளில் இருக்கும் மை உணவில் ஒற்றி விடுகிறது. இந்த மை உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியது. எனவே உணவில் உள்ள எண்ணெயை ஒற்றி எடுக்க வெள்ளைக் கடதாசியையே பயன்படுத்துங்கள்.

இவ்வாறான சிறு சிறு விடயங்களில் சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பது அவசியம்.

# சமாதானக் கதவைத் தட்டுகிறோம் சந்திரிகா அரசு திறக்க மறுக்கிறது

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசுகளும் அணிசேர்ந்து நிற்கின்றன.

இனவாத ஒடுக்கு முறைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் புகழ்போன பல அடக்குமுறை அரசுகளும் இந்தச் சர்வதேசக் கூட்டணியில் இணைந்து நிற்கின்றன.

அதாவது, காவற்துறையினருடன் கொலைக்குற்றவாளிகள் கைகோத்து நிற்பதுபோல. நாம் இங்கு ஸ்ரீ லங்கா அரசை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். இனக்கொலைப் பரிமாணத்தில் மனித உரிமை மீறல்களை நடத்தி, உலக சாதனை ஈட்டியிருக்கும் இந்தப் பயங்கரவாத அரசு, உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேசக் கூட்டணியில் இணைந்து நிற்கிறது. இன்றைய சர்வதேச ஒழுங்கமைப்பில் இது ஓர் ஆபத்தான போக்கைக் குறித்துக்காட்டுகிறது.

உலக ரீதியாக அரச அடக்குமுறைக்கு ஆளாகி நிற்கும் மக்கள் சமூகங்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களுக்கு இப்புதிய போக்கானது ஓர் அச்சுறுத்தலாக அமைகிறது. பயங்கரவாத வன்முறைக்கு எதிராகப் போர்தொடுத்து நிற்கும் மேற்குலக நாடுகளின் ஆவேசத்தையும், அச்சங்களையும், நிர்ப்பந்தங்களையும் எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

உண்மையான பயங்கரவாதிகளை இனங்கண்டு தண்டிக்கும் நோக்குடன் சர்வதேச உலகம் மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். ஆயினும், அதேவேளை தீவிரவாத வெறியில் எழும் குருட்டுத்தனமான பயங்கரவாதத்திற்கும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முன்னேடுக்கப்படும் சுதந்திரப் போராட்டங்களுக்கும் மத்தியிலான வேறுபாட்டினை விளக்கும் வண்ணம் மேற்குலக ஜனநாயக நாடுகள் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு விரிவான, விளக்கமான வரையறையைக் கொடுப்பது அவசியமாகும்.

உள்நாட்டில் இனக் கொலைப் பரிமாணத்திற் கொடுமைகளை இழைத்துவரும் அடக்குமுறை ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதத்தை சர்வதேச உலகம் அலட்சியம் செய்ய முடியாது. இந்தப் பயங்கரவாத அடக்குமுறை அரசுகளை இனங்கண்டு தண்டிக்க உலகம் முன்வரவேண்டும்.

## மக்கள் இயக்கம்

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மக்கள் இயக்கம். விடுதலைப் புலிகள் வேறு, எமது மக்கள் வேறு அல்லர். எமது மக்களும் நாமும் ஒன்றாகப் பிணைந்து, ஒன்றுபட்ட சக்தியாக, ஒரே இலட்சியப் பாதையில் எமது தாயகத்தின் விடிவிற்காகப் போராடி வருகிறோம்.

எமது இயக்கத்தை எமது மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடச் சந்திரிகா அரசு வஞ்சகமான வழிகளைச் கையாண்டது. எம்மைப் பயங்கரவாதிகளாகப் பிரகடனம் செய்து, எமது இயக்கம் மீது தடையை விதித்தது. இதனைத் தொடர்ந்து சந்திரிகாவும் அவரது வெளிவிவகார அமைச்சரான திரு.கதிர்காமரும் எமது இயக்கத்தையும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதப் பூதமாகப் பூச்சாண்டி காட்டிச் சர்வதேச அரங்கில் தீவிர பரப்புரைப் போரைத் தொடுத்தனர். இதன் விளைவாக அமெரிக்காவும் பிரிட்டனும் அதனைத் தொடர்ந்து சமீபத்தில் கனடாவும் எமது விடுதலை அமைப்பை சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலிற் சேர்ந்துள்ளன.

நாம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்பதும் நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ஒரு சுதந்திர இயக்கம் என்பதும் எமக்குப் பின்னால் எமது மக்களின் ஏகோபித்த ஆதரவு அணிதிரண்டு நிற்கிறது என்பதும் எமக்குத் தடைவிதித்த இந்நாடுகளுக்கு நன்கு தெரியும்.

அத்தோடு, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப்படவேண்டும் என்பதும் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு காண வேண்டும் என்பதும் இந்நாடுகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

இந்நிலைப்பாடானது ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது, தமிழீழ மக்களின் அரசியற் பிரதிநிதிகளாகவே விடுதலைப் புலிகளை இந்நாடுகள் கருதுகின்றன. அப்படி என்றால் ஏன் எமது அமைப்பைப் பயங்கரவாத இயக்கமாக இந்நாடுகள் முத்திரை குத்த வேண்டும்?

எனவே, இந்நடவடிக்கையானது எந்த வகையிற் சமாதான ரீதியான ஒரு தீர்வை ஏற்படுத்த ஏதுவாக அமையும் என்பது எமக்கு புரியவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கம் எம்மீது விதித்துள்ள தடையை நீக்கி, எமது இயக்கத்தைத் தமிழீழ மக்களின் உண்மையான, சட்ட ரீதியான அரசியற் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளிற் பங்குபற்றப் போவதில்லையென்பதே எமது நிலைப்பாடு.

இந்த நிலைப்பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கிறோம். நோர்வே அரசிடமும் நாம் இதனை திட்டவட்டமாக கூறியிருக்கிறோம். விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத் தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு.

இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குல நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சிற்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப் போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடை நீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, நடவடிக்கை மேலும் வலுச் சேர்க்கும்.

முழு அளவிலான போர் நெருக்கடியாக வெடித்துள்ள தமிழரின் தேசிய இனப்பிரச்சினை, அடிப்படையில் ஓர் அரசியற் பிரச்சினை என்தை நாம் அறிவோம். இப்பிரச்சினையைச் சமாதான வழிமுறைகள் மூலமாகத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்து போகவில்லை. சிங்கள அரசியல் தலைமைகள் உண்மையாக, உறுதியுடன் மனம் வைத்தால் சமாதானமும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்தியமுண்டு.

## இனவாத சிந்தனை

இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கிடைத்து ஐம்பத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் சிங்கள அரசியல் தலைமைகள் இன்னும் இனவாத சிந்தாந்தச் சகதிக்குள்ளிருந்து வெளிவரவில்லை. இதனால் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை யதார்த்தமாக, புறநிலை நோக்குடன் அணுகித் தீர்க்கும் மனப்பக்குவம் அடையவில்லை.

அடக்கு முறையாலும் ஆயுதப் பலத்தாலும் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற மனநிலையே சிங்கள அரசியல் உலகில் மேலோங்கி நிற்கிறது. இதன் காரணமாக எந்தவொரு சிங்களக் கட்சியிடமும் தமிழரின் பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வுகாணும் அணுகுமுறையோ, கொள்கைத் திட்டமோ இருக்கவில்லை.

இந்தஉண்மை சர்வதேச சமூகத்திற்குத் தெரியாததல்ல. தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழிமூலமான தீர்வை வலியுறுத்தும் உலக நாடுகள், அதே சமயம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்தும் ஸ்ரீலங்காவின் இராஜதந்திர நகர்வுகளுக்கும் போர் முயற்சிகளுக்கும் முண்டுகொடுத்து உதவத் தவறவில்லை.

உலக நாடுகளின் இந்த விசித்திரமான அணுகுமுறையும் தமிழரின் பிரச்சினை தீராது இழுபடுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

சமாதானத்தின் கதவுகளை நாம் தட்டிய வண்ணமே இருக்கிறோம். ஆனாற் சந்திரிக்கா அரசு சமாதானத்தின் கதவுகளைத் திறக்க மறுக்கிறது.

சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் நாம் நோர்வேயின் தூதுவர்களைச் சந்தித்து உரையாடியதையடுத்து சமாதான முயற்சியை முன்னெடுக்கும் நோக்குடன் நான்கு மாதங்களுக்கு ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்தோம். சந்திரிகா அரசு எமது அமைதி முயற்சியைக் கேலி செய்து நிராகரித்ததுடன் ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.

இறுதியாக, எமது போர்நிறுத்தம் முடிவடைந்த ஒரு சில மணி நேரத்திற்குள் ''அக்கினிச் சுவாலை'' என்ற பாரிய படையெடுப்பை மேற்கொண்டது.

இப்படையெடுப்பை முறியடித்து நாம்நடத்திய மூர்க்கமான எதிர்த் தாக்குதல் சிங்கள அரசுக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படமுடியாத பலம் பொருந்திய சக்தியாக இருக்கிறது என்பதை உணர்த்தியது.

ஆட்பலத்தோடு ஆயுதப் பலத்தோடும் நாம் வலுமிக்க போராட்ட சக்தியாக வளர்ச்சிகண்டு நின்றபோதும் சமாதான வழிமுறைக்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் இவ்வாண்டு தரைமார்க்கமாகப் பாரிய படை நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

## நோர்வேயின் முயற்சி

நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கி வந்தோம். இந்தச் சூழ்நிலையில் த்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவரான திரு.எரிக் சொல்ஹெய்ம் புலிகளுக்குப் பக்கச் சார்பானவர் எனப் பொய்க்குற்றம் சாட்டி, சந்திரிக்கா அரசு அவரை ஓரம் கட்டி ஒதுக்கியது. இதனை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நோர்வே அரசின் சமாதான முயற்சிக்குத் தடை ஏற்பட்டது. இதற்குப் பொறுப்பாளி சந்திரிகா அரசுதான்.

மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தில், இலங்கைத் தீவில் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. நாம் நாடாளுமன்றத்திற்கும் புறம்பாக நின்று போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலை அமைப்பு என்பதால் நாம் தேர்தல்களில் அக்கறை காட்டுவதில்லை.

எனினும் எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழீழத்திலும் தென்னிலங்கையிலும் விடுதலைப் புலிகளை மையப் பொருளாக்கிக்கொண்டு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதன்மையான பிரச்சினையாக முனைப்புற்று நிற்கும் தமிழரின் தேசிய இனச்சிக்கலானது சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களில் அரசியல் சக்திகளை ஈர்த்துவருகிறது. சமாதானம் வேண்டிநிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்திற்கு விரோதமான தீவிரவாத சக்திகளுக்கும் மத்தியிலான போட்டியாக இத்தேர்தல் நடக்கிறது.

எனவே, எதிர்காலத்தில் இத்தீவில் சமாதானம் நிலவவேண்டுமா போர் தொடரவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொதுமக்களிடம் விடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதவரை, அவர்களது அரசியல் அபிலாசைகள் நிறைவேறாதவரை இத்தீவில் சமாதானமும் இன ஒத்திசைவும் பொருளாதார மேம்பாடும் ஏற்படப்போவதில்லை என்பதை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்லர். எமது போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அடக்குமுறைக் கொள்கை காரணமாகவே தமிழ், சிங்கள இனங்கள் மத்தியில் முரண்பாடு எழுந்து போராக வெடித்திருக்கிறது.

ஆயுதப் பலத்தினால் எமது மக்களை அடிமைகொள்ள முனையும் அரசுக்கும் அரசுப் படைகளுக்கும் எதிராகவே நாம் போர் புரிந்துவருகிறோம். இந்தப் போரானது தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்துவருகின்றது என்பது எமக்குத் தெரியும். போர் வெறிகொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக் கொள்கையால் பல்லாயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

அது மட்டுமன்றி, இப்போரினால் எழும் பொருளாதாரப் பளுவை சிங்கள பொதுமக்களே சுமக்க வேண்டியுள்ளது என்பதும் எமக்குத் தெரியும். எனவே, இக்கொடிய போருக்கு முடிவுகட்டி, நிரந்தரச் சமாதானத்தை நிலைநாட்டுவதாயின் போர் வெறிக்கொண்ட இனவாத சக்திகளை இனம் கண்டு ஒதுக்கிவிடுவதோடு, தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவும் சிங்கள மக்கள் முன்வரவேண்டும்.

தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாளத்துடன் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாகத் தாம் வாழ்ந்துவந்த தாயக மண்ணில், நிம்மதியாக, சமாதானமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகிறார்கள்.

அவர்களது அரசியற் பொருளாதார வாழ்வை அவர்களே நிர்ணயித்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

தம்மை நிம்மதியாகத் தம்பாட்டில் வாழவிடுமாறு கேட்கிறார்கள். இதுதான் தமிழர்களது அடிப்படையான அரசியல் அபிலாசை.

இது பிரிவினைவாதமோ, பயங்கரவாதமோ அல்ல. தமிழர்களது இக்கோரிக்கை சிங்கள மக்களுக்கு எந்தவகையிலும் ஓர் அச்சுறுத்தலாக அமையவில்லை. சிங்கள மக்களது அரசியற் சுதந்திரங்களையோ அல்லது அவர்களது சமூக, பொருளாதார, கலாசார வாழ்வையோ இக்கோரிக்கையானது எவ்வகையிலும் பாதிக்கவில்லை.

## தம்மைத் தாமே ஆளும் உரிமை

தமது சொந்த நிலத்தில், தம்மைத் தாமே ஆளும் ஆட்சியுரிமையோடு வாழ வழிவகுக்கும் ஓர் அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் வரும்புகிறார்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியற் தீர்வு அமைய வேண்டுமென அவர்கள் வலியுறுத்துவதும் இதைத்தான்.

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்துச் சிங்கள அரசுடன் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கிறது.

நாம் சமத்துவமாக, சுதந்திரமாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தகைமையுடன் அவர்களது உண்மையான போராட்ட சக்தி என்ற அங்கீகாரத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும். தமிழீழ மக்களது ஒட்டுமொத்தமான அபிலாசையும் இதுதான். இதனைச் சிங்கள அரசியற் தலைமைகளும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழவேண்டும். போர் நெருக்கடியும் பொருளாதாரத் தடைகளும் நீங்கிய இயல்பான, அமைதியான சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென நாம் காலம் காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்த நிலைப்பாட்டையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வுகாணப்பட்டால் தமிழர்களும், சிங்களவர்களும் ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில், ஆனந்தமாக, ஒத்திசைவாக, ஒன்றுகூடி வாழமுடியும்.

ஆயினும், அதே வேளை சமாதான மார்க்கமாகப் பிணக்கைத் தீர்ப்பதற்கு சிங்கள தேசம் இணங்க மறுத்தால் தமிழர்களாகிய நாம் பிரிந்துசென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

சிங்களத்தின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக இனவாதம் நீடித்து நிலைக்குமானால், அந்த இனவாதமே தமிழீழத் தனியரசு பிறப்பதற்கான புறநிலையை அமைத்துக்கொடுக்கும்.

தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதியென்றால் எந்தவொரு சக்தியாலும் அதனைத் தடுத்துவிட முடியாது. என்றோ ஒரு நாள் தமிழீழத் தனிநாடு பிறந்து எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ''

# பல்கலைக்கழக மாணவர் விழிப்புணர்வுப் பிரசாரம்

## சமாதானத்துக்கு எதிரான சக்திகளை நிராகரிக்கக் கோரிக்கை

டிசம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் குடாநாட்டில் உள்ள வாக்காளர் அனைவரும் வாக்களிப்பில் பங்குபற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவும்—

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு எதிரான சக்திகளை தேர்தலில் நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும்—

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் குடாநாட்டில் பெரும் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்த வாரம் யாழ். நகரில் ஒன்று திரண்ட மாணவர்கள் அங்கிருந்து பின்னர் அணி அணியாகப் பிரிந்து குடாநாட்டின் மூலை முடுக்கு எங்கும் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

கடந்த காலத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் 'பொங்கு தமிழ்' என்ற எழுச்சி நிகழ்வை முன்னெடுத்து விடுதலை உணர்வை பிரவகிக்கச் செய்த பல்கலைக்கழக மாணவர்கள் இந்த முறை தேர்தலில் முக்கியத்துவம் கருதி இந்த விழிப்புணர்வு பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

இந்தமுறை குடாநாட்டில் சுமார் 6 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றனர் என்று தேர்தல் திணைக்களம் கூறியிருந்தாலும் சுமார் 4 லட்சம் பேர் கூட வாக்களிப்பில் பங்குபற்றுவார்களா என்பது ஐயமே.

வாக்காளர் அட்டைகள் கடந்த வாரம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன.

நீண்ட காலத்துக்கு முன்னரே வெளிநாடுகளுக்குச் சென்று விட்ட பல குடும்பங்களின் வாக்காளர் அட்டைகளும் கூட பரவலாக விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

குடும்பமாக வெளிநாடுகளுக்குச் சென்று விட்டவர்களின் வாக்காளர் அட்டைகள் அவர்களது வீடுகளில் தற்போது வசிப்போருக்கு கிடைத்திருக்கின்றன. இதனால் வாக்களிப்பு மோசடிகள் இடம்பெற சாத்தியம் இருப்பதாகக் கருதப்படுகிறது. வாக்களிப்பின் போது ஆளடையாளத்தை நிரூபிக்கும் வசதிகள் செய்யப்படா விட்டால் இத்தகைய மோசடிகளைத் தடுக்க முடியாது போகும்.

இதே வேளை—

குருநகர், கொக்குவில் பகுதிகளில் இனந்தெரியாத ஆயுத பாணிகளால் வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த பொதுத் தேர்தல் காலத்திலும் இது போன்று வாக்காளர் அட்டைகள் பல இடங்களில் பறிக்கப்பட்டன. அச்சமயம் அதற்கு விடுதலைப் புலிகள் மீதே குற்றஞ்சுமத்தப்பட்டது. ஆனால் இந்த முறை வாக்களிப்பை புலிகள் குழப்பப்போவதில்லை என்பது தெளிவாகிவிட்ட நிலையில் தேர்தலில் போட்டியிடும் சில கட்சிகளின் ஆயுதக் குழுக்களே இந்தச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றன என்று சந்தேகிக்கப்படுகிறது.

தபால் மூல வாக்களிப்புக்காக கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்ட வாக்குச் சீட்டுப் பொதிகளில் ஒன்று பலாலி விமானத் தளத்தில் தவறுதலாகக் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. வாக்குச் சீட்டுகள் அடங்கிய பொதியில் அது பற்றிய விவரம் தெளிவாக எழுதப்பட்டிருக்காததால் இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.




குடாநாட்டில் இறுதிக் கட்ட பிரசாரம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. அத்தோடு தேர்தல் வன்முறைகளும் பெரிய அளவில் தலை விரித்து விடக்கூடும் என்ற அச்சமும் அதிகரிக்கிறது.

குறிப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் மோதல் வெடிக்கக்கூடிய முறுகல் நிலை நீடிக்கிறது. வாக்களிப்பு நேரம் வரை பொறுத்தாலும் வாக்களிப்பு முடிந்த கையோடு கூட வன்செயல்கள் வெடிக்கும் ஆபத்து இருக்கிறது.

வன்முறைச் சம்பவங்களுக்கு ஒரு தரப்பு மீது மறு தரப்பு மாறி மாறிக் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசினாலும் தேர்தல் பிரசார விதிமுறைகளை இந்த இரண்டு கட்சிக ளுமே அப்பட்டமாக மீறிவருகின்றன என்பது தான் உண்மை.

இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் ஓடித்திரிதல், ஆயுதங்களுடன் நடமாடுதல் என்பன தேர்தல் காலத்தில் மட்டுமல்ல சாதாரண சட்டங்களின் கீழேயே தடை செய்யப்பட்ட குற்றங்கள் தான். இவற்றை விட தேர்தல் விதிகளின் படி அசையும் வாகனங்களில் பிரசாரம் செய்வது கூடத் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் களத்தில் உள்ள எல்லாக் கட்சிகளுமே இதுபோன்ற தேர்தல் பொது விதிகளை அப்பட்டமாக மீறியே செயற்படுகின்றன.

ஈ.பி.டி.பி கட்சியினர் தங்கள் அதிகாரத்தில் உள்ள பிரதேச சபைகளின் மூலம் நடத்தப்படும் சிறிய நிகழ்ச்சிகளைக் கூட பெரும் ஆரவார மான தேர்தல் பிரசாரக் கூட்டங்களாக மாற்றிவிடுகின்றனர்.

கடந்த வாரம் நல்லூர் பகுதியில் நல்லூர் பிரதேச சபையின் கலாசாரப் பிரிவினரால் சிறுவர்களுக்குப் பரிசு வழங்கும் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்காக அயல் பிரதேசம் எங்கும் பல ஒலிபெருக்கிகளைப் பொருத்தி இடைவிடாது சொற்பொழிவுகளை நிகழ்த்தி ஊர் மக்களைப் பெரிதும் அசௌகரியத்துக்குள்ளாகினர் அதன் ஏற்பாட்டாளர்கள்.

ஈ.பி.டி.பி பிரதேச சபையின் நிகழ்ச்சி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்ற அதே நேரம் கல்வியங்காடு பொதுச்சந்தைப் பகுதியில் தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற சொற்பொழிவுகளைக் குழப்பும் நோக்குடனேயே இந்த ஒலிபெருக்கிப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது என்பது பின்னர்தான் பலருக்கும் புரிய வந்தது. இதுபோன்ற ஏட்டிக்குப் போட்டியான ஒலிபெருக்கிப் பிரசாரம் குடாநாட்டின் மூலை முடுக்கு எங்கும் நடை பெறுவதைக் காணமுடிகிறது.

கட்சிகளின் இத்தகைய எல்லை மீறிய பிரசாரப் போக்கு பொது மக்கள் மத்தியில் ஆதரவைத் திரட்டுவதற்கு மாறாக விசனத்தையே ஏற்படுத்தி வருகிறது.

— ஆதர்ஷா தாஸ்

# கென்டே — கானா நாட்டின் ராஜவஸ்திரம்

தாதுப் பொருள் வளம் மிகுந்த நாடு கானா. இந்நாட்டை பல நூற்றாண்டுகளாக மேற்கு ஆபிரிக்க அரசர்களே ஆட்சி புரிந்து வந்தார்கள். ஐரோப்பிய ஆய்வுப் பயணிகள் இந்த நாட்டை தங்கக் கடற்கரை (Gold coast) என்று அழைத்தனர்.

இங்கே ஏராளமான தங்கம் தோண்டி எடுக்கப்பட்டது. இதன் காரணமாக இங்கே ஆட்சி செய்து வந்த அஷாந்தி அரசர்களும் அவர்களுடைய குடும்பங்களும் செல்வத்தில் கொழித்தனர்.



கனமான தங்க ஆபரணங்களையும் விசேஷடமாக நெய்யப்பட்ட ஆடைகளையும் அணிந்து தமது செல்வ வலி மையை தங்கள் குடிமக்களுக்கு இவர்கள் காட்டி வந்தனர். இந்த அரசர்கள் மட்டுமே உடுத்திய தன்னிகரில்லாத ஆடையே "கென்டே" என அழைக்கப்படலாயிற்று.

ஒரு கூடையின் பின்னலைப் போன்று இந்த உடை இருந்ததால் "கென்டே" என அழைக்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்து. சணல், பருத்தி, பட்டு ஆகியவற்றிலிருந்து நூற்ற நூலிழைகளைக் கொண்டு இந்த ஆடை நெய்யப்படுகிறது. வேர்கள், தாவர இலைகள், போன்றவற்றிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட முக்கியமான வர்ணங்கள் இந்த 'கென்டே' ஆடையின் டிசைன்களையும் வரைவுகளையும் படைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

திறன் மிக்கத் தொழிலாளர்கள் இப்பழங்கால கைத்தொழிலை ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக செய்து வந்திருக்கிறார்கள். ஆபிரிக்காவில் வாழ்ந்த நாடோடி மக்கள் மத்தியிலேயே இத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்பட்டனர்.

இத்தொழிலாளர்கள் நாடோடிகளாக இருந்தமையால் இடத்துக்கிடம் நகர வேண்டிய தேவை இருந்தது. இதனால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு எளிதில் தூக்கிச் செல்ல முடிகிற சிறிய தறிகளை உருவாக்கினர்.

இந்தப்பட்டைத் தறிகளில் 7.5 — லிருந்து 11.5 சென்ரிமீற்றர் வரையிலான அகலமுள்ள பட்டைத் துணிகளை நெசவு செய்தார்கள். பின்னர் இக் குறுகிய துணிகளை ஒன்றாக இணைத்து பெரிய துணி யாக மாற்றி அதை ஓர் ஆடையாக உருமாற்றினார்கள்.

சுமை தூக்கும் விலங்குகளின் மேல் இத்தறிகளையும் ஆடைகளையும் ஏற்றி பாலைவனங்களையும், ஆறுகளையும், மலைகளையும் கடந்து சென்றார்கள். பண்டைய வாணிபத்திற்காக எடுத்துச் செல் லப்பட்ட இத்தறி அக்காலத்தில் மிகவும் முக்கியத்துவமுடையதொன்றாக கருதப்பட்டது.

அரசரின் "கென்டே" உடையை நேர்த்தியாக நெசவு செய்ய வேண்டியிருந்ததால் அதைச் சிலரே செய்தனர். உயர்தரமான ஆடையை உருவாக்க திறமையுள்ள அரச நெசவாளர் குழுக்கள் அமர்த்தப்பட்டன. நெசவு நுட்பங்கள் பரம ரகசியமாக வைத்துப் பாதுகாக்கப்பட்டன.

பிரத்தியேகமாக அரசருக்கும் அவருடைய அவையினருக்கும் என நெசவு செய்யப்பட்ட டிசைன்களை மற்ற நெசவாளர்கள் நெசவு செய்யத் தடை செய்யப்பட்டிருந்தது. ஒப்பற்ற டிசைன் மாதிரிகளில் செய்யப்பட்டிருந்த இந்த உடைகளை அரசர்கள் நூற்றுக் கணக்கில் சேகரித்து வைத்திருந்தனர். பொது மக்களுக்கு முன்னால் அவர்கள் ஒருமுறை உடுத்திய அதே உடையை மறுபடியும் அணியமாட்டார்கள் என்பது பாரம்பரியம்.

— ரமேஷ்காந்ஜெயசீலன்






# பாராளுமன்றப் பொதுத்தேர்தல் — 2001




வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினரும், ஓய்வு பெற்ற நீர்ப்பாசன இலாகாவிலும் காணி அபிவிருத்தி இலாகாவிலும் தொழில்நுட்பவியலாளராகவும், தற்போது சென்றல் பினான்ஸ் கம்பெனியின் பிரதம ஆய்வாளர்

## செல்லப்பா பத்மநாதன்



தமிழ் தேசியத்தின் குரல் ஒலித்திட, தமிழினம் தலைநகரிலும் தலைநிமிர்ந்து வாழ்ந்திட, எம் உரிமைப் போராட்டம் நீதியானது என்பதை அகில உலகும் அறிந்திட எங்களின் ஆதரவை வழங்குவோம்.

அறிவு, ஆற்றல், ஆளுமை கொண்ட

திரு. செல்லப்பா பத்மநாதன் அவர்களை ஆதரிப்போம்!

# ஆயிரம், ஆயிரம் வருடங்களாக வாழ்ந்த தமிழரை குண்டுபோட்டுக் கொல்லலாமா?

## விக்கிரமபாகு கருணாரட்ண கேட்கிறார்

கொழும்பு, டிச.01

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களை குண்டு போட்டுக் கொல்லச் சொல்கிறார்கள். அப்படிச் செய்யமுடியுமா?

தற்பொழுது அது போதாதென்று தமிழ் மக்களைக் கொல்வதற்காக அந்நிய படைகளை வரவழைக்க சதி செய்கிறார்கள்.

புதிய இடதுசாரி முன்னணியின் கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு, இராஜகிரியவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

சந்திரிக்காவின் அரசில் மக்கள் தொடர்புடைய அரசியல் தலைவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. அவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். ஜி.எல்.பீரிஸ் போன்ற புத்தகப் பூச்சிகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. முக்கிய பல அமைச்சுகள் ஜி.எல்.பீரிஸுக்கு வழங்கப்பட்டன. இவ்வளவுக்கும் ஜி.எல்.பீரிஸ் ஒரு தொழிற்சங்க தலைவரோ அல்லது மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் எந்த ஓர் அமைப்பின் தலைவரோ இல்லை.

இதே நிலையில்தான் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் இருந்தார். ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்பார்கள்.

இத்தகையோரின் செயற்பாடுகள் இந்த நாட்டு மக்களுக்கு குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு, எந்தவித நன்மையும் வழங்கவில்லை.

1994 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த அரச அதிகாரிகளையே சந்திரிக்கா அனுப்பி வைத்தார். அரசியல் தீர்வுகூட அப்பொழுது முன் வைக்கப்படவில்லை.

இதனாலேயே போர் இன்றுவரை நீடிக்கிறது.

தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதற்கு எதிராக பல்வேறு வழிகளில் சிஹல உறுமய போன்ற அமைப்புகள் பிரசாரம் செய்து வருகின்றன. இவர்கள் மூளை கெட்டவர்கள் என்றே கூறலாம். இந்த நாட்டின் தென்பகுதிக் காணிகள் யாவும் பல்தேசியக் கம்பனிகளுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளன. இன்று தென்னிலங்கையில் அமெரிக்கர், பிரித்தானியர், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தமது நாடு என்று உரிமை கொண்டாடப் போகிறார்கள்.

இதைப் பற்றி இனவாதிகள் வாய்திறக்கவில்லை. ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களை குண்டு போட்டுக் கொல்லச் சொல்கிறார்கள். தற்போது அது போதாதென்று அன்னியப் படைகளை தமிழ் மக்களைக் கொல்வதற்காக வரவழைப்பதற்கு சதி செய்கிறார்கள்.

பல்தேசியக் கம்பனிகளின் உபதேசத்தைக் கேட்டு இந்த நாட்டின் பொருளாதாரத்தை வேரோடு சாய்த்துள்ளனர். உலகத்தில் எந்தப் பகுதியில் இருக்கும் நாடென்றாலும் பல்தேசியக் கம்பனிகளின் உபதேசங்களைக் கேட்டு வளர்ந்ததாக வரலாறில்லை. நாசமாகியதே உண்மை ஆகும். பல்தேசியக் கம்பனிகள் வளம்மிகு ஆபிரிக்கக் கண்டத்தை கொள்ளையடித்தன. இன்று ஆசியக் கண்டத்தை யுத்த பூமியாக்கி உள்ளன.

25 வருடங்களுக்கு முன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள் என்றோம். எங்களை பைத்தியக்காரர்கள் என்றனர். இன்று யுத்தத்தின் விளைவை எல்லோரும் அனுபவிக்கின்றோம்.

இப்படி அவர் கூறினார்.

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் வ.திருநாவுக்கரசு உரையாற்றுகையில், தோழர் வாசுதேவ நாணயக்கார இப்போது கொழும்பு மாவட்டத்தில் காவடி எடுத்துள்ளார். 1994 இல் அறுபத்தி நான்காயிரம் விருப்பு வாக்குகளை இரத்தினபுரி மாவட்டத்தில் பெற்ற இவர் 2000 ஆண்டு பொதுத் தேர்தலில் படு தோல்வியடைந்தார்.

சந்திரிக்கா அரசில் சகல சலுகைக ளையும் பெற்று அரச பாதுகாப்புடன் உலாவி வந்த இவரின் சொந்தக் கட்சியான நவசமசமாஜக் கட்சிக்கு துரோகம் இழைத்தார். பின்பு நாடாளுமன்ற ஆசனத்திற்காக ஜே.வி.பியை கட்டித் தழுவித் திரிந்து விட்டு, பின்னர் ரணில் விக்கிரமசிங்காவுடன் ஒரே மேடையில் தோன்றினார். இத்தகைய அரசிய பபூன்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்— என்றார்.

## வடக்கில் குண்டு மழை பொழிந்தாலும் தட்டிக் கேட்பாரில்லை- பிரதமர்

இன்று வடக்கில் குண்டு மழை பொழிந்தாலும் எந்தவொரு நாடும் கேட்கப் போவதில்லை என்கிறார் பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு சொன்னார்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே உலக நாடுகள் செயற்படுகின்றன. இலங் கைப் பிரச்சினைகூட உலக நாடுகளின் பார்வையில் பயங்கரவாதப் பிரச்சினை யாக தோற்றமளிக்கிறது. புலிகளை தோற்கடிக்க இந்த முன்னேற்றத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலதிகமாக எந்தவொரு அதிகாரமும் தமிழர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

ஈ.பி.டி.பி. மாநில சுயாட்சி கேட்கிறதாம். அதனை நாம் எந்த நிலையிலும் பெற்றுதர தயாரில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படமாட்டா. அவ்விடயம் தொடர்பாக சர்ச்சை எழுந்தால் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவர்கள் அளிக் கும் தீர்ப்புப்படி நடவடிக்கை எடுப்போம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.


# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 05-12-2001

## தேர்தல் மாவட்ட இல.14 — திருகோணமலை

## தமிழர் தாயகத்தின் தலைநகராம் திருகோணமலை மண்ணைக் காக்கப் புறப்பட்ட தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி



2

க. துரைரெட்ணசிங்கம்



3

ந. ஸ்ரீகாந்தா



4

திருமதி கமலாதேவி தில்லைநாதன்



1

முதன்மை வேட்பாளர்

இரா. சம்பந்தன்



5

பொ. இராமநாதன்



6

டாக்டர். இ. முரளி மனோகர்



7

ச. கௌரிமுகுந்தன்

தமிழர் விடுதலைக் கூட்டணி



# நம் நாட்டின் அனைத்து வாக்காளர்களுக்கும்

செப்டம்பர் 19ல் சமாதானத்திற்கு ஆதரவு நல்கி
நம்மில் பல இலட்சக் கணக்கானோர் ஒன்று திரண்டு
ஒருவரோடொருவர் கைகோர்த்து
அமைதி நாடும் நம் வேட்கையை வெளியிட்டோம்.

இப்போது மீண்டும் ஒரு முறை, சக்தி நம் கரங்களை வந்தடைந்துள்ளது. சமாதானத்தை முன்னிறுத்திச் செயற்படும் அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் பூரண சுதந்திரம் நமக்குண்டு.

அமைதி ஒன்றே நம்மையும் நம் நாட்டையும் எதிர்காலத்தில் வளம் பெறச் செய்யும். நம் எதிர்காலம் இப்போது நம் கைகளிலேயே உள்ளது. டிசம்பர் 5ல் நீங்கள் வாக்களிப்பதை நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் சமாதானத்திற்கென வாக்களியுங்கள். ஏனெனில் உங்கள் வாழ்வும், அதனிலும் மேலாக உங்கள் குழந்தைகளின் வாழ்வும் எதிர்காலத்தில் நலம் பெற நாடு காணும் அமைதியே நல்வழி.

ශ්‍රී ලංකා First

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

இணையத் தளம் : www.srilankafirst.com

# அடிப்படைப் பிரச்சினை என்ன என்பதுதான் இன்று பிரச்சினை!

"உரிமைக்காகப் போராடும் ஓர் இனம், போராட்டம் ஆரம்பித்து பல ஆண்டுகள் கழிந்த நிலையில் — எந்த சந்தேகம் வரக்கூடாதோ அந்தச் சந்தேகத்தை தமிழினத்துக்கு எழுப்பி, எங்களைக் குழப்பும் கைங்கரியம் தொடங்கியிருக்கு" தேரடியில் அரட்டையை ஆரம்பித்தார் விநாசியர்.

"என்ன விநாசியண்ணை, பெரியசிக்கலுக்கு அடிபோடுகிறியள் போல" சிரிப்புடன் கேட்டான் லோகன்.

"இத்தனைகாலம் இல்லாமல் இந்தத் தேர்தலில், அடிப்படைப் பிரச்சினையா? அன்றாடப் பிரச்சினையா? என்று சந்தேகம் எழுப்பப்படுகுது. அதாவது போராட்டம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டுதோ, அந்த நோக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, மக்களை தொடர்ந்து அடிமைகளாக ஆக்கும் ஆசையில் அதிகார வர்க்கம் கடைப்பிடிக்கும் தந்திரம் தான் இது. ஆனால் இதனை நம்பி தலையாட்டவும் எங்களுக்குள்ளை ஆள்கள் இருக்கு என்பதுதான் கவலையளிக்குது" விசனித்தார் விநாசியர்.

"அதிலையும் கொஞ்சம் உண்மை இருக்குத்தானே?" மெதுவாகச் சொன்னார் மாஸ்டர்.

"படிச்சவரே இப்படி கூழ் முட்டைத்தனமாக கதைத்தால் பாமரச் சனத்தை எப்படி குறை சொல்லுறது?" சே காபத்துடன் கேட்டான் டானியல்.

"சரி, விஷயத்துக்கு வாங்கோ" என்றான் லோகன்.

"ஓம், இப்ப தமிழரின் அடிப்படைப்பிரச்சினையான இனப்பிரச்சினையைவிட, அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளான உணவு, போக்குவரத்து, வேலை வாய்ப்பு போன்றவற்றைத் தீர்ப்பதே தற்போது முக்கியம் என்று கூறி, அதற்குத் தமக்கு வாக்களிக்கும்படி அதிகாரத் தமிழ்க் கட்சி பிரசாரம் செய்து வருகுதெல்லோ? இது எவ்வளவு தூரம் சரியென்று நினைக்கிறியள்?" கேட்டார் விநாசியர்.

"போராட்டம் நீண்டு கொண்டே போகுது. நாளைக்கு போராடுவதற்கு தமிழர் இருக்க வேண்மென்றால், அன்றாடப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் தானே நாங்கள் உயிர் வாழ முடியும். அதுக்குப் பிறகுதானே போராட முடியும். அதுதான் அன்றாடப் பிரச்சினைகள் முக்கியம் என்று சொன்னான்" தனது வாதத்தை முன்வைத்தார் மாஸ்டர்.

"மாஸ்டர், நீங்கள் சொல்லும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும், அதிகாரத்தில் இருப்பவை சொல்லும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கு. அதனால் தான் அவை சொல்லுற அன்றாடப் பிரச்சினைகளை விட தமிழரின் அடிப்படைப் பிரச்சினை முக்கியம் என்று சொல்லுறம்" என்றான் டானியல்.

"அப்பிடி ஒரு குழப்பம் இருக்கோ?" தெளிவானார் மாஸ்டர்.

"இருக்கு மாஸ்டர் அதிகார தரப்பு தாங்கள் தீர்த்து வைப்பதாகக் கூறும்— பிரச்சினைகள் என்ன என்று தெரியுமோ?" கேள்வி எழுப்பினார் விநாசியர்.

ஓம் வேலை வாங்கிக் கொடுக்கினம், நிவாரணம் ஒழுங்காகக் கிடைக்க உதவுகினம், கோயில், சனசமூக நிலையங்கள் கட்ட உதவுகினம், பிரதேச சபைகள் மூலம் ரோட்டுகள் திருத்துகினம். இலவசமாக மக்களுக்கு சாமானுகள் கொடுக்கினம். இப்படி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கினம் என்றுதான் சொல்லுகினம். இதைவிட கடலிலை மீன் பிடிக்கிறதுக்கு விதிகப்பட்ட தடையில் பிரச்சினை வந்தால் ஆமியோட கதைத்து தீர்த்து



## தேரடி அரட்டை

மெல்லே வைக்கினம். இதெல்லாம் நான் சொல்லேல்லை தம்பி. தாங்கள் செய்யிறதாக அவை சொல்லுகினம்" தன்னில் கோபப்படாமல் இருக்கும்படி கதை சொன்னார் மாஸ்டர்.

இதைக் கேட்டு சிரித்தபடியே பேசத் தொடங்கினான் டானியல்.

"வேலை வாங்கிக் கொடுக்கினம் என்று சொன்னியள். என்ன வேலை கொடுக்கினம். நீதி நியாயப்படி நேர்முகப் பரீட்சை இல்லை. அரசு வேலையில் சிங்களவர் மட்டும் தெரிவு செய்யப்படுற வேலைகள் பல இருக்கு. அதுக்கு தமிழ் ஆள்கள் சேர ஏலாது. இப்ப இவை எடுத்துக் கொடுக்கிற வேலைகள் எப்ப வேண்டுமானாலும் பறிபோற நிலைமைதானே இருக்கு.

"நாளைக்கு ஆட்சி மாறினால், இவையின்றை நியமனங்களை செல்லாது என்று அறிவிக்கும்படி எவராவது நீதி மன்றத்தை அணுகினால், இவை வாங்கிக் கொடுத்த வேலைகள் விதிகளுக்குப் புறம்பாக நியமிக்கப்பட்டவை என்று கூறி அவ்வளவு பேரையும் வீட்டுக்கு அனுப்புற நிலைமை இருக்காம். இதை விட வாய்மூல உத்தரவால் அமைச்சு ரீதியாக இடப்பட்ட நியமனங்கள் வேற இருக்கு. எல்லாவற்றையும் விட தகுதியற்றவர்கள் பின் கதவால் வேலை வாங்கிக் கொண்டு போக, தகுதியுடையவர்கள் ரோட்டிலை நிற்கினம்.

"ஆனால் இந்த நிலைமை மாறி, தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் இலங்கையில் எங்கு வேண்டுமானலும், ஏன் முப்படைகளில் உயர் பதவிகளில் கூட இருக்க வேண்டுமானால் அடிப்படைப் பிரச்சினையான இனப்பிரச்சினை முடிந்தால் போதும். வேலை வாய்ப்பு என்கிற அன்றாடப் பிரச்சினை அதற்குப் பிறகு நீங்க முன்புபோல தமிழர் உயர் பதவிகளை அலங்கரிக்க முடியும்" பேசி முடித்தான் டானியல்.

"உது மாதிரித்தான் நிவாரணக் கதையும் இடப்பெயர்வாலும் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகளாலும் அகதிகளாகியும், தொழிலற்றும் போன குடும்பங்களுக்கு பிச்சை போடுற மாதிரி நிவாரணம் வாங்கிக் கொடுக்கினம். அடிப்படைப் பிரச்சினையான இனப்பிரச்சினை தீர்ந்தால், தமிழர்கள் தத்தமது சொந்த இடங்களில் குடியேறுவார்கள். இன்று தரிசாகிக் கிடக்கும் அவர்களது விளை நிலங்களில் விளைபவை மறுநாளே கொழும்பில் காசாகும். அதுக்குப் பிறகு இவைக்கு நாங்கள் சோறு போடுவமே தவிர, இவையின்ரை நிவாரணம் பிறகு எங்களுக்கு எதுக்கு?" தனது பங்குக்கு கேட்டான் லோகன்.

"மண் மீட்கப்பட்டால் அன்றாடப் பிரச்சினைகளே இருக்காது என்பதை மறைத்து விட்டு, அன்றாடப் பிரச்சினைகளை தாங்கள் தான் தீர்க்க முடியும் என்று ஆசைகாட்டி வாக்குக் கேட்கினம். நாங்கள் தான் எது சரி, எவ்வாறு என்று யோசிச்சு வாக்களிக்க வேணும்" சொன்னார் விநாசியர்.

"மொத்தத்திலை இலங்கையிலை தமிழன் எங்கு இருந்தாலும் உயிருக்கு உத்தரவாதமில்லை. தமிழச்சியின் கற்புக்கு பாதுகாப்பில்லை. இதுக்கு வழிவகுத்தது அவசர காலச்சட்டம். தமிழன் உயிர் வாழ்வதையே அன்றாடப் பிரச்சினையாக்கின அவசரகாலச்சட்டத்துக்கு ஆதரவாக நாடாளு மன்றத்தில் கை தூக்கினவையிற்றை இதை விட வேறு என்னத்தை எதிர் பார்க்கிறது" சலித்துக் கொண்டான் டானியல்.

"நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்குது. ஆனால் ஏமாந்து போய் வாங்கித் தின்ன தயாராக இருக்கிறவை இருக்கிறவரையிலும், மண் மீட்பை விட, மக்கள் பிரச்சினை தான் பெரிசென்று விடுகிற கதைகள் எடுபடத்தான் செய்யும்" கவலையுடன் கூறியபடி எழுந்தார் மாஸ்டர்.

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்




அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்

**உரிமையை இழந்தோம்!**
**உடைமையை இழந்தோம்!**
**உணர்வை இழக்கலாமா?**



மாமனிதர் குமார்

## யாழ் மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இத்தேர்தலில் தமிழ் இனத்தின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டவும் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காகவும் போராடும் இளைஞர்களின் போராட்டத்தை வலுப்படுத்தவும் கூட்டுச் சேர்ந்து உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறது.



திரு. அ.விநாயகமூர்த்தி
இல.1



திரு. சி.வி.கே.சிவஞானம்
இல. 5



திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம்
இல. 8

மாமனிதர் குமார் பொன்னம்பலம் தன் உயிரை துச்சமென மதித்து தனது கொள்கையில் பின்வாங்கி அடிபணியாது தனிமனிதனாக நின்று பகிரங்கமாக தமிழ் பேசும் இனத்துக்காகவும் போராடும் இளைஞர்களுக்காகவும் குரல் கொடுத்து விடுதலைப் புலிகளை தமிழ் பேசும் இனத்தின் ஏகப்பிரதிநிதியாக ஏற்று தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினையை விடுதலைப் புலிகளுடன் பேசித்தீர்க்க வேண்டுமென்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரசாரம் செய்து வந்தார். இதனால் அவரின் உயிர் பறிக்கப்பட்டது. அவர் தனது துணிவு திறமை நேர்மையான அரசியல் தியாகம் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்காட்ட அவருக்கு உதவியாக இருந்தது முதலாவதாக அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் மைந்தன் இரண்டாவது அ.இ. தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஆகியோரே.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மைந்தன் **(கஜேந்திரகுமார்) ஜீ. ஜீ. பொன்னம்பலம்** இத்தேர்தலில் எங்கள் வேண்டு கோளுக்கு இணங்க உங்கள் முன் நிற்கிறார். மாமனிதர் குமாரின் பணியை தொடர்ந்து செய்யக்கூடிய துணிவு, திறமை, நேர்மை, இடம், பொருள், ஏவல் ஆகியவை கடவுளால் அவரின் மைந்தனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வெற்றிடத்தை நிரப்ப அவரின் மைந்தனை ஆதரிப்போமாக.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக **திரு. அ. விநாயகமூர்த்தி** அவர்கள் அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடன் பக்க பலமாக நின்று கைதிகள் தொடர்பாக முக்கியமாக பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட கைதிகள் தொடர்பாக சட்டரீதியான முறையில் பங்காற்றியதையும் நீங்கள் அறிவீர்கள். மேலும் சென்ற வருடம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டபின் பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் அவர் ஆற்றிய உரைகளை பத்திரிகைகள் மூலமாக அறிந்திருப்பீர்கள். இறுதியாக பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டத்தையே எதிர்த்து வாக்களிப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை பத்திரிகைகள் மூலமாக அறிந்திருப்பீர்கள்.

முன்னாள் மாநகர சபை ஆணையாளர் **திரு. சி.வி.கே. சிவஞானம்** அவர்கள் சில வருடங்களாக தமிழர் பிரச்சினையில் ஈடுபட்டு செயற்பட்டு வந்துள்ளார்.

**ஆகவே உதய சூரியனுக்கு நேரே புள்ளடியிட்டு 1, 5, 8ம் இலக்கங்களின்மேலும் புள்ளடியிட்டு தமிழ் காங்கிரஸின் வெற்றியையும் கூட்டமைப்பின் வெற்றியையும் தமிழினத்தின் வெற்றியையும் உறுதிப்படுத்துங்கள்.**

த.வி.கூ. X

1 5 8

**இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடுக.**

தமிழர் தாகம் சுதந்திரதாயகம்

யாழ். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கிளை.

R/N/0505

Jewellers மற்றும் Gems விற்பனையாளர்களின் இணைய விபரக்கொத்து

WWW.LANKAJEWELLERS.COM

The gateway to Sri Lanka Jewellers & Gem Exporters

விபரங்களுக்கு:

Web Developers
386/10,1/1 Galle Road Ratmalana
Tele: 077-377856, 072-425974, 072-430051
E-Mail: sales@globalsols.com


## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள்



நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கும் தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இம் முறை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் சென்று தேர்தல் பிரசாரம் நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்ட தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்களான அ. செல்வேந்திரன், பிரசன்னா ஆகியோர் கொக்கட்டிச்சோலை சென்றிருந்த சமயம் பிரசித்தி பெற்ற ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு செய்து விட்டு வருவதை படத்தில் காணலாம்.

படங்கள்: ஆர். துரைரத்தினம்



கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்துக்கு அருகில் நடைபெற்ற தமிழர் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம்.


பலர் அறிந்த உண்மையை நீங்கள் இன்னும் அறியவில்லையா?

Accredited by National Gem & Jewellery Authority

ARUL Jewellers 3 அருள்

3, Sea Street, Colombo 11. T.P. 43-531



பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2001

யாழ் மாவட்டம்

பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் குரல்



சமாதானத்துக்கான எம் இனத்தின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வாக்களியுங்கள்

தி. மகேஸ்வரன்

முதன்மை வேட்பாளர்

X 4



நாடாளுமன்றத் தேர்தல் – 2001

பதுளை மாவட்டம்

சிந்தை எல்லாம் மீன் சின்னம்
சென்னனின் வெற்றிச் சின்னம்



X

வீரமுண்டு தோள்களுண்டு
சாரமிக்க இதயமுண்டு
திரமிக்க சென்னனுக்கு
சலியாத அவர் தொண்டும்
நமக்குண்டு

சென்னன் வெற்றி செந்தமிழன் வெற்றி



14

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் – 2001

மனோ கணேசன்

கொழும்பு மாவட்ட தமிழரின் உரிமைக் குரல்

